# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

# MANONMAIAM SUNDARANAR UNIVERSITY

TIRUNELVELI

## தொலைநெறித் தொடர்கல்வி இயக்ககம்

## Directorate of Distance and Continuing Education

**முனைவர். க. நாகேஸ்வரி,**

உதவிப் பேராசிரியை, தமிழ்த்துறை,

தெ. தி. இந்துக்கல்லூரி,

நாகர்கோவில்.

# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

# தொலைநெறித் தொடர்கல்வி இயக்ககம்



| எண் | பாடங்கள் | பக்க எண் |
|---|---|---|
| 1 | பாடம் 1 – நாட்டுப்புற இயலின் வகைப்பாடு, நாட்டுப்புறவியலும் பிறவியலும் | 5 |
| 2 | பாடம் - 2 நாட்டுப்புறப் பாடல்கள் | 31 |
| 3 | பாடம் - 3 நாட்டுப்புறக்கதைகள் வகைப்பாடு | 57 |
| 4 | பாடம் - 4 பழமொழிகள் மற்றும் விடுகதைகள் | 81 |
| 5 | பாடம் - 5 புராணக்கதைகள் | 116 |

**முதலாமாண்டு**

**முதற்பருவம்**

**துணைமைப் பாடம்**

நாட்டுப்புறவியல் - 1

**நோக்கம் :** நாட்டுப்புறவியலைப் பற்றி அறியச் செய்தல்

**பயன் :** மக்களின் வாழ்க்கை முறைகளையும், பண்பாட்டையும், நாட்டுப்புற இலக்கியங்கள் வழி அறிந்து கொள்ளுதல் நாட்டார் இலக்கியங்களைத் தொகுக்கவும், அவற்றைப் பாதுக்கவும் ஆர்வத்தை ஏற்படுத்துதல்.

**அலகு – 1** **10 மணி நேரம்**

நாட்டுப்புறவியல் விளக்கம் - வகைப்பாடு – நாட்டுப்புற இயலும் பிறஇயலும் - நாட்டுப்புறவியல் கோட்பாடுகள் - வரலாற்றுப் புவியியல் கோட்பாடு வரலாற்று மீட்டுருவாக்கக் கோட்பாடு அமைப்பியல் கோட்பாடு, உளவியல் கோட்பாடு

**அலகு – 2** **5 மணி நேரம் (4L + 1T)**

நாட்டுப்புறப்பாடல்கள வகைப்பாடு – தாலாட்டுப்பாடல்கள், குழந்தைப் பாடல்கள், காதற்பாடல்கள், தொழிற்பாடல்கள், கொண்டாட்டப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள்

**அலகு – 3** **10 மணி நேரம்**

நாட்டுப்புறக்கதைகள் வகைப்பாடு, நாட்டுப்புறப் கதைப்பாடல்கள் - தமிழகக் கதைப்பாடலின் தோற்றமும் வளர்ச்சியும் - மரபும் தன்மையும் - கதைப்பாடல் - கதைப்பாடலின் மூலம் அறியலாகும் செய்திகள்

**அலகு – 4** **10 மணி நேரம்**

பழமொழிகள் - வகைப்பாடு – பழமொழியின் தன்மை – அமைப்பு கருப்பொருள், நடையியல் ஆய்வு – பழமொழியும் தமிழ் இலக்கியங்களும் விடுகதைகள் : விளக்கம் - வகைகள், சூழல், கருப்பொருள், நடையியல் ஆய்வு – பழமொழிக்கும் விடுகதைக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள்.

**அலகு – 5**

புராணக்கதைகள் - விளக்கம் - புராணக்கதை ஆய்வு – தமிழ்ப்புராணக்கதை வகைகள்

**பாடநூல்**

**நாட்டுப்புற இயல் ஆய்வு**

டாக்டர் சு. சக்திவேல்

மணிவாசகர் பதிப்பகம்,

8/7, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை – 600 108

**பார்வை நூல்கள்**

1. **நாட்டுப்புற இயல்**

   டாக்டர். ஆறு. இராமநாதன்,

   மணிவாசகர் பதிப்பகம், சென்னை

2. **நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள்**

   டாக்டர். தே. லூர்து,

   நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்,

   தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி,

   பாளையங்கோட்டை – 627 002

**குறிப்பு**

சரியான விடையைத் தேர்வு செய்யும் வினா பாடநூலிலிருந்து மட்டும் கேட்கப்பட வேண்டும்.

# பாடம் - 1

# நாட்டுப்புறவியல்

## நாட்டுபுறவியல்

மனித இனம் தோன்றிய அன்றே நாட்டுப்புற இலக்கியங்களும தோன்றிவிட்டன எனக் கருதலாம். மண்ணின் மைந்தர் தம் மனக்கருவறையில் கருக்கொண்டு உருப்பெற்று உயிர் பெற்று உலா வரும் உள்ளத்தின் உண்மையான வெளிப்பாடுகளே நாட்டுப்புற இலக்கியங்கள்.

நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்களையும் பண்பாடுகளையும் நம்பிக்கைகளையும் இலக்கியங்களையும் ஆராயும் இயலே நாட்டுப்புறவியலாகும். ஒரு நாட்டின் வாழ்வையும், வரலாற்றையும் குறையையும் நிறையையும் தெளிவாகக் காட்டுவன நாட்டுப்புற இலக்கியங்கள். மக்களின் பண்பாடு, பழக்கவழக்கங்கள், பழமையான எண்ணங்கள் ஆகியவற்றை வெளிப்படையாகக் காட்டும் கண்ணாடியாகும்.

Folklore என்பது Folk, Lore என்ற இரு சொற்கள் இணைந்ததாகும். 19-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் ‘Folk’ என்ற சொல் விவசாய மக்களைக் குறித்து, பின்னர் படிப்பறிவில்லாத நாட்டுப்புற மக்களைக் குறித்தது. பொதுவான தொழில், மொழி, சமயம் முதலியவற்றைப் பின்பற்றும் குழுவை ‘Folk’ என்பர். பொதுவாக கிராமப்புற படிப்பறிவில்லாத, மக்களைக் குறிக்கும். ‘Lore’ என்பதற்கு ‘மரபுச் செய்தித் தொகுதி’ என்றும் ‘வழக்காறு’ என்றும் பொருள் கொள்ளலாம். Folklore என்பது நாட்டுப்புற மக்களின் அறிவு எனப் பொருள்படும். நாட்டுப்புற வழக்காற்றை Folklore என்றும் நாட்டுப்புற

வழக்காற்றை ஆராயும் ஆய்வை ‘Folkloristics’ என்றும் கூறலாம். எல்லா ஐரோப்பிய மொழிகளிலும் இச்சொல்லின் ஆதிக்கத்தைக் காணலாம். ஜெர்மன் மொழியில் ‘die folklore’ என்றும் பிரெஞ்சு மொழியில் ‘lefolklore’ என்றும் இத்தாலிய மொழியில் ‘ifolklore’ என்றும் ஸ்பானிஷ் மொழியில் ‘el folklore’ என்றும் ரஷ்ய மொழியில் ‘Folklore’ என்றும் வழங்கி வருவதைக் காணலாம். இம்மொழிகளிலெல்லாம் இச்சொல் வழக்கிற்கு வருமுன் வேறு சொற்கள் பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

வில்லியம் பாஸ்கம் (William Bascom) என மானிடவியல் பேரறிஞர் ‘Verbal Art’ என்ற சொல்லை உருவாக்கினார். Verbal Art என்பது வாய்மொழிக்கலை என்றும் Non-Verbal Art என்பது வாய்மொழிச்சாரா கலை என்றும் கூறலாம். வாய்மொழி இலக்கியத்தில் அடங்காத இசை, மந்திரங்கள் முதலியவற்றை எதில் அடக்குவது என்று எண்ணியே Verbal Art என்ற தொடரை உருவாக்கினார்.

## நாட்டுப்புற இயலின் வகைப்பாடு

எந்த அறிவியல் ஆய்விலும் சேகரித்தலும் வகைப்படுத்தலும் ஆய்வு செய்தலும் இன்றியமையாதவையாகும். இம் மூன்று முறைகளும் தன்னிச்சையானவை என்றாலும் ஒன்றையொன்று சார்ந்தவைகளாகும். வகைப்படுத்துதல் மிகமிக இன்றியமையாததொன்றாகும். வகைப்படுத்தலைச் சிறப்பாக செய்யின் ஆய்வு சிறப்பாக அமையும்.

நாட்டுப்புறவியலை இரண்டு பெரும் பிரிவாக பிரிக்கலாம்.

**1. நாட்டுப்புறவியல்**

| **நாட்டுப்புற இலக்கியம் (Folk Literature)** | **நாட்டுப்புறக்கலை, நம்பிக்கைகள் (Folk Arts, Beliefs etc.)** |
|---|---|
| 1. நாட்டுப்புறப் பாடல்கள் (Folk Songs) | 1. நாட்டுப்புறக் கலைகள் (Folk Arts) |
| 2. நாட்டுப்புறக் கதைகள் (Folk Tales) | 2. நாட்டுப்புறக் கைவினைப் பொருட்கள் (Folk Crafts) |
| 3. நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் (Folk Ballads) | 3. நாட்டுப்புற நம்பிக்கைகள் (Folk Beliefs) |
| 4. பழமொழிகள் (Proberbs) | 4. நாட்டுப்புற பழக்க வழக்கங்கள் (Folk Customs and Habits) |
| 5. விடுகதைகள் (Riddles) | 5. நாட்டுப்புறத் தெய்வங்கள் (Folk Gods) |
| 6. புராணங்கள் (Myths) முதலியன | 6. நாட்டுப்புற விளையாட்டுக்கள் (Folk Games) |
| | 7. நாட்டுப்புற மருத்துவம் (Folk Medicine) முதலியன |

**2. நாட்டுப்புறவியல் (வில்லியம் பாஸ்கம் வகைப்பாடு)**

| | |
|---|---|
| வாய்மொழிக் கலை (Verbal Art) | வாய்மொழி சாராக் கலை (Non Verbal Art) |

முன்னர் பகுத்ததையே மானிடவியல் பேரறிஞர் வில்லியம் பாஸ்கம் அவர்கள் வாய்மொழிக்கலை என்றும் வாய்மொழிச் சாராக்கலை என்றும் பகுக்கின்றனர்.

**3. நாட்டுப்புறவியல் (பிருண்வார்ட் வகைப்பாடு)**

- வாய்மொழிக் கலை (Verbal Art)
- ஓரளவு வாய்மொழிக் கலை (Partly Verbal Art)
- வாய்மொழி சாராக்கலை (Non Verbal Art)

**4. நாட்டுப்புறவியல் (போக்ஸ் வகைப்பாடு)**
**(Boggs Classification)**

- செயல் வகை (Action Type)
- அறிவியல் வகை (Science Type)
- மொழியியல் வகை (Linguistic Type)
- இலக்கிய வகை (Literature Type)

5. **நாட்டுப்புறவியல் (பிரான்சிஸ் லீ உட்லி வகைப்பாடு)**
**(Francis le Utley Classfication)**

- இலக்கியம் (Literature)
- நம்பிக்கைகள் (Beliefs)
- கைவினைப் பொருட்கள் (Crafts)
- மொழி அல்லது நாட்டுப்புறப் பேச்சு (Language or Folk Speech)

**6. நாட்டுப்புறவியல் (ரிச்சார்ட் டார்சன் வகைப்பாடு)**
**(Richird Dorson Classification)**

- உடல் செயல் சார் நாட்டுப்புறவியல் (Physical Folklore)
- உடல் செயல் சாரா நாட்டுப்புறவியல் (Non-Physical Folklore)

7. சில நாட்டுப்புறவியல் அறிஞர்கள் நாட்டுப்புறவியலை இரண்டு பெரும்பிரிவாக பிரிக்கின்றனர்.

**நாட்டுப்புறவியல்**

**பொருள்சார் நாட்டுப்புறவியல் (Material Folklore)** | **பொருள்சாரா நாட்டுப்புறவியல் (Non-material Folklore)**

8. சில நாட்டுப்புறவியல் அறிஞர்கள் நாட்டுப்புறவியலை நான்கு பிரிவாக வகைப்படுத்துகின்றனர்.
    1. நாட்டுப்புற இலக்கியம்
    2. நாட்டுப்புற பழக்கங்கள்
    3. நாட்டுப்புறக் கலைகள்
    4. நாட்டுப்புற அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்

## நாட்டுப்புறவியல் ஆய்வின் வளர்ச்சி

நாட்டுப்புறவியல் ஆய்வின் வளர்ச்சியைக் கீழ்க்கண்டவாறு விளக்கலாம்.

சேகரிப்பு நிலை (Collection Stage) → விளக்க நிலை (Description Stage) → ஒப்பாய்வு நிலை (Comparitive Statge) → அமைப்பியல் ஆய்வுக்கு முன்னைய நிலை (Pre-Structural Stage) → அமைப்பியல் ஆய்வுக்கு பின்னைய நிலை (Post Structural Stage)

இத்துறை தனியொரு துறையாக வளர்ந்தால் பல்வேறு துறையினருக்கும் பயன்படுத்துவதோடு தமிழகப் பண்பாட்டு வரலாற்றை மீட்டுருவாக்கம் (Reconstruction) செய்யப் பெரிதும் துணை புரியும்.

**நாட்டுப்புறவியல்**

- நாட்டுப்புற இலக்கியம் (Folk Literature)
  1. நாட்டுப்புறப் பாடல்கள்
  2. கதை
  3. கதைப்பாடல்
  4. பழமொழி
  5. விடுகதை
  6. புராணம்

  முதலியன
- நாட்டுப்புறப் பழக்கங்கள் (Folk Practices)
  1. தினந்தோறும் பின்பற்றும் பழக்கங்கள் (Day-do-day Practices)
     1. நம்பிக்கைகள்
     2. வழக்கங்கள்
     3. சடங்குகள்
     4. விழாக்கள்
  2. அவ்வப்போது நிகழ்வது (Occasional)
     1. நாட்டுப்புற விளையாட்டு முதலியன
- நாட்டுப்புறக் கலைகள் (Folk Arts)
  1. நிகழ்கலைகள் (Performing)
     1. ஆடல்
     2. நடனம்
     3. நாட்டுப்புற நாடகம்
     4. சைகைகள் முதலியன
  2. நிகழாக் கலைகள் (Non-Performing)
     1. வண்ண ஓவியம்
     2. சிற்பங்கள்
     3. கைவினைப் பொருட்கள்
     4. வரையும் படங்கள்
     5. ஆடை அணிகலன்கள்

     முதலியன
- நாட்டுப்புற அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் (Folk Science)
  1. நாட்டுப்புற மருத்துவம்
  2. நாட்டுப்புறத் தொழில்நுட்பவியல்
  3. நாட்டுப்புறக் கட்டிடக்கலை

## நாட்டுப்புறவியலும் பிறவியலும்

நாட்டுப்புறவியல் இன்று தனியொரு துறையாக அறிவியல் துறையாக வளர்ந்துள்ளது. இத்துறை ஆய்வு இன்று பல்துறை ஆய்வாக (Interdiciplinary Study) மலர்ந்துள்ளது. ஒரு நாட்டு மக்களின் நாகரிகத்தை, பண்பாட்டை, பழக்க வழக்கங்களை, வரலாற்றை, நாட்டு

நடப்பை உண்மையான முறையில் படம் பிடித்துக் காட்டுவனவே நாட்டுப்புறவியல். நாட்டுப்புறவியல் துறை மானிடவியல், சமூகவியல், உளவியல், தத்துவ இயல், மொழியியல், வரலாறு முதலிய பலதுறைகளோடும் பின்னிப் பிணைந்துள்ளது. எனவேதான் நாட்டுப்புற மக்களின் வழக்காறுகளை ஆராய்பவனைச் சமூக விஞ்ஞானி (Socla Scientist) என்கின்றனர். மனித சமுதாயத்தில் காணப்படும் அனைத்து வழக்காறுகளையும் நாட்டுப்புறவியல் பேரறிஞன் ஆராய்வதால், நாட்டுப்புறவியல் துறை அனைத்துத் துறைகளோடும் தொடர்பு கொண்டுள்ளது.

நாட்டுப்புற மக்களின் வழக்காற்றின் மூலம் சமூக-பண்பாட்டுக் கூறுகளை ஆராய்கின்றோம். மானிடவியலாரும் சமூகவியலாரும் பண்பாட்டினைப் பற்றி, பல கோணங்களில் ஆராய்கின்றனர். ஓர் இனத்தாரைப் பற்றி ஆராயும் மானிடவியல் பேரறிஞன், அவர்களது பழக்க வழக்கங்கள், பண்பாடு, நாகரிகம் முதலியவற்றைக் காட்டும் அவர்களது நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள், நடனங்கள் முதலியவற்றைப் பற்றியும் அறிந்திருந்தால் தான் அவர்களது இனவியல் வாழ்வு முறையை (Etholigical) தெளிவாகவும் விரிவாகவும் வரையறுத்துக் கூற முடியயும். வரலாற்றை அறியவும் பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்யவும் சமூக அமைப்பை ஆராயவும் நாட்டுப்புறவியல் பெருந்துணை புரிகிறது. புழங்கும் பொருளால் அறியப்படும் பண்பாட்டினை (Material Culture) இவ்வியல் மிகத் துல்லியமாகக் காட்டுகின்றது. கதைப்பாடல்களில் காணப்படும் வரலாற்றுக் குறிப்புகள் வரலாற்றுப் பேரறிஞனுக்கு உதவியாக உள்ளன. புராணவியல் (Mythology) நாட்டுப்புறவியலுக்கும் தொன்மையான மதத்திற்கும் (Primitive Religion) இடையேயுள்ள நெருக்கமான உறவைக் காட்டுகின்றது. நாட்டுப்புற மக்களது சமய நம்பிக்கைகளைப் பற்றி தெள்ளத் தெளிவாக அறிகிறோம். உளவியல் பேரறிஞன் சிக்மண்ட்

பிராய்டு ஒடிபஸ் மனப்பாங்கினைக் காட்டப் புராணங்களையும் நாட்டுப்புறக் கதைகளையும் ஆராய்ந்தார். நாட்டுப்புற இயலை மக்களது உணர்ச்சிகளையும் மனப்பாங்கினையும் எடுத்தியம்பும் இயல் என உளவியல் பேரறிஞர்கள் கூறுகின்றனர். நாட்டுப்புற இலக்கியங்கள் அனைத்தும் பேச்சு மொழியில் அமைந்திருப்பதால் இன்றைய
அனைத்தும் பேச்சு மொழியில் அமைந்திருப்பதால் இன்றைய
மொழியியலாளருக்கு அப்பேச்சு மொழி ஆய்வுக்குப் பயன்படுகின்றது.

**நாட்டுப்புறவியலும் மானிடவியலும்**

**(Folklore and Anthropology)**

தொடக்க காலத்திலிருந்து இன்று வரை மனிதனைப் பற்றிய உருவத்தோற்ற பண்பாட்டு வளர்ச்சியை ஆராய்வதே மானிடவியலாகும். தொல் பொருள் மனிதனைப் பற்றி ஆராயும் மானிடப் பரிணாமம் (Human Evolution) இனக்குழுக்களின் உருவத் தோற்றத்தை ஆராயும் உருவத்தோற்ற மானிடவியல் (Physics Anthropology), வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட மனிதனின் சமூகவாழ்க்கையை ஆராய்கிற தொல்பொருளியல், மனிதப்பண்பாடு அதன் மூலக்கூறுகள், அமைப்பு, மாற்றங்கள் போன்றவற்றை ஆராயும் பண்பாட்டு மானிடவியல் அல்லது சமூக மானிடவியல் (Culture or Social Anthropology) போன்றவை அதன் பிரிவுகளாகும். பொதுவாக மானிடவியல் எழுத்தறிவிற்கு முற்பட்ட மக்களுடைய பண்பாட்டினை ஆராய்வதுடன் அமைகிறது. மனிதனுக்கு இருவகையான பாரம்பரியம் உண்டு ஒன்று உயிரியற் பாரம்பரியம் (Biological Inheritance) மற்றது சமூகப் பாரம்பரியம் (Social Inheritance). சமூகப் பண்பாட்டு மானிடவியலில் மனிதனின் வாழிடம், கால்வழி, தொழில், சமூக பாராம்பரியம் (Social Inheritance) சமூகப் பண்பாட்டு அமைப்பு, இரத்த உறவுமுறை, தனிமனித வாழ்வின் படிகளான பிறப்பு, பூப்பு, திருமணம், இறப்பு என்பன, சமூக வாழ்வில்

பெரும் பங்கு, குடும்பம், சொத்துரிமை, சமயம், சடங்குகள், நம்பிக்கைகள் என்பனவற்றை ஆயும் ஆய்வினையே நாட்டுப்புறவியலும் ஆராய்கின்றது. நாட்டுப்புறவியல் மானிடவியலின் ஒரு பிரிவாக இருப்பதுடன் பல்வேறு மானிடவியல் கூறுகளையும் தம்முன் கொண்டு விளங்குகிறது.

ஆரம்ப காலத்தில் மொழியியலை எவ்வாறு மானிடவியலாளர்கள் வளர்த்தார்களோ அதே போன்று நாட்டுப்புறவியலையும் மானிடவியல் பேரறிஞர்களே முதலில் வளர்த்தனர். நாட்டுப்புற இயலும், மானிடவியலும் மிக நெருங்கிய தொடர்புடையவையாகும். இரண்டிற்கும் ஓர் எல்லை வகுப்பது மிகவும் சிரமமானதாகும். இவ்விரண்டு இயல்களும் மனிதப் பண்பாட்டை ஆராய்வனவாகும். ஆன்ட்ரு லாங்க் (Andrew Lang) இவ்வியலை மரபு எச்சமாகக் கருதுகின்றார். மக்களது நம்பிக்கைகள், பழங்கதைகள், வழக்கங்கள் எச்சக் கூறுகளாகக் கருதப்படுகின்றன. நாட்டுப்புறவியல் மரபு வழி சமூக அமைப்பிலும் புழங்குபொருள் பண்பாட்டிலும் கவனம் செலுத்துகின்றது. நாட்டுப்புறவியலாளன் பிறப்பு முதல் இறப்பு (தாலாட்டு முதல் ஒப்பாரி) வரையிலுள்ள சடங்குகளை நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் ஆராய்கிறான். பண்பாட்டு மானிடவியலாளன் சமூக அமைப்பின் கீழ் இவற்றை ஆராய்கிறான். மானிடவியலாளன் சமூக அமைப்பின்கீழ் இவற்றை ஆராய்கிறான். மானிடவியலாளர் ஓர் இனத்தின் பண்பாட்டினை ஆராயும்போது அவ்வின மக்களிடையே காணப்படும் பழங்கதைகள், நம்பிக்கைள் முதலியவற்றை ஆராயாவிட்டால் அவரது ஆய்வு முழுமை பெறாது. மரபு வழிப்பட்ட நம்பிக்கைகள், கலை, கைவினைப் பொருட்கள், சடங்குகள், பழக்கவழக்கங்கள் முதலியன ஆய்வுகள் நாட்டுப்புறவியலுக்கும், மானிடவியலுக்கும் பொதுவானவையாகும். நாட்டுப்புறவியல் ஓர் இனத்தின் அல்லது குறிப்பிட்ட மக்களின் பண்பாட்டை முழுமையாக ஆராய்வதில்லை. இதுவே பண்பாட்டு மானிடவியலுக்கும் நாட்டுப்புறவியலுக்குமுள்ள வேறுபாடு ஆகும்.

பழக்கவழக்கம், நம்பிக்கை, சடங்குகளில் காணப்படும் எழுதப்படாத மரபுகளை நாட்டுப்புறவியல் ஆராய்கின்றது.

மானிடவியலை முழுமையானதாகக் (Whole) கருதினால், நாட்டுப்புறவியலை அதன் பகுதியாகக் (Part) கருதலாம். ஓர் இனத்தின் பண்பாட்டைப் பற்றி அறிய வேண்டுமானால், அவ்வினத்தாரிடையே நிலவும் பாடல்கள், கதைகள், கதைப் பாடல்கள், நம்பிக்கை, பழக்க வழக்கங்களையும் ஆராய வேண்டும். நாட்டுப்புற இயலின் செயல், முறையில் மானிடவியலாளர் கவனம் செலுத்துகின்றனர். கிரீம் சகோதரர்கள் 1819-ஆம் ஆண்டில் வெளியிட்ட Household Tales என்பவற்றைத் தொடர்ந்து, நாட்டுப்புறவியல் அறிவியலாகக் கருதப்பட்டது. புராணக் கதையின் கூர்தலறக் கொள்கை பற்றி டெய்லர் ஆராய்ந்துள்ளார். லாங்க் என்பாரும் இக்கொள்கையை ஆதரிக்கின்றார். நாட்டுப்புற இயலின் தோற்ற வளர்ச்சியைப் பற்றிதான் முதலில் ஆராய்ந்தனர். ஆனால் இன்று உயிரியல் கோட்பாட்டிலும் (Evolution) பரவுதலிலும் (Diffusion) ஈடுபாடு காட்டுகின்றனர். புராணக் கதைகளும், கதைகளும் முறையே ஆவியுலகக் கோட்பாட்டினையும் (Animism) குலக்குறி கோட்பாட்டினையும் (Totemism) விளக்குகின்றன. பண்பாட்டு மானிடவியலாளர்கள் பண்பாட்டு விதிகளைப் பயன்படுத்தி நாட்டுப்புறவியலை விளக்குகின்றனர். மரபுகளை வகைப்படுத்துதல், பகுப்பாய்வு செய்தல் போன்ற நாட்டுப்புறவியலாளரின் ஆய்வு மானிடவியலாளருக்குப் பெரும் துணையாக உள்ளது.

நாட்டுப்புறவியலுக்கும், மானிடவியலுக்கும் உள்ள தொடர்பினால், மானிடவியல் பள்ளியே (Authropological School) உருவாகியுள்ளது. மானிடவியல் பள்ளி பண்பாட்டினை ஆராய்வதில் முக்கியப் பங்கு வகிக்கின்றது. பண்பாட்டு ஒற்றுமையைப் புலம் பெயர்வு மூலமோ, கடன் வாங்கல் மூலமோ, மர உரிமையாக அடைதல் மூலமோ விளக்கலாம்.

மானிடவியல் பேரறிஞர்களும் நாட்டுப்புறவியல் பேரறிஞர்களும் பண்பாட்டினையே மையமாக வைத்து ஆராய்கின்றனர். நாட்டுப்புற வளர்ச்சியில் மானிடவியலாளர்களுக்கே பெரும் பங்கு எனின் அது மிகையாகாது. நாட்டுப்புறவியல் கோட்பாடான வரலாற்றுப் புவியியல் கோட்பாடு மானிடவியல் ஆய்வுக்கும் பயன்படுகிறது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

## நாட்டுப்புற இயலும் சமூகவியலும்

சமூகத்தைப் பற்றிய அறிவியல் சமூகவியல் எனப்படும். 'சோஷியாலஜி' என்ற சொல் சொஸைடாஸ் (சமூகம்) என்ற இலத்தீன் சொல்லிலிருந்தும் 'லோகாஸ்' (படிப்பு) என்ற கிரேக்கச் சொல்லினின்றும் உருவானது. ஆகஸ்ட் காம்டே (கி.பி. 1798 – 1857) என்பவர் தாம் முதன்முதலில் இச்சொல்லைப் பயன்படுத்தினார். தனி மனிதனையும் மனித சமுதாயத்தையும் ஆராய்வதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளது. நம்பிக்கைகளும் வழக்காறுகளும் நடைமுறைகளும் சமூக நிறுவனங்களும் ஆராயப்படுகின்றன. சமூக நிறுவனங்கள் சமயம், அரசியல், பொருளாதாரம், குடும்பம் இவற்றுடன் நெருங்கிய தொடர்புடையதாகும். இவற்றின் இயக்கத்தையும் இயக்காற்றாலையும் ஆராய்வதே சமூகவியலின் சில கூறுகளையும் சமூகவியல் அடிப்படையில் காண்கின்றனர்.

நாட்டுப்புறவியலாரும் சமூகவியலாளரும் சமூக அமைப்பினைப் பற்றி ஆராய்கின்றனர். பழமொழிகளும், கதைகளும் சாதி அடிப்படையிலமைந்த சமூக உறவை விளக்குகின்றன. சிக்கலான மனப்பான்மையைக் (Complex Attitudes) குறித்து ஆராய, நாட்டுப்புற இலக்கியங்கள் உதவுகின்றன. சமூகத்தில் காணப்படும் பெரும்பாராம்பரிய மரபு (Great Tradition) சிறு பாரம்பரிய மரபு (Little Tradition) முதலியவற்றிற்கிடையே உள்ள சிக்கலான உறவை

நாட்டுப்புறவியல் விரிவாக விளக்கிக் காட்டுகிறது. சமூகவியல் வேளாண்மைத் தொழில் செய்வோரைப் பற்றி ஆய்வதில்லை. ஆனால், நாட்டுப்புறவியல் நாட்டுப்புற மக்களான விவசாயப் பெருங்குடி மக்களைப் பற்றித் தான் முழுக்க முழுக்க ஆய்கிறது. நாட்டுப்புற மக்களிடையே காணப்படும் பாடல்கள், கதைகள், பழமொழி, விடுகதைகள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் முதலியவற்றைக் கொண்டு நாட்டுப்புறவியல் பேரறிஞன் அவர்களது வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுகிறான். இந்நிலையில் நாட்டுப்புறவியல் ஆய்வாளன் சமூகவியலாளர்க்கும் மானிடவியலாளர்க்கும் தரவுகளை (Data) அளிக்கிறான். நகர்ப்புற மக்களுக்கும் நாட்டுப்புற மக்களுக்கும் இடையே பண்பாடு, பண்டமாற்று முதலிய அனைத்திலும் கொள்வினை, கொடுப்புவினை உண்டு.

சமூக வாழ்க்கையைப் பற்றி முழுமையாக அறியக் குடும்பம், வழக்கம், ஒழுக்கம், மதம் போன்றவற்றை ஆராய்தல் அவசியம். சமூகவியலாளர் இதனை சமூகத்தின் நிறுவன அமைப்பு என்பர். குடும்பம் சமூகத்தின் மூலக்கூறு என்பது அனைவரும் அறிந்ததொன்றாகும். குடும்ப அமைப்புகளைக் கொண்டு கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் என இருவகைப் படுத்தலாம். தாலாட்டுப்பாடல்கள் மூலம் குடும்ப உறவு முறைகளையும் சடங்குகளையும் அறிந்து கொள்ளலாம். இன்றைய சமுதாயத்தில் கூட்டுக்குடும்ப அமைப்பு மறைந்து தனிக்குடும்ப அமைப்பை நோக்கிச் செல்வதை நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் அறிகிறோம். பலதார மணம் அருகி ஒருதார மணத்தை நோக்கிச் செல்லும் சமுதாயத்தையும் நாட்டுப்புறவியல் மூலம் அறிகிறோம். வாழ்வுத் தொடர்பான பழக்க வழக்கங்கள், சடங்குகள், சாவுத் தொடர்பான பழக்க வழக்கங்கள், சடங்குகள் முதலியவற்றையும் நாட்டுப்புறவியல் தெள்ளத் தெளிவாக விளக்குகிறது. சின்னத்தம்பி புகழைக் கண்டு மேல் சாதிக்காரர்கள் கொன்ற சாதிப்பிரச்சினையையும் பெண்களுக்கு சொத்துரிமை இல்லாத நிலையைக் காட்டும்

நல்லதங்காள் கதையையும், வாரிசு உரிமையைக் காக்க மகனைக் கொல்கின்ற சின்னநாடான் கதையையும் சமூகத்தில் காண்கிறோம். ஒவ்வொரு சாதியினரின் இயல்புகளையும் பழமொழி படம் பிடித்துக் காட்டுகின்றது. நாட்டுப்புறப் பாடல்கள் சமுதாயத்தைப் பிரதிபலித்துக் காட்டுவனவாக உள்ளன. நாட்டுப்புறக் கதைகள் சமூகத்தைய்ும, அதன் உறுப்பான குடும்பத்தையும் அவற்றில் நிலவும் உறவுகளையும் பிரச்சினையையும் சுட்டிக் காட்டுகின்றன. கிராமங்கள் அனைத்தும் சாதி அடிப்படை சமுதாய அமைப்பு என்பது நாட்டுப்புறவியல் மூலம் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. சமுதாயக்கிளர்ச்சியையும் நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் அறிகிறோம். நாட்டுப் புறவியல் சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பது தெள்ளத் தெளிவாக விளங்குகிறது.

## நாட்டுப்புறவியலும் வரலாறும்

கதைகளும், கதைப் பாடல்களும் பல வரலாற்றுச் செய்திகளை நமக்கு அளிக்கின்றன. கடந்த காலத்தைப் பற்றிய எந்தச் செய்தியும் பின்னர் வரலாறாகப் பரிணமிக்கின்றது. எனவே தான் ‘இன்றைய செய்தி நாளைய வரலாறு’ எனக் கூறுகின்றனர். ஆப்பிரிக்க நாட்டு வரலாற்றின் ஒரு பகுதி வாய்மொழியாக வழக்கப்படும் கதைப் பாடல்களை மீட்டுருவாக்கம் செய்ததாகும். வரலாறும் நாட்டுப்புறவியலும் ஒன்றொடொன்றுப் பின்னிப் பிணைந்திருக்கின்றன.

மனிதனுடைய கடந்த காலத்தைப் பற்றிய நிகழ்ச்சிகளைக் கூறுவதால், நாட்டுப்புறவியலை வரலாற்று அறிவியல் (Historical Science) என்று கூறுவர். வரலாற்றிற்குக் கல்வெட்டுக்களும் செப்புப் பட்டயங்களும் எழுத்திலக்கியமும் சான்றாகத் திகழ்வன போல, நாட்டுப்புற இலக்கியங்களும் சான்றாகத் திகழ்கின்றன. குறிப்பாக நாட்டுப்புறவியலுக்குப் பண்பாட்டு வரலாறு நெருங்கிய தொடர்புடையதாகும். வரலாறும் நாட்டுப்புறவியலும் மக்களுடைய எழுதப்படாத மரபுகளைப் பற்றி ஆராய்கின்றன. வரலாற்றுப் பேரறிஞரும்

நாட்டுப்புறவியல் பேரறிஞரும் பண்பாட்டு வரலாற்று மீட்டுருவாக்கத்தில் (Reconstruction of Cultural History) அதிக ஈடுபாடு உடையவர்கள். இந்திய நாட்டுத் தொல் வரலாற்றையறிய i) மரபு ii) தொல் பொருள் ஆய்வு iii) ஒப்பு இலக்கியம் முதலியவற்றைச் சான்றுகளாகப் பயன்படுத்துகின்றனர். மரபு என்பது நாட்டுப்புறவியலுக்கும், வரலாற்றிற்கும் பொதுவானதாகும். வாய்மொழி மரபு நாட்டுப்புறவியலின் உயிர்நாடியாகும்.

நாட்டுப்புறக் கதைகள் மூன்று வகை வரலாற்றினை எழுதத் துணை புரிகின்றன.

i) நாட்டின் பொது வரலாறு

ii) வட்டார வரலாறு

iii) குடும்ப வரலாறு

நாட்டுப்புற இலக்கியங்கள் மூலம் ஒரு நாட்டின் வரலாற்றையும் அரசியல், சமூக வரலாற்றையும் அறிந்து கொள்ளலாம். கதைப்பாடல்களில் வரலாற்றுக் கதைப் பாடல்கள் (Historial Ballads) வரலாற்றையறிய பெருந்துணையாக உள்ளன. இராமப்பய்யன் கதைப் பாடல் (கி.பி. 1623 – 59) சடைக்கத் தேவனுக்கும் திருமலை நாயக்கரின் தளபதி இராமப்பயனுக்கும் நடந்த போரை விவரிக்கின்றது.

ஆங்கிலேய ஏகாதிபதியத்தை எதிர்த்த முதல் வீரன் கட்டபொம்மன் (கி.பி. 1761 – 1799) எனலாம். கட்டபொம்மன் கதைப் பாடல் மூலம் கட்டபொம்மன் கோட்டை கட்டிய வரலாறு, பாஞ்சாலங்குறிச்சிக்கும் எட்டையபுரத்துக்கும் ஏற்பட்ட பகைமை, ஆங்கிலேயருக்கும் கட்டபொம்மனுக்கும் ஏற்பட்ட மோதல், வெள்ளையம்மாளின் வீரம் அனைத்தும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

டாக்டர் நா. வானமாமலை அவர்கள் வரலாற்றுக் கதைப் பாடல்களில் துணைகொண்டு மூன்று வரலாற்றுக் கட்டங்களைச் சுட்டிக் காட்டுகிறார்.

1. பாண்டியர்களுக்கும் கன்னடியர்களுக்கும் போர் ஐவர் ராசாக்கள் கதை கன்னடியன் படைப்போர்.
2. மதுரை நாயக்கர்களும் மறவர்களும் போரிடல் இராமப்பய்யன் கதைப்பாடல்.
3. பாளையக்காரர்களும் பிரிட்டிஷ்காரர்களும் போரிடல் கட்டபொம்மன் கதைப்பாடல்.

வரலாற்றுக் கதைப் பாடல்கள் மூலம் நாட்டுப்புறவியல் வரலாற்றுத் துறையோடு கொண்ட தொடர்பினை நன்கு அறியலாம்.

## நாட்டுப்புறவியலும் உளவியலும்

'மனித நடத்தை' பற்றிய ஆய்வு உளவியல் எனப்படும். சமூக வாழ்வில் மனித உறவுகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கு உளவியல் அறிவு துணையாக அமைகிறது. உளவியல் முதலில் தனி தன் ஆன்மாவையும் பிறகு உள்ளத்தையும் பிறகு நனவு நிலையையும் இழந்து தற்போதைய நடத்தையைக் கைக் கொண்டிருக்கிறது என்று உளவியலுக்கு உட்வொர்த் (Woodworth) விளக்கம் தருகிறார். மனிதனைப் பற்றிய உண்மைகளை விளக்கும் அறிவியல் துறைகளுள் ஒன்றே உளவியல் என்பது ஜான்டியூபின் (John Dewey) கருத்தாகும். மனிதனின் ஒவ்வொரு நடத்தையும் ஏதோவொரு குறிக்கோளோடு அமைகிறது என்றும், மனிதனின் எல்லாவித நடத்தைகளையும் இயல்பூக்கங்களே ஆக்குகின்றன என்றும் வில்லியம் மக்டுகல் விளக்கம் தருகிறார். மனித நடத்தை இயல்பாக மரபினால் பெற்ற நடத்தை, மற்றொன்று சூழ்நிலையின் வாயிலாகக் கற்ற நடத்தை என இரு வகைப்படும். இயல்பாக மரபினால் பெற்ற நடத்தைக் கோலங்களே இயல்பூக்கங்கள் எனப்படுகின்றன. மனிதர்களின் எல்லாச் செயல்களுமே

வாழ்க்கை இயல்பூக்கம், இறப்பு இயல் பூக்கம் என்ற இரண்டு இயல் பூக்களின் அடிப்படையில் தான் இயங்குகின்றன என சிக்மண்ட் பிராய்ட் (Sigmund Freud) கூறுகிறார்.

நாட்டுப்புற இயல் மரபு எச்சங்களைப் பற்றி ஆராய்கிறது. பழமை ஆய்வில் இவ்வியல் நாட்டம் செலுத்துகின்றது. பழைய மரபில் புது மரபு பெறும் ஆக்கம் பற்றியும் பழைய மரபுகள் அழிவது பற்றியும் புது மரபுகள் தோன்றுவது பற்றியும் அவ்வாறு தோன்றும் போது ஏற்படும் மாற்றம் பற்றியும் ஆராய வேண்டும். நாட்டுப்புறவியலார் வழக்கங்களைப்பற்றி ஆராயும் போது உணர்ச்சிகளைப் பற்றியும் (Emotions) ஆராய வேண்டும். மரபெச்சங்களை ஆராயும் போது உளவியல் அடிப்படையிலும் மானிடவியல் அடிப்படையிலும் ஆராய வேண்டும். தனிப்பட்டவர்களது வழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள் ஆகியவைகள் மரபினால் பாதுகாக்கப்படுகின்றன. இவற்றை மரபு வழி என்றும், உளவியல் வழி என்றும் இருவகையாகப் பகுப்பர். மரபு வழிப் பழக்கங்களும் நம்பிக்கைகளும் சடங்குகளும் மக்களது வாழ்வில் பெரும் பங்கு வகிப்பதுடன் பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து வாழ்ந்து வளர்ந்து வருபவைகளாகும். உளவியல் வழியானது நம்பிக்கைகளின் தோற்றத்தைப் பற்றியும் அடிப்படைப் பற்றியும் ஆராய்கின்றது. மக்களது நடத்தையானது மரபு வழிப்பட்டதாகும். வழக்கங்கள் தனிப்பட்டவர்களது செய்கையினைக் கட்டுப்படுத்துகின்றன. பண்பாடு மக்களது நடத்தையினைத் தீர்மானிக்கின்றன. பண்பாடு மக்களது நடத்தையினைத் தீர்மானிக்கின்றது. கலை, புராணம், மரபு முதலியவற்றை நம் முன்னோரிடமிருந்து நாம் பெறுகிறோம். ஆப்ரஹாமும் ஒட்டரங்கும் (Abraham and Otta Rank) புராணவியலை உளவியல் பகுப்பாய்வு செய்துள்ளனர். கலைப்பொருட்கள், புராணங்கள் முதலியவை குறியீட்டை அறிவதற்குப் பெருந்துணை செய்கின்றன என உளவியலார் கருதுகின்றனர். நாட்டுப்புறக் கதைகள் மூலம் ஒரு

சமூகத்தின் பண்பாட்டையும் மக்களது உணர்வுகளின் வெளிப்பாட்டையும் குறியீட்டையும் அறிந்து கொள்ள உதவுகின்றன.

உடல் உழைப்பால் வேலை செய்யும் உழைக்கும் வர்க்கத்தினர் உடல் சோர்வு மட்டுமின்றி உளச்சோர்வும் அடைகின்றனர். சோர்வையும் துன்பத்தையும் மறக்க இசைக்கின்றனர். சிற்றின்பத்தையும் இணைத்துப் பாடும்போது ஏதோ ஒரு வகையில் சுய இன்பம் பெறுகின்றனர். இஃது துன்பத்தைக் குறைக்கிறது என்பதைச் சிக்மண்ட் பிராய்டு அவர்கள்,'லிபிடோ' (Libido) என்ற கோட்பாட்டின்படி விளக்குகின்றார்.

மனித இனம் ஆரம்ப காலத்தில் இயற்கையுடன் போராட வேண்டியிருந்தது. இயற்கையைப் போல் செய்தால் இயற்கை தனக்குப் பணிந்து தன் ஏவல் கேட்கும் என மனிதன் நினைத்தான். இயற்கை தமக்கு உதவி செய்ய வேண்டுமாயின், தாமும் இயற்கையைப் போலவே நடக்க வேண்டுமென்றும், தாம் செய்வதைப் பார்த்து அது போலச் செய்யும் என்றும் நம்பினர். ஆந்த நம்பிக்கையின் விளைவே வளமைச் சடங்குகளும் (Fertility Cult) ஆகும். இனப்பெருக்கத்தில் மனிதனைப் பார்த்து இயற்கை அதே போலச் செய்யும் என்ற நம்பிக்கை புணர்ச்சிக் சடங்கின் அடிப்படை ஆகும். ஆண், பெண் புணர்ச்சிச் சடங்கின் எச்சமாக குறியீடுகளாக விளை நிலத்தில் பொம்மைகள் வைக்கப்படுகின்றன.

கனவு என்பது தனிப்பட்ட மனிதனின் நிறைவேறாத ஆசை என்றும், புராணங்கள் ஓர் இனத்தாரின் நிறைவேறாத ஆசை என்றும் கூறுவர். புராணங்கள் பாலியல் வேட்கையும், குற்ற உணர்வும் வெட்கப்படத்தக்க தன்மையும் கொண்டவையாகும். பிள்ளையார் தனக்குத் தாயைப் போன்ற பெண் வேண்டும் என்று கேட்டதையும், பிரமன் கலைமகளையே மணந்து கொண்டதையும் ஒடிப்பஸ் மனப்பாங்கினைக் காட்டுவதற்காகப் புராணங்களையும் நாட்டுப்புறக் கதைகளையும் ஆராய்ந்தார். உளப்

பகுப்பாய்வாளர்கள் நாட்டுப்புற இலக்கியத்தை மக்களது உணர்வுகளை வெளிப்படுத்தும் களமாகக் கருதுகின்றனர்.

மனிதனுடைய வாழ்வு முழுவதும் சூழ்நிலையாலும் மரபு நிலையாலும் உருவாக்கப்படுகின்றது. கற்பனைகளும் கனவுகளுமே மக்களது வேலைகளையும், துன்பங்களையும் உளவியல் அடிப்படையில் மாற்றவல்லனவாகும்.

நாட்டுப்புறவியலுக்கும், உளவியலுக்குமுள்ள தொடர்பினால் உளப்பகுப்பியல் பள்ளியே (Psychoanalytical School) எழுந்தது. பெரும்பாலும் ஊகத்தின் அடிப்படையில் இவ்வாய்வு நடத்தப்படுகின்றது. சிக்மண்ட் பிராய்டு அடி மனத்தைப் பற்றிய ஆய்வுக்குப் புராணக் கதைகள், தேவதைக் கதைகள், விலக்குகள் (Taboos), மூடப்பழக்க வழக்கங்கள் முதலியவற்றை ஆதாரமாகக் கொண்டார். புராணக் கதைகளையும் நாட்டுப்புற வழக்காறுகளையும் கனவுகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்கின்றார். சிக்மண்ட் பிராய்டு அவர்கள் ஓடிப்பஸ் மனப்பாங்கினை ஆராய, புராணக் கதைகளையும் நாட்டுப்புறக் கதைகளையும் எடுத்தாண்டுள்ளார்.

## நாட்டுப்புற இயலும் தத்துவ இயலும்

நாட்டுப்புற இலக்கியத்தின் ஒரு கூறான புராணங்கள் தொல் சமயத்திற்கும் (Primitive Religion) நாட்டுப்புறவியலுக்குமுள்ள தொடர்பினைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. நாட்டுப்புறவியலுக்கும் தத்துவ இயலுக்கும் நேரடித் தொடர்பு இல்லையெனினும், நாட்டுப்புற மக்களது சமய நம்பிக்கைகளை நாட்டுப்புறவியல் மூலம் அறிகிறோம். தொன்று தொட்டு நம் மக்களிடையே தெய்வ பக்தி காணப்படுகிறது. நாட்டுப்புற மக்களில் பெரும்பாலோர் தங்களுக்கு நன்மை ஏற்பட்டால் அது தெய்வத்தால் வந்தது என்று கூறிப் போற்றுவார்கள். அதேப்

போல் தீமை ஏற்பட்டாலும் அது தெய்வத்தின் கோபத்தால் வந்தது என்று நினைத்துத் தெய்வங்களை வேண்டிக் கொள்வர்.

நாட்டுப்புறத் தெய்வங்களுள் சிறு தெய்வங்கள் தாம் குறிப்பிடத்தக்கவை. சிறு தெய்வங்கள் நாட்டுப்புற மக்களால் பெரிதும் வழிபடப்படுவனவாகும். நாட்டுப்புற மக்களிடம் சிறு தெய்வ வழிபாட்டுடன், பெருந்தெய்வ வழிபாடும் காணப்படுகின்றன. அரச மர வணக்கம், வேப்ப மர வணக்கம், பாம்பு வணக்கம் போன்றவற்றையும் காணலாம். நாட்டுப்புறப் பாடல்களில் காணப்படும் பக்திப் பாடல்கள் நாட்டுப்புற மக்களின் இறையுணர்வை மட்டுமின்றி மக்களின் அபிலாஷைகளையும் வெளிப்படுத்துகின்றன. பக்திப் பாடல்களை நன்கு ஆராயின், தொன்மையான மதத்தைப் பற்றியும் (Primitive Religion) வழிபாட்டு முறைகளைப் பற்றியும் நன்கு தெரிந்து கொள்ளலாம்.

வாழ்க்கைத் தத்துவங்கள், நிலையாமை பற்றி நாட்டுப்புற மக்களது நம்பிக்கைகள், பிறப்பு, இறப்புத் தத்துவங்கள் பற்றியும் செய்கின்ற பாவ, புண்ணியத்திற்கேற்ப நரகம் சொர்க்கம் நிர்ணயிக்கப் படுவதாக மக்கள் நம்பும் நம்பிக்கையும் நாட்டுப்புறவியல் மூலம் அறிகிறோம்.

சமய வளர்ச்சியையறிய சிறு தெய்வ ஆய்வும் பெருந்துணை புரிகிறது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

## நாட்டுப்புற இயலும் மொழியியலும்

மனிதனின் பிறப்போடு பிறப்பாய் வாழ்வோடு வாழ்வாய்ப் பின்னிப் பிணைந்து நிற்பது மொழி. தமது கருத்தைப் பிறருக்கு அறிவிக்கும் கருவியாக இருப்பது மொழி. மனித வாழ்விலும் நாகரிகத்திலும் மொழியின் பங்கு மிகச் சிறப்பானதாகும். அம்மொழியைப் பற்றிய ஆய்வை மொழியியல் என்கிறோம். ஒரு மொழியின் இயல்பை உள்ளவாறு ஆராய்ந்து கூறுவது விளக்க மொழியியல், பல்வேறு

காலங்களில் அடைந்த மாற்றத்தை ஆராய்வது வரலாற்று மொழியியல். மொழியில் ஏற்படும் மாற்றங்களை ஒலியனியல் மாற்றம், உருபனியல் மாற்றம், சொற்றொடரமைப்பு மாற்றம், சொல் பொருள் மாற்றம் என்ற பிரிவின் கீழ் ஆராயலாம்.

நாட்டுப்புறவியலுக்கும், மானிடவியல், சமூகவியல் முதலியவற்றிற்குமுள்ள தொடர்பை நோக்க, நாட்டுப்புறவியலுக்கும், மொழியியலுக்குமுள்ள தொடர்பு மிகக் குறைவானதேயாகும். அதுவும் ஒரு பக்கத் தொடர்பாகும். 19-ஆம் நூற்றாண்டில் இவ்விரண்டு துறைகளும் வளர்ந்தபோது, மொழியியல் அறிஞர்கள் இத்துறையில் ஈடுபாடு கொண்டனர். மொழியியல் ஆய்வு நெறிமுறை நாட்டுப்புறவியல் ஆய்வு முறைக்கு மாதிரியாக அமைந்தது. பின்னிஸ் ஆய்வுக் கோட்பாட்டில் மொழியியலில் பயன்படுத்தப் பெறும் ஒப்பியல் முறை (Comparative Method) இங்கேயும் பயன்படுத்தப்படுதல் குறிப்பிடத்தக்கது.

நாட்டுப்புறவியலின் தந்தை எனக் கருமம்படும் ஜேக்கப் கிரீம் (கி.பி. 1785 – 1863) அவர்கள் மொழிநூல் (Philogy) துறையைச் சார்ந்தவர். இவர் மொழியியலில் பயன்படும் ஒப்பு ஆய்வை நாட்டுப்புற இயலுக்கும் பயன்படுத்தினார். மொழியை மீட்டுருவாக்கம் செய்தது போன்று, புராணங்களையும் மீட்டுருவாக்கம் செய்து அது தோன்றிப் பரவிய நாடுகளைப் பற்றி ஆய்வு செய்தார். வடமொழியிலும் ஒப்பாய்விலும் வல்லுநரான மாக்ஸ்முல்லர் (கி.பி. 1823 – 1900) இத்துறையிலும் ஈடுபட்டு ஜேக்கப் கிரீமின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் புராணங்களை ஆராயலானார்.

ஒப்பு ஆய்வு நெறிமுறைகள் நாட்டுப்புறவியலில் காணப்படுவதை மறுக்கமுடியாது. 20 ஆம் நூற்றாண்டுத் துவகத்தில் அமெரிக்க நாட்டு மானிடவியல் பேரறிஞர் போவாஸ் (Boas) போன்றோர்கள் அமெரிக்க

இந்தியர்களிடையே காணப்படும் நாட்டுப்புறக் கதைகளைச் சேகரித்து மொழி ஆய்வு செய்தனர். நாட்டுப்புறவியலுக்கும், மொழியியலுக்குமுள்ள தொடர்பு வளரலாயிற்று. நாட்டுப்புறவியலில் பயன்படுத்தப்படும் அமைப்பியல் முறை (Structural Method) இத்தொடர்பை மேலும் வலுப்படுத்தியது. நாட்டுப்புறவியலும் மொழியியலின் ஒரு கூறான Discourse Analysis-க்குப் பெருந்துணை புரிவதையும் இங்குக் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

ருஷ்ய நாட்டுப்புறவியல் பேரறிஞர் பிராப்பின் ‘Morphology of Folktales’ என்ற நூலின் மூலம் நாட்டுப்புறவியலில் அமைப்பியல் ஆய்வுமுறை வளரலாயிற்று. ஆலன் டாண்டஸ் (Alan Dundes) அவர்கள் மாறாத அலகு (Constant Unit) மாறும் அலகு (Variable Unit) என்பதனைக் கென்னத் பைக்கின் (Kenneth L Pike) எமிக் (Emic) எடிக் (Etic) உடன் தொடர்பு படுத்திக்காட்டுகின்றனர். லெவிஸ்ட்ராஸ் (Levistrauss) அவர்கள் புராணங்களை ஆராய அமைப்பியல் முறையைப் பயன்படுத்தினார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. லெவிஸ்ட்ராஸ் அவர்கள் மொழியானது ஒலியனியஸ், உருபனியல் நிலையில் ஓர் அமைப்புக்கு உட்பட்டது என்பதைக் கண்டறிந்தார். அதே போன்று நாட்டுப்புறக் கதைகளும் புராணக்கதைகளும் ஓர் அமைப்புக்குட்பட்டது என்பதைக் கண்டறிந்தார்.

இராஜா - இராணி

இடையன் - இடைச்சி

என்பதில் ஆண், பெண் என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. ஆனால் சமூக உயர்வு/தாழ்வு என்ற நிலை வெளிப்படவில்லை. பொகடரேவ்வும் (டீழபயவலசநள) ஜேக்கப்ஸனும் (Jakobson) சசூரின் மொழி (Langue) பேச்சு (Parole) என்ற வேறுபாடு நாட்டுப்புறவியலுக்கும் பொருந்தும் என்று கூறுகின்றனர். வாய்மொழி சார்ந்த நாட்டுப்புறவியல்

பேச்சு ஆய்வுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. ஏனெனில் நாட்டுப்புற வழக்காறுகள் எழுதப்படா மரபு வகையைச் சார்ந்தனவாகும். நாட்டுப்புற இயலானது வாய்மொழியாகப் பரவுவதாலும் மரபு வழிப்பட்டதாலும் ஆசிரியர் பெயர் அறியாமையாலும், சமூகத்தினின்றும் மறைய வாய்ப்புண்டு என வாதிடுகின்றனர். ஆனால், ஆலன் டாண்டஸ் போன்றோர்கள் நாட்டுப்புற வழக்காறுகள் கல்லாதவர்களிடம் மட்டுமின்றி கற்றவர்களிடமும் காணப்படுகின்றன என்று கூறுகிறார்.

நாட்டுப்புற இலக்கியங்கள் பேச்சு வழக்கினை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், மொழியியலாளர்கள் பேச்சுத் தமிழை ஆராய்ந்து, விளக்க இலக்கணம் (Descriptive Grammer) எழுதுகின்றனர். நாட்டுப்புறப்பாடல்களைக் கூர்ந்து நோக்கின் அந்தந்த வடடார வழக்கினைக்காணலாம். பேச்சுத்தமிழில் காணப்படும் மாற்றங்களையும் அறியலாம். 17 ஆவது நூற்றாண்டைச் சார்ந்த இராமப்பய்யன் அம்மானை மூலம் அக்காலப்பேச்சு வழக்கை நன்கு அறிகிறோம். ‘வைப்பாளன்’ போன்ற வழக்கிறந்த சொற்களையும் நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் சேகரிக்க முடிகின்றது. சமூக மொழியியல் ஆய்வுக்கும் இப்பாடல்கள் பெரிதும் பயன்படுகின்றன. சமூகத்தில் காணப்படும் வேறுபாட்டிற்கேற்ப அவர்களது பாடல்களிலும் வேறுபாட்டினைக் காண்கிறோம்.

நாட்டுப்புறவியலுக்கும் மொழியியலுக்கும் உள்ள தொடர்பினை அமைப்பியல் பள்ளி (Structural School) தோன்றியது மூலம் நன்கு அறியலாம். 1960 ஆம் ஆண்டளவில் உருவான அமைப்பியல் கோட்பாடு இன்றைய நாட்டுப்புற ஆய்வில் மிகச் சிறந்த கோட்பாடாகக் கருதப்படகின்றது. இக்கோட்பாடு முறையினால் வகைப்படுத்துதல் எளிமையாகின்றது. நாட்டுப்புறவியலுக்கும் மொழியியலுக்குமிடையே உள்ள கொள்வினை, கொடுப்பினையை ஆய்வுக்கோட்பாட்டில் கண்டோம். நாட்டுப்புற இலக்கியங்கள் மொழியியல் ஆய்வுக்குப் பயன்படுவதையும்

புற இலக்கியங்கள் மொழியியல் ஆய்வுக்குப் பயன்படுவதையும் இவ்விரண்டிற்குமுள்ள தொடர்பினையும் ஓரளவு கண்டோம்.

இவ்வாறு நாட்டுப்புறவியல், மானிடவியல், சமூகவியல், உளவியல், தத்துவஇயல், வரலாறு, மொழியியல் ஆகிய துறைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. எனவே நாட்டுப்புற இயல் ஆய்வு என்பது இன்று பல்துறை இணைந்த ஆய்வாகக் (ஐவெநசனளைஉனிடைமையெசல ஞுவரனல) பரிணமித்துள்ளது.

## நாட்டுப்புற இயல் ஆய்வுக் கோட்பாடுகள்

நாட்டுப்புறவியல் இன்று வளர்ந்து வரும் துறையாகும். நாட்டுப்புறவியலின் பல்வேறு கூறுகள் இன்று அலசி ஆராயப்படுகின்றன. நாட்டுப்புறவியலில் கடந்த பத்தாண்டுகளாக ஆராய்ச்சி பெருகியும் பரவியும் வருகின்றது. வளர்ந்து வரும் துறைக்கேற்பப் பல்வேறு கூறுகளை ஆராய, பல்வேறு கோட்பாடுகள் (theories) உருவாவது இயற்கையாகும். அக்கோட்பாடுகள் பற்றிய சிந்தனையும் அவற்றைத் தம் ஆராய்ச்சிகளில் பொருத்திப் பார்க்கும் முனைப்பும் வளரத் தலைப்பட்டுள்ளன. அமெரிக்க நாட்டு நாட்டுப்புறவியல் பேரறிஞர் ரிச்சார்ட் எம் டார்சன் (Richard M. Dorsan) அவர்கள் Folklore and Folklife An Introduction என்ற நூலில் பன்னிரண்டு ஆய்வுக்கோட்பாடுகளைப் பற்றி (Current Theories of Folklore pp. 7.47) விளக்கியுள்ளார். இக்கோட்பாடுகளைப் பற்றி முதன்முதலில் பேராசிரியர் தே. லூர்து அவர்கள் தமிழில் எழுதியுள்ளார்கள். மேலை நாட்டில் வளர்ந்த இவ்வாய்வுக் கோட்பாடுகளை நோக்கும்போது இத்துறையில் நாம் எவ்வளவு பின்தங்கியுள்ளோம் என்று தெரிகிறது. இக்கோட்பாடுகளில் ஒன்றான அமைப்பியல் ஆய்வுக்கும் ஒப்பாரிக்கும் பயன்படுத்தி ஆய்வு செய்துள்ளார். இவரைத் தவிரத் தமிழில் யாரும் இக்கோட்பாடுகளைப் பயன்படுத்தி ஆய்வு செய்யவில்லை. தமிழக

நாட்டுப்புறவியலுக்குச் சிறு வரலாறு உண்டு. நெடுங்காலமாகத் தமிழக நாட்டுப்புறவியல் ஆய்வு விளக்க ஆய்வுகளாகவே நடைபெற்று வருகின்றன. இதுவரை வெளிவந்த நூல்களும் ஆய்வுக்கட்டுரைகளும் ஆய்வேடுகளும் இதற்குச் சான்று பகர்கின்றன. பிற துறைகளுடன் இணைந்து நோக்கும் (Interdisciplinary approach) ஆய்வாக இனிமேல்தான் வளரவேண்டும். அத்துடன் கோட்பாடுகளையும் நெறிமுறைகளையும் பொருத்திக் காட்டுவதாகவும் நமது மரபிற்கேற்பப் புதிய நெறிமுறைகளை உருவாக்குவதாகவும், நமது ஆய்வு அமைதல் வேண்டும். தற்போது சிலர் நாட்டுப்புறவியல் ஆய்வுக் கோட்பாடுகளைத் தமது ஆய்வுகளில் பொருத்திக்காட்ட முனைந்துள்ளனர். இப்போக்கு வளர்ச்சியைக் காட்டுவதாகும்.

ரிச்சர்ட் எம் டார்சன் (Richard M Dorson) குறிப்பிட்டுள்ள பன்னிரண்டு ஆய்வுக் கோட்பாடுகளை இங்குக் காண்போம்.

1. வரலாற்றுப் புவியியல் கோட்பாடு (Historical Geogrphical)
2. வரலாற்று மீட்டுருவாக்கக் கோட்பாடு (Historical Reconstruction)
3. இலட்சியக் கோட்பாடு (Ideological)
4. செயல்திறன் கோட்பாடு (Functional)
5. உளவியல் ஆய்வுக்கோட்பாடு (Psycho-Analytical)
6. அமைப்பியல் கோட்பாடு (Structural)
7. வாய்மொழி வாய்ப்பாட்டுக் கோட்பாடு (Oral Formulaic)
8. கலப்புப் பண்பாட்டுக் கோட்பாடு (Cross Cultural)
9. நாட்டுப்புறப் பண்பாட்டுக் கோட்பாடு (Folk Cultural)
10. மக்கட் பண்பாட்டுக் கோட்பாடு (Folk Cultural)
11. அரை உலகக் கோட்பாடு (Mass Cultural)
12. சூழ்நிலைக் கோட்பாடு (Contextual)

### வரலாற்றுப் புவியியல் கோட்பாடு

கதைகளின் தோற்றம், பரவிய விதம், அதற்குரிய காரணங்கள் ஆகியவற்றை அறிய இக்கோட்பாடு உதவுகின்றது. இதனைக் கோட்பாடு என்பதற்குப் பதிலாக முறை (Method) என்றே கூறலாம். இக்கோட்பாட்டின்படி ஒப்பியல் நாட்டுப்புறவியலாளர் (Comparitive Folkorists) நாட்டுப்புறப் பாடலையோ, கதையையோ மீட்டுருவாக்கம் செய்கின்றனர். இக்கோட்பாட்டின் படி ஒரு கதை நூறு மாற்று வடிவங்களில் காணப்படலாம். ஆனால், அவையனைத்தும் ஒரு காலத்தில் ஓர் இடத்தில் ஒரு மனிதன் கூறிய கதையிலிருந்து பரவியிருக்கலாம். அக்கதை தோன்றிய இடத்திலிருந்து பல்வேறு இடங்களுக்கும் சென்று பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகியிருக்கலாம். ஒரு கதையானது மொழி எல்லை, பண்பாட்டு எல்லை கடந்து பரவாது என்ற கொள்கையை பின்னிஸ் ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. சில கதைகளும் நாட்டுப்புறக் கதைப்பாடல்களும் மொழி எல்லை, பண்பாட்டு எல்லையைத் தாண்டி பரவுகின்றன. முன்னேறிய மக்களிடமிருந்து பின்தங்கிய மக்களுக்குச் சென்று பரவுகின்றன. 15, 16ம் நூற்றாண்டு ஐரோப்பிய குடியேற்றக்காரர்கள் வட, தென் அமெரிக்காவுக்கும், ஆப்ரிக்காவுக்கும் குடியேறியபோது, தங்கள் கதைகளையும் அங்குப் பரப்பினர். ஆனால், ஆப்ரிக்க, அமெரிக்க இந்தியர்களுடைய கதைகளை ஐரோப்பிய விவசாயிகளிடையே காண முடியவில்லை. மிகப் பரவலாக ஊடுவிச் சென்ற நாட்டுப்புறக் கதைகளின் பிறப்பிடம் இந்தியாவும் மேற்கு ஐரோப்பாவும் ஆகும். ஆசியா மைனரும் ஐரோப்பாவின் மற்றைய பகுதிகளும் ஊடுருவிப் பரவுதலில் இரண்டாம் இடத்தைப் பெறுகின்றன. மிருகங்களைப் பற்றிய கதையோ கதைப்பாடல் ஒன்றையோ தேர்ந்தெடுத்து, அவற்றின் மாற்று வடிவங்களைத் தொகுத்து ஒவ்வொரு தனிக் கூறும் எவ்வெவ்விடங்களில் எத்தனை முறை வருகின்றது என்று அட்டவணை மூலம் தயாரித்துப் படம் ஒன்று வரைந்து, தொகுக்கப்பட்டதை மதிப்பீடு செய்து

பழைமையான கூறு எது என்று முடிவுக்கு வர வேண்டும். கதையானது பரவும் போது சில பகுதிகள் விடுபட்டு, உருத்திரிதல் (Compression), சில பகுதிகள் சேர்ந்து விரிவடைதல் (Elaboration) போன்ற மாற்றங்கள் இம்முடிவுக்கு வரத்துணை புரிகின்றன.

இவ்வாய்வு முறையை ஓர் எடுத்துக்காட்டால் விளக்கலாம்.

**'மின்னுவதெல்லாம் பொன்னல்ல'** (All the glitters is not gold) என்ற பழமொழியை ஆர்ச்சர் டெய்லர் அவர்கள் ஆராய்ந்து, மீட்டுருவாக்கம் செய்தார். Glitter என்பதுடன் glister என்றொரு திரிபு வடிவமும் இருப்பதைக் கண்டு ஆய்வு செய்து Glister என்பதே தொல் வடிவம் (Proto-form) எனக் கண்டார். 18 ஆம் நூற்றாண்டின் டேவிட் காரிக் என்பவர் Glister என்பதை Glitter என உச்சரித்தார். சேக்ஸ்பியர் Merchant of Venice என்ற நாடகத்தில் 'glister' என்ற சொல்லையே பயன்படுத்தியுள்ளார். இதைவிட மிகச்சிறந்த சான்று மீட்டுருவாக்கக் கோட்பாட்டுக்குக் கிடைக்காது என இப்பழமொழியை ஆராய்ந்த ஆர்ச்சர் டெய்லர் குறிப்பிடுகின்றார்.

பின்னிஸ் வரலாற்றுப் புவியியல் கோட்பாடானது கதை ஆய்வை வெறும் புள்ளி விபரமாகவும் கதைச் சுருக்கமாகவும் குறியீடாகவும் அட்வணையாகவும் வரைபடமாகவும் மாற்றிவிடுகின்றது என்றும், கதையில் காணப்படும் அழகுணர்ச்சியையோ நடையையோ கூறுபவரின் மனித உணர்வுகளையோ புறக்கணித்து விடுவதாகவும் இக்கோட்பாட்டைச் சிலர் குறை கூறுகின்றனர்.

## வரலாற்று மீட்டுருவாக்கக் கோட்பாடு

ஆதாரம் கிடைக்காத ஒரு கால கட்டத்தின் வரலாற்றை நாட்டுப்புறவியல் சான்றுகளைக் கொண்டு உருவாக்குவதற்கு வரலாற்று மீட்டுருவாக்கக் கோட்பாடு என்பர். ஜேக்கப் கிரீமின் இக்கொள்கை 19

ஆம் நூற்றாண்டின் நாட்டுப்புறவியல் அறிஞர்களைப் பெரிதும் கவர்ந்தது. ஆனால், டார்வினின் பரிணாமக் கொள்கை வெளிவந்தவுடன், இக்கோட்பாட்டுக்கு அவ்வளவாக மதிப்பில்லை என்றே கூறலாம். ஜார்ஜ் லாரன்ஸ் கொம்மே (George Lawrence Gomme) அவர்கள் 'நாட்டுப்புறவியல் ஒரு வரலாற்று அறிவியல்' (Folklore as an Historical Science) (1908) என்று பல தொகுதிகள் வெளியிட்டு, இங்கிலாந்தில் காணப்படும் நாட்டுப்புற வழக்காற்றிலுள்ள ஆரியர் பழக்கங்களையும், ஆரியருக்கு முந்திய பழக்கங்களையும் இனம் பிரித்தறிந்தார். கொம்மேயின் கோட்பாட்டினைக் குனியா யனகித (Kuniyo Yanagita) போன்ற ஜப்பான் நாட்டு நாட்டுப்புறவியல் அறிஞர்கள் ஆதரித்தனர். ஜப்பானியர்களின் பழங்கால ஆவியுலகக் கோட்பாட்டுச் சமயத்தை (Animistic Religion) மீட்டுருவாக்கம் செய்யபடும் மரபு வழி வரலாற்றுச் செய்திகளில் எந்த அளவிற்கு வரலாற்று உண்மைகள் பொதிந்துள்ளன என்பதை இக்கோட்பாட்டார்கள் ஆராய்கின்றனர்.

லார்ட் ராக்லன் (Lord Raglan), ராபர்ட் லூயி போன்றோர் வரலாற்று மரபுச் செய்திகளைப் புராணக் கதைகள் என ஒதுக்கி விட்டனர். ஆனால், ஹெக்டர் (Hector), நோரா சாட்விக் (Nora Chadwick) போன்றோர் நாட்டுப்புற இலக்கியங்களில் வரலாற்றுச் செய்திகள் இருப்பதைக் கண்டனர். தனித்தனியாக ஒவ்வொரு மரபுச் செய்தியையும் குறிப்பிட்ட விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்த பின்னரே ஒரு தலைமுறை தலைமுறையாக ஒரே இடத்தில் வாழ்ந்தவர்களா? அவர்களது பண்பாடு வரலாற்றாசிரியனுக்குச் சான்றுகளை அளிக்கின்றனவா? என்ற வினாக்களுக்கு விடை கிடைப்பின் வரலாற்று உண்மையை நிறுவ முடியும்? அமெரிக்க நாட்டில் நாட்டுப்புற வழக்கியலையும் வரலாற்று முறை இரண்டையும் இணைத்து, ஒரு புதிய முறையை உருவாக்கி வரலாற்று மீட்டுருவாக்கம் செய்கின்றனர். இராமப்பய்யன், கான் சாகிபு சண்டை போன்ற வரலாற்றுக்கதைப்

பாடல்கள் வரலாற்றுக்குப் பெரிதும் துணை புரிவதைக் காண்கிறோம். இராமப்பய்யன் கதைப் பாடலை நாயக்கா் வரலாற்றுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து, வரலாற்று நிகழ்ச்சிகளைக் காணமுடியும். தேசிங்குராஜன் கதையை கா்நாடக ராசாக்கள் கவிஸ்தாரம் போன்றவற்றுடன் ஒப்பிட்டு வரலாற்று நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் காணலாம்.

## அமைப்பியல் கோட்பாடு

1960 ஆம் ஆண்டளவில் அமெரிக்க நாட்டுப்புற இயல் அறிஞா்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்ற கோட்பாடு அமைப்பியல் கோட்பாடாகும். அமைப்பியல் கோட்பாட்டின் தந்தை என ருஷ்ய நாட்டுப் பேரறிஞா் விளாடிமிா் பிராப் (Vladimir Propp) அவா்களைக் குறிப்பிடலாம். ஆா்னி தாம்சனின் ஆய்வு முறை அறிவியல் அடிப்படையில் அமையவில்லை என்ற காரணத்தால், இக்கோட்பாட்டை உருவாக்கினாா். 1928 ஆம் ஆண்டு ருஷ்ய மொழியில் 'நாட்டுப்புறக் கதைகளின் உள்ளமைப்பு' (The Morphology of North American Indian Folklore) என்ற நூலை வெளியிட்டாா். ஆலன் டாண்டஸ் அவா்கள் கோட்பாட்டில் சில மாற்றங்களைச் செய்தாா். பிராப் அவா்கள் கையாண்ட 'Function' என்ற சொல்லை நீக்கி மொழியியல் பேரறிஞா் கென்னத் பைக்கின் 'motifeme' என்ற சொல்லைக் கையாண்டாா். பிராப் அவா்களைத் தொடா்ந்து மொழியியலை அடிப்படையாக வைத்து நாட்டுப்புற வழக்காறுகளை அமைப்பியல் கோட்பாட்டின்படி ஆராய்ந்தவா் லெவி ஸ்டிராஸ் (Levistrauss) எனும் மானிடவியல் பேரறிஞா். The Structural Study of Myth என்ற ஆய்வுக்கட்டுரையில் புராணங்களைப் புதிய நோக்கில் ஆராய்கின்றாா். லேவிஸிடிராஸ் பிராப்பின் முறையினின்றும் சிறிது விலகிச் சென்றாலும், அமைப்பியல் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஆராய்கிறாா். லெவிஸ்டிராஸின் அமைப்பியல் ஆய்வுக் கோட்பாட்டின் ஆய்வினால்

புராணங்களை வகைப்படுத்தும் வேலை முடிந்து விட்டது என்று கூறுவர் சிலர். அமைப்பியல் கோட்பாட்டின் மூலம் அனைத்து நாட்டுப்புறக் கதைகளும் ஓர் அமைப்புக்கு உட்பட்டவை என்றும், இக்கோட்பாட்டினால் வகைப்படுத்துதல் என்னும் முறை எளிமையாகின்றது என்றும், பண்பாட்டுக் கூறுகளைப் பிரித்தறியவும் பயன்படுகிறது என்றும் நாட்டுப்புறவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். தமிழில் முதன்முதலில் அமைப்பியல் கோட்பாட்டைத் தாலாட்டிற்கும் ஒப்பாரிக்கும் பயன்படுத்தி ஆய்வு செய்தவர் டாக்டர். பா. ரா. சுப்பிரமணியம் அவர்கள் இக்கோட்பாட்டை மற்ற நாட்டுப்புற இலக்கியங்களுக்கும் பயன்படுத்தி ஆய்வு செய்யலாம்.

## உளவியல் கோட்பாடு

19 ஆம் நூற்றாண்டின் புராணக்கதைகட்கும் நாட்டுப்புறக் கதைகட்கும் பாலியல் குறியீட்டு விளக்கமளிக்க ஆரம்பித்தனர். ஆப்ரஹாம் அவர்கள் தமது நூலான Dreams and Myth–ல் பிராமித்தியுஸ் புராணக் கதைகளுக்குப் புதிய விளக்கமளிக்கின்றார். மின்னல்தான் பழங்கால மனிதனுக்கு நெருப்பை அளித்தது என்ற நம்பிக்கை நிலவியது. ஆனால், பழங்கால மனிதன் ஒரு கோல்கொண்டு வட்ட வடிவ மரக்கட்டையைக் கடைந்து தீயை உண்டாக்கினான். இப்பொருட்கள் எல்லாம் பிறப்பு உறுப்புக்களின் குறியீடுகளாகும். எரிக் ஃபிரம் (Eric Fromm) என்பவர் பிராய்டிசக் குறியீட்டுப் பட்டியல் ஒன்றைத் தருகிறார். ‘குச்சி, மரம், குடை, கத்தி, பென்சில், சம்மட்டி, வானவூர்தி போன்ற குறியீடாக ஆண் பிறப்பு உறுப்பு உருவகப்படுத்தப்படுகின்றது. நடனம், சவாரி செய்தல், ஏறுதல், மலை ஏறுதல் முதலியன பற்றிய கனவுகள் பாலியல் உறவாகக் கருதப்படுகின்றன. சிக்மண்ட் பிராய்டு (Sigmund Freud) அவர்கள் அடிமனத்தை அறிய (Subconscious Minid) நாட்டுப்புறக் கதைகள், புராணக்கதைகள், விக்குகள் (taboos), மூட நம்பிக்கைகள் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு விளக்குகிறார்.

தமது கருத்துகளை ‘கனவுகளின் விளக்கம்’ (Interpretation of Dreams) என்ற நூலில் விளக்கமாகக் கூறியுள்ளார். ‘தனிமனிதனின் புராணக் கதையே கனவு’ என ஆப்ரஹாம் கூறுகிறார். கனவுகளிலும் புராணக் கதைகளிலும் ஒரே வகையான உத்திகளே உள்ளன என்று கருதப்படுகின்றன. கனவுகள் மனிதனின் நிறைவேறாத ஆசைகளை வெளியிடுவது போல, புராணங்கள் ஓர் இனத்தாரின் நிறைவேறாத ஆசைகளை வெளிப்படுத்துகின்றன. புராணங்கள் பாலியல் கதைகளை உள்ளடக்கி அமைந்துள்ளன. ஓடிப்பஸ் (Oedipus) என்ற புராணக் கதை ஆசைகளை வெளியிடுகின்றதற்கு எடுத்துக்காட்டு எனப் பிராய்டு கருதுகிறார். அடி மனத்தின் வெறித்தனமான ஆசைகளுக்கு மேல் மனம் (Super ego) ஒரு தடையாக உள்ளது. அவற்றைக் கனவுகளும் புராணக் கதைகளும் குறியீட்டுப் போர்வையில் வெளியிடுகின்றன. குறியீட்டுத் திரையை நீக்கி, அடிமனத்தின் விருப்பங்களைப் புரிந்து கொள்வதே உளவியல் முறை ஆய்வாளர்களின் பணியாகும்.

வளமைச் சடங்கு பற்றி (Fertility Ritual) ஆராய்வோரும் உளவியல் ஆய்வுக் கோட்பாட்டைப் பின்பற்றி ஆராய்கின்றனர். பண்டை மனிதன் இயற்கை தனக்கு உதவ வேண்டுமாயின், இயற்கையைப் போல நடக்க வேண்டுமென்றும் தான் செய்வதைப் பார்த்து இயற்கையும் அவ்வாறே செய்யும் என்றும் நம்பினான். அந்த நம்பிக்கையின் காரணமாகச் செய்யப்படும் சடங்குகளே வளமைச் சடங்குகள் ஆகும். பெண்கள் சிவப்புப் பொட்டு இடுவதைப் பற்றிக் கூறப்படுவதைக் காண்போம். ‘பல திருமணச் சடங்குகளில் மணமகள் நெற்றியில் சிகப்பு பூசுகின்றனர். இது அவள் தன் கணவனுக்கு மட்டுமே உரியவள் என்பதையும் பிற ஆடவர்கட்கு உரியவள் அல்ல என்பதையும் தன் கணவனுக்குக் குழந்தைப் பேற்றினை உறுதிப் படுத்தும் வளமுடையவள் என்பதையும் குறிக்கும் அடையாளமாகும். பேரிதாகக் காட்டப்பட்டிருக்கும் மனித குலத்துக்கு இனப்பெருக்கம் செய்து வளம்

கொழிக்கும் பெண் உறுப்பைக் காட்டின் அதிலிருந்து நிலம் வளம் பெறும் என்றும், பயிர்கள் பலமடங்கு விளைவு தரும் என்றும் நம்புகின்றனர். மனுதர்ம சாஸ்திரம் கூட லிங்கம் தொடக்கத்தில் பயிர்த் தொழிலின் குறியீடாகவிருந்தது என்கிறது. வளமைச் சடங்கை ஆராய்வோர் இக்கோட்பாட்டைப் பின்பற்றி ஆராய்கின்றனர்.

## வினாக்கள்

1. நாட்டுப்புறவியலின் வகைப்பாடுகளை விவரி?
2. நாட்டுப்புறவியலும் பிறஇயலும் குறித்து விளக்குக?
3. வரலாற்று மீட்டுருவாக்க கோட்பாடு, உளவியல் கோட்பாடு குறித்து விளக்குக.

# பாடம் - 2

## நாட்டுப்புறப் பாடல்கள்

உழைத்து உழைத்து களைத்துப் போன உழைப்பாளர்களின் களைப்பினை போக்கி களிப்பினை போக்கி ஊட்டும் மருந்தை உத்தமர்கள் நாடுவர். தளருணர்வை மாற்றி வளருணர்வை ஊட்டும் வழியை தேடுகின்றனர். கிடைக்கின்ற ஓய்வு நேரங்களில் வாய்க்கு வந்த இசையாலே பாடல்களைப் பாடி மகிழ்கின்றனர். தம்மை மறந்த நிலையில் இயற்கையோடு ஒன்றி கலந்தவர்களாய் அவர்கள் பாடுகிற பாடல்களில் அவர்தம் இதய ஒலியைக் காணமுடியும். அவர்களின் எண்ணங்கள், ஏக்கங்கள், கனவுகள், விருப்பு, வெருப்புகள் ஆகியன அப்பாடல்களிலேயே வெளிப்படுவதைக் காணமுடிகின்றது. வாழ்க்கையின் சாதாரண நிகழ்ச்சிகளாக பிறப்பு, குழந்தை பருவ நிகழ்ச்சி, விளையாட்டு, காதல், பொருந்தா மணம், குடும்ப விவகாரங்கள், கிராமத்தொழில், பஞ்சம், கிராம தெய்வங்கள் முதலியனவே அவர்கள் பாடும் பாடலின் பொருளாக அமைந்துள்ளன. ஒரு நாட்டின் கலாச்சாரப் பாரம்பரியத்தின் முக்கிய அம்சம் நாட்டுப்புறப்பாடல்களாகும்.

## நாட்டுப்புறப்பாடல் வகைப்பாடு (Classification of Fold Songs)

எந்தவொரு அறிவியல் ஆய்விலும் சேகரித்தலும் (Collection) வகைப்படுத்தலும் (Classification) ஆய்வு செய்தலும் (Analysis) முக்கிய ஆய்வு நெறிமுறையாகக் கருதப்படுகின்றது வகைப்படுத்துதல் என்பது ஒரே மாதிரியாக இருப்பனவற்றை இனங்கண்டு வகைப்படுத்தலாகும். வகைப்படுத்துதல் எவ்வளவுக்கெவ்வளவு நுணுக்கமாகவும் செம்மையாகவும் அமைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஆய்வுகள் நுணுக்கமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

1. மரியா லீச் (Maria Leach) நாட்டுப்புறப்பாடல்களை ஐந்து வகையாக வகைப்படுத்துகிறார்.
    1. உணர்ச்சிப் பாடல்கள் (Emotional)
    2. வாழ்வியல் பாடல்கள் (Daily Life)
    3. வாழ்வின் முக்கிய நிகழ்வின் பாடல்கள் (Crucial Movement of Life)
        - ***i) பிறப்பு (Birth)***
        - ***ii) மணம் (Marriage)***
        - ***iii) இறப்பு (Death)***
        - ***iv) பிரிவு (Parting)***
        - ***v) தாயக நாட்டம் (Nostalgia)***
        - ***vi) போர்ப்பாடல் (War)***
    4. குழந்தைப் பாடல்கள்
    5. சமயப் பாடல்கள்
2. பௌரா (Bowra) ஆறு வகையாக வகைப்படுத்துகிறார்.
    1. ***இயற்கைப் பாடல்கள் (Nature)***
    2. ***காதல் பாடல்கள் (Love)***
    3. ***மணவாழ்வு (Married)***
    4. ***தாலாட்டு (Lullaby)***
    5. ***தொழில் பாடல் (Work)***
    6. ***விழாப் பாடல் (Festival)***
3. கீமத் பீக்காக் (Kemmeth Peacock) இருபது வகையாக வகைப்படுத்துகிறார். காதல் பாடல்களையே ஒன்பதாக வகைப்படுத்துகிறார். கதைப் பாடல்களை மூன்றாக வகைப்படுத்தியுள்ளார். கதைப்பாடல் நாட்டுப்புற இலக்கியத்தின்

மற்றொரு தனிக் கூறாகும். இந்த பன்னிரண்டு வகைப்பாட்டை நீக்கி, மீதியுள்ள எட்டு வகைப்பாட்டைக் காண்போம்.

1. ***குழந்தைப் பாடல்கள் (Children)***
2. ***நகை (Commic Ditties)***
3. ***மீன் பிடித்தல் (Fishing)***
4. ***ஒப்பாரி (Laments)***
5. ***கடற்கொள்ளையர் பாடல் (Priate Songs)***
6. ***கடற்பயணிகள் பாடல் (Sailors Song)***
7. ***போர்ப்பாடல்கள் (War Songs)***
8. ***பல்பொருள் பற்றிய பாடல்கள் (Miscellaneous Songs)***

தமிழக நாட்டுப்புறப்பாடல்களை கடந்த ஐம்பது ஆண்டு காலமாகப் பலர் வகைப்படுத்த முயன்றனர். ஆனால், முழுமையாக வகைப்படுத்தவில்லை. இதுவரை வகைப்படுத்திய முறையை மூன்றாகப் பகுக்கலாம்.

1) ***பாடல்களைத் தனித்தனியாகப் பெயர் சுட்டிய நிலை***
2) ***பல்வேறு அளவுகோலைக் கொண்டு வகைப்படுத்திய நிலை***
3) ***ஒரே அளவுகோலைக் கொண்டு வகைப்படுத்திய நிலை***

மு. அருணாசலம், கி. வா. ஜெகந்நாதன், அன்னகாமு போன்றோர் ஒரு வகையாகவும், ஆறு. அழகப்பன், நா. வானமாமலை, கிருட்டிணசாமி, வரதராசன், வளவன் போன்றோர் வேறொரு வகையாகவும், வகைப்படுத்தியுள்ளார்.

4. மு. அருணாசலம் அவர்கள் நாட்டுப்புறப்பாடல்களைப் பன்னிரண்டாக வகைப்படுத்துகிறார்.

1. ***தாலாட்டுப் பாட்டு***
2. ***விடுகதைப் பாட்டு***
3. ***ஏற்றப்பாட்டு***
4. ***வள்ளைப் பாட்டு***

*5. கண்ணன் பாட்டு*

*6. நடவுப் பாட்டு*

*7. ஒப்பாரிப் பாட்டு*

*8. பரிகாசப் பாட்டு*

*9. கும்மிப் பாட்டு*

*10. ஏசல் பாட்டு*

*11. வேல் பாட்டு*

*12. இசைப் பாட்டு*

5. கி. வா. ஜெகந்நாதன் அவர்கள் 'நாடோடி இலக்கியம்' என்ற நூலில் நாட்டுப்புறப் பாடல்களை இருபத்தியொன்பதாக வகைப்படுத்தியுள்ளார். இவரே 'மலையருவி' என்ற நூலில் நாட்டுப்புறப் பாடல்களைப் பதின்மூன்றாக வகைப்படுத்தியுள்ளார்.

1. *தெம்மாங்கு*
2. *தங்க ரத்தினமே*
3. *ராசாத்தி*
4. *ஆண், பெண் தாக்கம்*
5. *கள்ளன் பாட்டு*
6. *தொழிலாளர் பாட்டு*
7. *குடும்பம்*
8. *தாலாட்டு*
9. *சிறுவர் உலகம்*
10. *புலம்பல்*
11. *கும்மி*
12. *தெய்வம்*
13. *பல கதம்பம்*

6. அன்னகாமு அவர்கள் 'ஏட்டில் எழுதாக் கவிதைகள்' என்ற நூலில், நாட்டுப்புறப் பாடல்களைப் பதினான்காக வகைப்படுத்தியுள்ளார்.

1. *கடவுள் துதி*

*2. மழை*

*3. நாட்டுச் சிறப்பு*

*4. பிறப்பு, வளர்ப்பு*

*5. குழந்தைகளின் விளையாட்டு*

*6. திருமணம்*

*7. தொழில்*

*8. நவீனம்*

*9. களியாட்டங்கள்*

*10. கதைப்பாடல்*

*11. வாழ்க்கையில் சோதனைகள்*

*12. வேதாந்தப் பாடல்கள்*

*13. ஆதிவாசி பாடல்கள்*

*14. மங்களம்*

7. டாக்டர் ஆறு. அழகப்பன் அவர்கள் 'நாட்டுப்புறப் பாடல்கள் ஒரு திறனாய்வு' என்ற நூலில் ஏழாக வகைப்படுத்துகிறார்.

1. *குழந்தைப் பாடல்கள்*
2. *பக்திப் பாடல்கள்*
3. *தொழில் பாடல்கள்*
4. *கொண்டாட்டப் பாடல்கள்*
5. *உணர்ச்சிப் பாடல்கள்*
6. *ஒப்பாரிப் பாடல்கள்*
7. *பன்மலர்ப் பாடல்கள்*

8. மா. வரதராசன் அவர்கள் பத்தாக வகைப்படுத்துகிறார்.

1. *தாலாட்டுப் பாடல்கள்*
2. *குழந்தைப் பாடல்கள்*
3. *வேடிக்கைப் பாடல்கள்*
4. *கும்மி, ஒப்பாரிப் பாடல்கள்*
5. *காதல் பாடல்கள்*

*6. விவசாயப் பாடல்கள்*

*7. தொழில் பாடல்கள்*

*8. ஒப்பாரிப் பாடல்கள்*

*9. வேதாந்தப் பாடல்கள்*

*10. பல்சுவைப் பாடல்கள்*

9. பெ. தூரன் அவர்கள் பத்தாக வகைப்படுத்துகிறார்.

1. *மாட்டுக்காரன் பாட்டு*
2. *ஆக்காட்டி*
3. *ஏலேலோ ஜலசா*
4. *மழைப் பாட்டு*
5. *மழைக் காஞ்சி*
6. *கொடும்பாவி*
7. *உழவுப்பாட்டு*
8. *குலவைப்பாட்டு*
9. *கேலிப்பாட்டு*
10. *கும்மிப் பாட்டு*

10. ச. வளவன் அவர்கள் பருவ அளவு கோலாகக் கொண்டு மூன்றாகப் பகுக்கின்றார்.

1. *மழலை*
2. *இளமை*
3. *முதுமை*

11. க. கிருட்டிணசாமி அவர்கள் ஏழாக வகைப்படுத்துகிறார்.

1. *பக்தி*
2. *காதல்*
3. *மங்கல வாழ்த்து*
4. *தாலாட்டு*
5. *தொழில்*
6. *சமுதாயம்*
7. *ஒப்பாரி*

12. டாக்டர். நா. வானமாமலை அவர்கள் பொருள் அடிப்படையில் பத்தாக வகைப்படுத்துகிறார்.

1. *தெய்வங்கள்*
2. *மழையும், பஞ்சமும்*
3. *தாலாட்டு*
4. *விளையாட்டு*
5. *காதல்*
6. *திருமணம்*
7. *குடும்பம்*
8. *சமூகம்*
9. *உறவும் தொழிலும்*
10. *ஒப்பாரி*

13. டாக்டர். சு. சண்முகசுந்தரம் அவர்கள் ‘தமிழில் நாட்டுப்புறப் பாடல்கள்’ என்ற நூலில் பாடல்களை ஒன்பதாக வகைப்படுத்துகிறார்

1. *தாலாட்டுப் பாடல்கள்*
2. *குழந்தைப் பாடல்கள்*
3. *தொழில் பாடல்கள்*
4. *காதல் பாடல்கள்*
5. *மண வாழ்த்து*
6. *பக்திப் பாடல்கள்*
7. *ஒப்பாரிப் பாடல்கள்*
8. *ஆட்டப் பாடல்கள்*
9. *கதைப் பாடல்கள்*

14. டாக்டர் ஆறு. இராமநாதன் அவர்கள் எட்டாகப் பகுக்கின்றார்.

1. *தாலாட்டுப் பாடல்கள்*
2. *குழந்தைப் பாடல்கள்*
3. *காதல் பாடல்கள்*
4. *தொழில் பாடல்கள்*

*5. கொண்டாட்டப் பாடல்கள்*

*6. பக்திப் பாடல்கள்*

*7. ஒப்பாரிப் பாடல்கள்*

*8. பல்பொருள் பற்றியப் பாடல்கள்*

15. டாக்டர். சு. சக்திவேல் அவர்கள் சூழல் (Context) அடிப்படையில் எட்டாக வகுத்து, உட்பிரிவுகளையும் வகைப்படுத்தியுள்ளார்.

| | |
|---|---|
| 1. தாலாட்டுப் பாடல்கள் | குழந்தை பற்றியன<br>குழந்தைக்குரிய கருவி பற்றியன<br>குழந்தைகளின் உறவினர் பெருமை பற்றியன |
| 2. குழந்தைப் பாடல்கள் | குழந்தை வளர்ச்சி நிலைப்பாடல்கள் (குழந்தைப் பாடல்கள்) மற்றவர்கள் பாடும் சிறுவர் பாடல்கள் |
| 3. காதல் பாடல்கள் | |
| 4. தொழில் பாடல்கள் | வேளாண்மைத் தொழில் பாடல்கள், வேளாண்மையல்லாத தொழில் பாடல்கள் |
| 5. கொண்டாட்டப் பாடல்கள் | அகப்பாடல்கள் (குடும்பம்)<br>புறப்பாடல்கள் (சமூகம்) |
| 6. பக்திப் பாடல்கள் | இயற்கை வழிபாட்டுப் பாடல்கள்<br>சிறு தெய்வப் பாடல்<br>பெருந்தெய்வப் பாடல் |
| 7. ஒப்பாரி | |
| 8. பன்மலர்ப் பாடல்கள் | |

1. தாலாட்டுப் பாடல்கள்
2. குழந்தைப் பாடல்கள்
3. காதல் பாடல்கள்
4. தொழில் பாடல்கள்
5. கொண்டாட்டப் பாடல்கள்
6. பக்திப் பாடல்கள்
7. ஒப்பாரிப் பாடல்கள்
8. பன்மலர்ப் பாடல்கள்

## தாலாட்டுப் பாடல்கள்

**1. குழந்தையைப் பற்றியன**

குழந்தை இல்லாக் காலத்து
தாய் பட்ட வேதனைகள்
குழந்தைப் பேற்றை விரும்பிச்
செய்த அறங்கள் குழந்தைப்
பேற்றை விரும்பிச் செய்த
நோன்புகளும், தவங்களும்
குழந்தை அழுவதற்குரிய
காரணங்கள் குழந்தை
பிறந்ததின் காரணங்கள்
குழந்தையை வர்ணித்தல்
குழந்தையின் வருங்காலம்
குழந்தைக்காகச் செய்யப்படும்
சடங்குகள் குழந்தையை
அடித்தவர்குரிய
தண்டனைகள்
குழந்தையின் மணவிழா பற்றி
நினைத்தல் குழந்தைக்குரிய
அறிவுரை

**2. குழந்தைக்குரிய கருவிகளைப் பற்றியன**

சங்குப் பாலாடை
வெள்ளிப் பாலாடை
பொற் பாலாடை
புதுத் தொட்டில்
கிண்ணி
அரைஞாண் கயிறு
(வெள்ளி)
குப்பி

**3. குழந்தைகளின் உறவினர் பெருமை, சிறுமை பற்றியன**

உறவினர்களுடைய
செல்வம்
உறவினர்களுடைய
அறச்செயல்கள்
உறவினர்களுடைய
பக்தி
உறவினர்களுடைய
வீரமும், தீரமும்
உறவினர்களுடைய
சிறுமை

**குழந்தைப் பாடல்கள்**

**குழந்தைப் பாடல்கள் (குழந்தைக்காக மற்றவர்கள் பாடுதல்)**

- தவழல்
- உண்ணல்
- சாய்ந்தாடல்
- கைவீசல்
- கைதட்டல்
- அம்புலி

**குழந்தைகள் சிறுவர்களாக வளர்ச்சி பெற்றுப் பாடும் பாடல்கள்**

- நாப்பயிற்சிப் பாடல்கள் (Tongue Twister Songs)
- எண்ணுப் பயிற்சிப் பாடல்கள்
- அறிவு வளர்ச்சிப் பாடல்கள்
- நீதிப் பாடல்கள்
- பக்திப் பாடல்கள்
- பறவை, மிருகங்களைப் பற்றிய பாடல்கள்
- விழாக்களில் பாடப்படும் பாடல்கள்
- வேடிக்கைப் பாடல்கள்
- வினாவிடைப் பாடல்கள்
- விளையாட்டுப் பாடல்கள்
  - சிறுவர் விளையாட்டுப் பாடல்
  - சிறுமியர் விளையாட்டுப் பாடல்
  - சிறுவர் சிறுமியர் விளையாட்டுப் பாடல்

| | | |
|---|---|---|
| **4. தொழில் பாடல்கள்** | **வேளாண்மைத் தொழில் பாடல்கள்** | ஏற்றப் பாடல் |
| | | ஏர்ப் பாடல் |
| | | நடவுப் பாடல் |
| | | களை எடுப்புப் பாடல் |
| | | அறுவடைப் பாடல் |
| | | போரடிப் பாடல் |
| | **வேளாண்மையல்லாத தொழில் பாடல்கள்** | நெல் குத்துவோர் பாடல் |
| | | சுண்ணாம்பு இடிப்போர் பாடல் |
| | | சாலை அமைப்போர் பாடல் |
| | | கிணறு வெட்டுவோர் பாடல் |
| | | உப்பளத் தொழிலாளர் பாடல் |
| | | துறைமுகத் தொழிலாளர் பாடல் |
| | | படகுக் காரன் பாடல் |
| | | மீனவர் பாடல் |
| | | வண்டிக்காரன் பாடல் |

| **5. கொண்டாட்டப் பாடல்கள்** | |
|---|---|
| **குடும்பம் பற்றியது (அகம்)** | **சமூகம் பற்றியது (புறம்)** |
| திருமணப் பாடல்கள்<br>பரிகாசப் பாடல்கள்<br>நலுங்குப் பாடல்கள்<br>வளைகாப்புப் பாடல்கள் | கும்மிப் பாடல்கள்<br>கோலாட்டப் பாடல்கள் |

| **6. பக்திப் பாடல்கள்** | | |
|---|---|---|
| **இயற்கை வழிபாட்டுப் பாடல்கள்** | **சிறு தெய்வ வழிபாட்டுப் பாடல்கள்** | **பெருந் தெய்வ வழிபாட்டுப் பாடல்கள்** |

| | |
|---|---|
| **7. ஒப்பாரிப் பாடல்கள்** | கணவனுக்காக |
| | தாய்க்காக |
| | தந்தைக்காக |
| | குழந்தைக்காக |
| | மகளுக்காக |
| | சகோதரர்களுக்காக |
| | மாமனாருக்காக |
| | மாமியாருக்காக |
| | அண்ணிக்காக |
| | அத்தைக்காக |

**தாலாட்டுப் பாடல்கள்**

தாய்மை உணர்வின் வெளிப்பாடகவே தாலாட்டு மலர்கின்றது. தாயின் நாவசைவில் தாலாட்டு என்னும் நல்முத்துப் பிறக்கின்றது. எனவே தான் ‘தாய்மை உலகிற்கு வழங்கிய முதல் இலக்கியப்

பரிசுதான் தாலாட்டு' என்பார். தமிழண்ணல். தாலாட்டு என்ற சொல்லைத் தால் + ஆட்டு எனப் பிரிக்கலாம். தால் என்றால் நாக்கு என்றும், நாவை ஆட்டிப் பாடுவதால் தாலாட்டு எனும் பெயர் பெற்றிருக்க வேண்டும் என்றும் கூறுவர். தாலாட்டு என்ற சொல் சில இடங்களில் 'ராராட்டு' என வழங்கி வருகிறது. மேலும், தாலாட்டைத் தாராட்டு, தாலேலோ, ஓராட்டு, ரோராட்டு, ராராட்டு, தொட்டில் பாட்டு, ஓலாட்டு, திருத்தாலாட்டு என்று கூறுவது போன்று மலையாளத்தில் 'தாராட்டு' என்றும்கில் 'ஊஞ்சோதி' என்றும் கன்னடத்தில் தெலுங்கு 'ஜோகுல' என்றும் கூறுவர். 'இருவர் கொள்ளும் காதலைவிட, உடன் பிறந்தார் கொள்ளும் வாஞ்சையை விட, ஏன் உலகளக்கும் அருளினையும்விட, பிள்ளைப் பாசமே ஆழமானது, வலிமை மிக்கது, உணர்ச்சிமயமானது. இத்தகைய தாயும், சேயும் என்ற உறவுப் பிணைப்பிலே பிறந்த இயற்கைத் கலைதான் தாலாட்டு என்று தமிழண்ணலும், 'தாய் ஆழங்காண முடியாத அன்புக் கடல், அக்கடலில் விளைந்த வலம்புரி முத்தே தாலாட்டு' என்று டாக்டர் ஆறு. ஆழகப்பனும் கூறுகின்றனர். இத்தகைய தாலாட்டு மனிதகுலத் தொடக்க முதல் தொடர்ந்து வருகின்றது. உலகின் தாய்மையும், சேய்மையும் இருக்கும் வரை பாசமும், பற்றும் உள்ள வரை பாடலும், இசையும் நிலவும் வரை மனித சமுதாயத்தில் தாலாட்டுகள் இருக்கும். 'நடையழகில் ஜெயங்கொண்டானையும், இனிமையில் இளங்கோவையும், கற்பனையில் கம்பனையும், சொல்லாட்சியில் மணிவாசகரையும், நாகரிக விளக்கத்தில் சங்கப் புலவர்களையும் ஒப்புவமையாகப் பெற்றுப் பெருமையாக விளங்குகிறது. தாலாட்டு என்பார் தழிழண்ணல் தாலாட்டில் தாய்மையின் தவிப்பும் பூரிப்பும் எதிர்பார்ப்புகளும் வைகறையின் வசந்தங்களும் இறைவனின் இனிய நாமங்களும் வரலாற்றுப் பெட்டகங்களும் நிறைந்திருப்பதைக் காணலாம்.

தாலாட்டுப் பாடல்களைக் கருவாகக் கொண்டு எழுந்த இடைக்கால இலக்கியங்கள் 'தாராட்டு' என்றும், பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்கள் 'தாலேலோ' என்றும் குறிப்பிடுகின்றன. தமிழ் மொழியில் முதன் முதலாகத் தாலாட்டுப் பாடியவர் பெரியாழ்வார் ஆவார். தொல்காப்பியத்திலும் தாலாட்டின் கூறு பற்றிக் கூறப்பட்டுள்ளது.

'குழவி மருங்கினும் கிழவதாகும்' (புறத்திணை – 82) என்றும் 'கண்படை கண்ணிய கண்படை நிலையும்' என்று தொல்காப்பியர் கூறுகின்றார். சங்க இலக்கியமான பரிபாடலின் தாலாட்டு என்ற சொல்லாட்சி காணப்படுகின்றது.

***வரையழி வாலருவி வாதாலாட்ட ( 6-52)***
***பெரியாழ்வார் கண்ணைத் தொட்டிலிலிட்டு,***
***மாணிக்கங் கட்டி***
***வயிரம் இடைகட்டி***
***-------------------------***

***தாலேலோ***

என தாலாட்டுகிறார். பெரியாழ்வாரைத் தொடர்ந்து குலசேகர ஆழ்வாரும் இராமனைக் குழந்தையாகப் பாவித்துத் தாலாட்டுகிறார். களவியலுரை, தேவாரம், முத்தொள்ளாயிரம், கம்ப இராமாயணம், விறலிவிடு தூது போன்ற தமிழ் இலக்கியங்களிலும் தாலாட்டுப் பற்றிய குறிப்புகள் காணக்கிடக்கின்றன. தாலாட்டிற்கு 'ஓலுறுத்தல்' எனும் சொல்லாட்சி பெருங்கதையிலும் சூளாமணியிலும் காணப்படுகின்றது. சீராட்டுதல் என்ற சொல்லாட்சி தாலாட்டுதல் என்ற பொருளையும் தருவதைப் பிரபுலிங்கலீலை மூலம் அறிகிறோம். பதினைந்தாம் நூற்றாண்டு முதல் தாலாட்டு பிரபந்த நிலையை அடைந்தது. புதிய பிரபந்த வகைகள் ஒன்றான பிள்ளைத் தமிழ் என்ற பிரபந்தத்தில் தாலப்பருவம் என்ற பருவத்தை அமைத்துக் குழந்தை தாலாட்டுவதையே அப்பருவத்திற்குரிய பொருளாகக் கொண்டனர். தாலாட்டு

சிற்றிலக்கியமாக இருந்த நிலை மாறி தனிப்பாடல் நிலையைப் பாரதிக்குப் பின் பெற்றது.

தாலாட்டுப் பாடல்கள் குறுகிய அளவு உடையன. ஆனால் பெரும்பாலான தாலாட்டுப் பாடல்களுக்கு அடிவரையறை இல்லையென்றே கூறலாம். தாயின் மனநிலைக்கேற்பவும் குழந்தையின் உறக்கநிலைக்கேற்பவும் தாலாட்டுப் பாடல்கள் பெரிதாகவோ அல்லது சிறிதாகவோ இருக்கும். தாலாட்டின் பண் நீலாம்பரி ஆகும். தாய்மார்கள் நினைத்தபோது நினைத்தபடி பாடுவதால் தாலாட்டுப் பாடல்களில் பாட வேறுபாடு இருப்பதை காணலாம். தாலாட்டுப் பாடல்களில் தொடக்கம் வெறும் நாவசைகளின் ஒலிகளேயாகும்.

தாலாட்டின் பாடற்பொருளை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. *குழந்தையைப் பற்றியன*
2. *குழந்தைக்குரிய கருவிகளைப் பற்றியன*
3. *குழந்தைகளின் உறவினரைப் பற்றியன*

ஆணும், பெண்ணும் இணைந்து வாழ்கின்ற வாழ்விலே பிள்ளைக்கனியமுது ஒன்று பெற்றிட வேண்டும் என்று அனைவரும் விரும்புவது இயற்கையே. அப்பிள்ளைக்கனியமுது இல்லாவிட்டால் அவர்களது வாழ்க்கை பற்றுக்கோடு இல்லாமல் போவதாலும், அவர்களது குலக்கொம்பு வளர வாய்ப்பில்லாமல் போவதாலும் சமூகம் அவர்களை மலடி, மலடி என்று தூற்றுவதாலும் பிள்ளைப்பேற்றை அனைவரும் விரும்புகின்றனர். பிள்ளைக்கனியமுதுக்காக ஏங்கும் பாடலை இங்குக் காண்போம்.

***'கிண்ணியிலே போட்ட சோற்றைக்***
***கீறித் தின்னப் பிள்ளை இல்லை***
***ஊருக்குப் போகையிலே***
***உடன்வரப் பிள்ளை இல்லை'***

என்று வருத்தத்தோடு,

*‘பூக்கிற காலத்திலே*

*பூமாறிப் போனேனே!*

*காய்க்கிற காலத்திலே*

*காய்மாறிப் போனேனே’*

என்று வெந்து சாகின்றாள்.

ஒரு தாய் மகப்பேற்றை விரும்பித் தான் செய்த தான் தருமங்களை ஒரு தாலாட்டில் அடுக்கிக் கூறுகிறாள்.

*‘எட்டாத கோவிலுக்கு*

*எட்டி விளக்கேற்றி*

*தூரத்துக் கோவிலுக்குத்*

*தூண்டா விளக்கேற்றி*

*சோதி பரதேசிகளுக்குத்*

*தூமடமும் கட்டிவைத்து*

*நல்ல தண்ணீர்க் கிணறுகளும்*

*……. கட்டி வைத்து’*

என்று பாடுகிறாள்.

வரம் பெற்றுப் பிறந்த குழந்தையைத் தாய் வருணிக்கிறாள்.

*“மாசிப் பிறையோ நீ வைகாசி மாங்கனியோ*

*தேசப் பிறையோ நீ தெவிட்டாத மாங்கனியோ*

*எங்கள்குலம் மங்காமல் எதிர்குலத்தார் ஏசாமல்*

*தங்கமலி பொக்கிஷத்தை தானாய வந்தகண்ணோ’*

என்று வருணிக்கிறாள்.

தாய் தான் பெற்ற பிள்ளையமுதைத் தொட்டிலிலிட்டு ஆட்டுகின்றாள். தாலாட்டும்பொழுது அவள் உள்ளத்திலே ஆயிரம் கற்பனைகள். அக்கற்பனைகளெல்லாம் தாலாட்டுப் பாடல்களில் வெளி வருகின்றன. தாய்மாமன் வாங்கி வந்து பாலூட்டும் சங்கின் அழகை ஒரு தாய் தனது தாலாட்டுப் பாடலில் கூறுகின்றாள்.

*‘கடைக்குக் கடை பார்த்துக்*

***கல்லிழைத்த சங்கெடுத்துச்***
***சுத்திச் சிசுப்பிழைத்துத்***
***தூருக்கே பச்சைவைத்து***
***வாய்க்கு வயிரம் வைத்து***
***வாங்கி வந்தார் தாய்மாமன்'***

தாலாட்டு தாய்க்குரிய இலக்கியமாகையால் அதில் தாய்மாமனின் பெருமையும் அவர்கள் தரும் சீர் வரிசைகளின் சிறப்பும் சிறப்பாகச் சொல்லப்படுகின்றன. பொதுவாகப் பெண்களை வரும் தாய்வீட்டுப் பெருமையைப் பேசிக் கொள்வதிலேயே பெருமை அடைவார்கள். குழந்தையின் தாய்மாமனுடைய செல்வச் செழிப்பையும் மகனின் கல்வியறிவையும் ஒருசேர இணைத்துப் பார்க்கும் தாயுள்ளம் அதனைப் பாட்டாக வடிக்கின்றது.

***'வெள்ளியால் செய்த ஏட்டில்***
***வைர எழுத்தாணி கொண்டெழுத***
***பள்ளியில் சேர்க்க மாமன்***
***பரிவுடன் வந்திடுவார்'***

தாலாட்டு என்ற சொல்லாட்சி பற்றியும், தாலாட்டின் அமைப்பு, தோற்றம், வளர்ச்சி பற்றியும், தாலாட்டின் பாடற் பொருளான குழந்தையைப் பற்றியும், குழந்தைகளின் கருவியைப் பற்றியும், குழந்தையின் உறவினரைப் பற்றியும் மிகச் சுருக்கமாகக் கண்டோம்.

## 1. குழந்தைப் பாடல்கள்

உலகில் ஈடு இணையற்ற செல்வம் குழந்தைச் செல்வம். குழந்தைச் செல்வம் 'குறுகுறு நடந்து சிறுகை நீட்டி இட்டும் தொட்டும் கௌவியும் துழந்தும் நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும் குறும்பு செய்து மழலை பேசி' நம்மை மகிழ்விக்கிறது. மான்போலத் துள்ளி, மலர் போல சிரித்து, தேன் போலப் பேசித் திரியும் பருவம் குழந்தைப் பருவம். அப்பருவத்தில் எழும் பாடல்கள் பல. குழந்தைகளுக்காகக்

குழந்தையைப் பெற்ற தாயும், தந்தையும், தமக்கையும், குழந்தையின் பாட்டியும் பாடும் பாடல்களும் உள. அவையும் குழந்தைகளுக்காகப் பாடும் பாடல்களே.

குழந்தை உலகப் பாட்டுகள் குழந்தை உள்ளத்தைப் புலப்படுத்துவனவாக அமைந்திருக்கும். டாக்டர் ஆறு. அழகப்பன் கூறுவது போல குழந்தைப் பாடல்களுக்குப் பதவுரை, நயவுரை என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. பெரும்பாலான குழந்தைப் பாடல்களில் பொருளுள்ள பாடல்களைக் காணமுடியாது. ஓசை நிறைவுள்ள பாடல்களே அதிகம் காணப்படும். இப்பாடல்களை எளிதாகப் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் எளிமையும், இனிமையும் இருக்கும். வட்டார வழக்குச் சொற்களையும் ஆங்கிலச் சொற்களையும் நிறையக் காணலாம்.

குழந்தைப் பாடல்களை இருவகையாகப் பிரிப்பர். ஒன்று குழந்தைகள் பாடுவது. மற்றொன்று குழந்தைகளுக்காக மற்றவர்கள் பாடுவது. பெற்று வளர்த்த தாய், தந்தை, உடன் பிறந்த தமக்கை, பாட்டி முதலியோர் பாடுவர். ‘குழந்தைகளே பாடும் பாடல்களை ஆண் குழந்தைகள் பாடும் பாடல்கள் என்றும், இருவரும் இணைந்து பாடும் பாடல்கள் என்றும் இருவரில் யார் வேண்டுமானாலும் பாடும் பாடல்கள் என்றும் நான்கு வகையாக டாக்டர். சு. சண்முகசுந்தரம் பகுக்கின்றார். டாக்டர். தி. நடராசன் அவர்கள் சிறுவர் பாடும் நாட்டுப்புறப் பாடல்களை முதற்கண் இருவகையாகப் பாகுப்படுத்தலாம் என்கிறார்.

1. ***விளையாட்டின் பொழுது பாடுவது (Play Songs)***
2. ***ஓய்வானபொழுது பாடுவது (Pastime or recreation Songs)***

குழந்தை பாடல்களுக்கென்று சில அமைப்புகள் உள. அவை அமைப்பில் தாலாட்டையும், ஒப்பாரியையும், தெம்மாங்கையும் விட வேறுபட்டுத் தோன்றுகின்றன. குழந்தைப் பாடல்களின் எளிய அமைப்பைக் கொண்டு அதனைப் புரிந்து கொள்ளலாம். ஈரடிப் பாடல்களும் நீண்ட பாடல்களும் உண்டு. சில பாடல்கள் வினா, விடை

முறையில் அமைந்திருப்பதையும் காணலாம். குழந்தைப்பாடல்கள் இப்பொருளைப் பற்றி தான் இருக்கும் என்று கூற முடியாது. இயற்கைப் பொருட்களும், செயற்கைப் பொருட்களும், விளையாட்டும் வேடிக்கையும் குழந்தைப் பாடல்களின் பாடற் பொருளாகின்றன.

குழந்தை வளர்ச்சி நிலையின் ஒவ்வொரு கட்டத்திலும் பாடல்கள் மாறுபடுகின்றன. குழந்தை தவழும்போதும் உண்ணும் போதும் சாய்ந்தாடும் போதும் கை வீசும் போதும் உற்றாரும் பெற்றோரும் பாட்டுப்பாடுவர். குழந்தைகள் ஓடி ஆடி விளையாடும் சிறுவர்களாக மாறி வளர்கின்ற நிலையில் அவர்கள் பாடும் பாடல்கள் முன்னைய நிலையினின்றும் மாறுபடுகின்றன. இப்பாடல்கள் குழந்தைகளால் பாடப்படுவனவாகும். சிறுவர் உலகம் விந்தையான உலகம். குாக்கை கதை சொல்லும், குயில் பாடும், மலர் சிரிக்கும், நிலவு பேசும், விண்மீன் விளையாடும் வாழ்க்கைக்குப் பயிற்சியளிக்கும் விளையாட்டுகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவ்விளையாட்டுப் பாடல்களை உடற்பயிற்சி விளையாட்டுப் பாடல்கள் (Physical Play Songs) வாய்மொழி விளையாட்டுப் பாடல்கள் (Verbal Play Songs) என இரண்டாக பகுக்கலாமென டாக்டர். ஆறு. இராமநாதன் கூறுகிறார். பொதுவாகச் சிறுவர் பாடும் பாடல்களை நாப்பயிற்சி பாடல்கள், நீதிப் பாடல்கள், பக்திப்பாடல்கள், பறவை மிருகங்களைப் பற்றிய பாடல்கள், விழாக் காலப் பாடல்கள், வேடிக்கைப் பாடல்கள், வினாவிடைப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள் எனப் பத்து வகையாகப் பகுக்கலாம். விளையாட்டுப் பாடல்களையும் சிறுவர் விளையாட்டுப் பாடல்கள், சிறுமியர் விளையாட்டுப் பாடல்கள், சிறுவர் சிறுமியர் விளையாட்டுப் பாடல்கள், சிறுவர் சிறுமியர் விளையாட்டுப் பாடல்கள் என மேலும் பகுக்கலாம் சில குழந்தைப் பாடல்களை இங்குக் காண்போம்.

**சடுகுடு விளையாட்டுப் பாடல்**

*‘சடுகுடு மயிலைலே ரெண்டானே*
*தவறி விழுந்தது கிழட்டானே*
*தூக்கி விட்டது இளவட்டம்*
*இளவட்டம் இளவட்டம்’*

**எண்ணுப் பயிற்சி பாடல்**

*ஒரு குடம் தண்ணிமொண்டு*
*ஒரே பூ பூத்ததாம்*
*இரண்டு குடம் தண்ணிமொண்டு*
*இரண்டே பூ பூத்ததாம்*
*மூன்று குடம் தண்ணிமொண்டு*
*மூன்றே பூ பூத்ததாம்*
*நான்கு குடம் தண்ணிமொண்டு*
*நான்கே பூ பூத்ததாம்*
*ஐந்து குடம் தண்ணிமொண்டு*
*ஐந்தே பூ பூத்ததாம்*
*……………………..*
*…………………………..*

சிறு குழந்தைகளுக்கு ஒன்று முதல் பத்து வரை உள்ள எண்களைக் கற்றுக் கொள்ளும் பொருட்டு மேலே கண்ட பாடல் களைப்பாடுவர்.

**வினா விடைப் பாடல்**

*தேன் தேன்*
*என்னாத் தேன்*
*கொம்புத் தேன்*
*என்னாக் கொம்பு*
*மான் கொம்பு*
*என்னா மான்*

*காட்டு மான்*

*என்னா காடு*

*ஆற்காடு*

*என்னா ஆறு*

*பாலாறு*

*என்னாப் பால்*

*கள்ளிப் பால்*

*என்னாக் கள்ளி*

*எலை கள்ளி*

*என்னா எலை*

*வாழ எலை*

*என்னா வாழை*

*கல் வாழை*

*என்னாக் கல்*

*திண்டுக்கல்*

### 3. காதற் பாடல்கள்

அகத்தின்கண் மறைந்தும் புறத்தின் கண் புலப்பட்டும் மெய்ப்பாடுகளால் தாக்கப்பெறும் வலிய சக்தியே காதல். ஆண் பெண் என்ற தத்துவத்தின் வித்தாகவும், அவற்றின் வாழ்வுக்கும் வளமைக்கும் அடிப்படையாகவும் காதல் விளங்குவதைக் காணலாம். மனித இனம் தோன்றிய அன்றே காதல் உணர்வுகளும் தோன்றியிருக்க வேண்டும். தமிழர்கள் காதலையும், வீரத்தையும் இரு கண்களாகப் போற்றினர். மனித வாழ்வில் இன்ப துன்பமும் கலந்திருப்பதைப் போன்று இன்பம் உணர்ச்சிக்குக் காதல் பாட்டுகளையும், அன்பு என்ற உணர்ச்சிக்குத் தாலாட்டுகளையும், துன்பம் என்ற உணர்ச்சிக்கு ஒப்பாரி பாடல்களையும் எடுத்துக்காட்டாகக் கூறுவர். பருவமடைந்த இரு உள்ளங்கள் ஒன்றாகச் சேர வேண்டும் என்ற வேட்கையால் எழும் உணர்ச்சி எல்லா மனங்களுக்கும் பொதுவானதாகும். உளவியலார் கூறுவது போன்று

மனிதன் பிறக்கும் போதே அவ்வுணர்வு தன்னோடு இருப்பினும், பருவம் அடையும் போதே அவ்வுணர்வு மலர்ந்து மணம் வீசுகிறது. அவ்வுணர்வுகளை வெளிப்படுத்தும் வடிகாலாக இக்காதல் பாட்டுகள் உள்ளன.

இலக்கியக் காதலும் நாட்டுப்புறக் காதலும் சில வகையில் ஒன்றுபட்டும் சில வகையில் வேறுபட்டும் நிற்கின்றன. தலைவன், தலைவி வனப்பு நோக்கிக் காதல் உண்டாவது இலக்கியக் காதல். உறவின் அடிப்படையில் எழுதுவது நாட்டுப்புறக்காதல். நாட்டுப்புறக் காதலில் காதலன் பெயரைக் கூறுவது சர்வ சாதாரணமாகக் காணப்படுகின்றது. இலக்கியத் தோழியை இங்குக்க காண முடியாது. காதலனும், காதலியும் நேருக்கு நேர் சந்தித்துத் தமது இன்ப, துன்பங்களையும் விருப்பு, வெறுப்புகளையும் பகிர்ந்து கொள்கின்றனர். இலக்கியக் காதலைப் போன்றே நாட்டுப்புறக் காதலிலும் கைக்கிளையும் பெருந்திணையும் உண்டு.

காதல் பாடல்களை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று காதலர்களே பாடுவது. மற்றொன்று காதலர்கள் அல்லாதவர்கள் தொழில் செய்யும் போது காதல் பாட்டுகள் பாடுவது. ஆனால் பெரும்பாலும் நாட்டுப்புறக் காதல் தொழில் செய்யுமிடங்களில் தான் பிறக்கிறது. வண்டிக்காரன் பாடும் தெம்மாங்குப் பாடல்களில் காதல் சுவையைக் காணலாம். உறவில் இன்பம் காண்பதும் பிரிவில் வேதனையடைவதும் இவர்களது பாடற் பொருளாகும்.

காதலர்கள் சந்திக்கும் பொழுது பகற்குறி, இரவுக்குறி முதலியவற்றைக் குறித்தலும், பகற்குறியிடையீடு, இரவுக்குறியிடையீடு ஏற்படுதலும், அதனை நினைத்து வேதனைப்படுவதும் நாட்டுப்புறக் காதலில் காண்கிறோம். சந்திப்பு வளர வளரத் திருமணம் செய்து கொள்ளும் உறுதிமொழியும் பிறக்கிறது. இதற்கிடையே ஊடலும், ஊடல்தணிதலும், பிரிவும் பிரிவகற்றலும், இற்செறித்தலும் உடன்போக்கும் நடைபெறுகின்றது. பரத்தையை நாடிச் செல்வதையும், கள்ளக்காதலையும் அதன் விளைவாக விவகாரத்தையும் காண்கிறோம்.

இலக்கியத்தில் காணப்படும் களவு, கற்பு போன்றவற்றை ஓரளவு நாட்டுப்புறப் பாடல்களிலும் காணலாம்.

தனது அன்புக் காதலியை வருணித்துத் தேர் பார்க்க வரும்படி ஆசையுடன் காதலன் அழைக்கிறான்.

***'அன்ன நடையழகி***
***அலங்கார உடையழகி***
***பின்னல் நடையழகி – செல்லம்மா***
***புறப்படம்மா தேருபார்க்க'***

என்று பாடுகிறான். அதற்கு அவள்,

***'மதன வடிவழகா***
***மாமோகச் சொல்லழகா***
***வண்ண உருவழகா – என் ஆசை மச்சானே***
***வரமாட்டேன் தேரு பார்க்க'***

என்கிறாள்.

நாட்டுப் புறக்காதலில் காதலனும், காதலியும் சந்தித்து நெருங்கி உறவாடினாலும் காதலியானவள் தனது கற்புக்குப் பங்கம் ஏற்படாது காப்பதில் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றாள். காதலன் எப்போதும் துடிப்பு மிக்கவனாகவே உள்ளான். அத்துடிப்பை ஒருவாறு ஆற்றுப்படுத்துகின்றாள். அந்நிகழ்ச்சியைக் கீழ்க்கண்ட பாடல்கள் மூலம் அறியலாம்.

***'மண்குடம் கொண்டு***
***மலையோரம் தண்ணிக்குப்போகும் - மாமன் மகளே***
***உன் இரண்டு மண்குடத்தின்***
***விலை என்ன?***

எனக் கேட்கிறான்.

***'மண்குடம் போனால்***
***மறுகுடம் வாங்கலாம்***
***மானம் போனால் - மாமன் மகனே***

*உலகம் என்ன சொல்லும்?'*

எனப் பதிலளிக்கிறாள்.

பரத்தையர் தொடர்பு, கள்ளக்காதல், மனக்கருத்து வேறுபாடு ஆகிய காரணங்களால் கணவன், மனைவியரிடையே உறவு முறிவதுண்டு. அவ்வாறு உறவுமுறிந்த பெண்ணொருத்தி தன் மனக்குமுறலைப் பாட்டாக வடிக்கின்றாள்.

*'கூடினமே கூடினமே*

*கூட்டுவண்டிக் காளைபோல*

*விட்டுப் பிரிஞ்சமையா*

*ஒத்தவண்டிக் காளைபோல'*

## தொழில் பாடல்கள்

இயற்கையைத் தனக்குச் சாதனமாகப் பயன்படுத்திக்கொள்ளும் செயலே பழங்காலத்தில் தொழில் எனக் கூறப்பட்டது. இன்று தொழிலே உலகத்தை இயங்கும் சக்தியாக வளர்ந்துள்ளது. 'வினையே ஆடவர்க்குயிரே' என்றும், செய்யும் தொழிலே தெய்வம்' என்றும் நம்புகின்றனர். பொதுவாக தொழில் புரியும் போது பாடும் பாடல்களைத் தொழில் பாடல் என்கிறோம். தோழிலின் சுமையும் உழைப்பின் களைப்பும் தெரியாமல் இருக்கப் பாடுகின்றனர். தோழிலாளர்கள் தன் வேதனைக்கு வடிகாலாகவும் பயன்படுத்துகின்றனர். மனிதர்கள் கூடித் தொழில் செய்யும் போது அக்கூட்டுறவிலே பிறப்பது தொழில் பாடல்கள். தொழில் பாடல்களிலே அன்பு மலர்வதையும், பாசம் பொங்குவதையும், உழைப்பின் ஆர்வத்தையும் நன்மையில் ஈடுபாட்டையும், தீமையில் வெறுப்பையும் காண்கிறோம். தொழில் பாடல்கள் தொழிலாளர்களது இன்ப, துன்பங்களையும் நெஞ்சக் குமுறல்களையும், ஆசாபாசங்களையும், விருப்பு வெறுப்புகளையும் வெளியிடுகின்றன. தொழில் பாடல்களை ஏலோலங்கிடி பாட்டு, தில்லாலங்கடி பாட்டு,

தெம்மாங்கு பாட்டு, ஏற்றப் பாட்டு, வண்டிக்காரன் பாட்டு என்றெல்லாம் வழங்குவர்.

தொழிற்பாடல்கள் சில குறியீடுகளுடன் தொடங்குகின்றன. விவசாயப் பாடல்களில் ஏலேலோக் குயிலே ஏலங்குடிலேலே ஏலேலே அன்னக்கிளி, ஏலேலோ குயிலே, பொலி பொலி பொலி என்றும், கப்பற் பாட்டுகளில் ஏலேலோ ஐலசா, ஏலை ஏலோ சல சலா என்றும், பாரந்தூக்குவோர்கள் ஐலசா, ஐலசா , ஏலம் பிடி ஏலம் என்றும் வண்டியோட்டுவோர் ஏலங்கிடிலேலோ என்றும் பாடுவர்.

தொழிற்பாடல்களில் அத்தொழில்களைப் பற்றிய குறிப்புகளைத் தவிர வேறுபல பொருட்களைப்பற்றியும் பாடுவர். தொழிற்பாடல்களில் தொழிலுக்கு அடுத்தப்படியாகக் காதல் இடம் பெறுவதுண்டு. வழிபாடுகளும், புராணக்கூறுகளும் இடம் பெறுகின்றன. தொழிற்பாடல்கள் மூலம் மக்கள் செய்த தொழில்களைப் பற்றியும், அதனாலேற்பட்ட ஏற்றத்தாழ்வுகளைப் பற்றியும் சமுதாய அமைப்பு பற்றியும் அறிகிறோம். இன்று தொழிற்பாடல்கள் சமுதாயத்தில் எழுச்சியையும் ஏற்படுத்துகின்றன.

## ஏற்றப்பாட்டு

ஏற்றம் இறைக்கும் போது பாடும் பாடல்களை ஏற்றப்பாட்டு என்பர். பயிர்த்தொழில் பாடல்களில் ஏற்றப்பாட்டிற்குத் தனிச்சிறப்பிடம் உண்டு. ‘ஏற்றப்பாட்டிற்கு எதிர்ப்பாட்டில்லை’ என்ற பழமொழி இதனைப் படம் பிடித்துக் காட்டுகிறது. ஏற்றம் இறைக்கத் தொடங்குமுன் உழவர்கள் தாங்கள் வழிபடும் தெய்வங்களை அருள்புரிய வேண்டும் என விரும்புவர்.

***‘பெருமாளே வாரீர்***
***சிவனாரே வாரீர்***
***சிவனும் பெருமாளும்***
***சேர்ந்து மடலேறும்***
***அரியும் சிவனும்***

*அமர்ந்து மடலேறும்'*

ஏற்றம் இறைக்கச் செல்லும் நேரம் வைகறைப் பொழுதாகும். இலைகள் மீதும் புல்லின் மீதும் பனித்துளிகள் முத்து முத்தாய் விளங்குகின்றன. அதைக்கண்ட நாட்டுப்புறப் பாவலன் அக்காட்சியைத் தனது ஏற்றப்பாடலில் வடிக்கின்றான்.

*'மூங்கில் இலைமேலே*

*தேங்கும் பனிநீரே!*

*கோவை இலைமேலே*

*கொள்ளும் பனிநீரே!*

*பாவை இவைமேலே*

*படரும் பனிநீரே!*

*வாழை இலைமேலே*

*படரும் பனிநீரே!'*

**படகுக்காரன் பாட்டு**

நதியிலே படகு மிதந்து செல்கிறது. மாலைச் செவ்வானம் நீரிலே பிரதிபலிக்கிறது. படகிலே படகோட்டியும் காதலியும் உள்ளனர். அவன் உள்ளத்திலே இன்பம் பொங்கி வழிகிறது. படகோட்டி இனியநாதம் இசைக்க ஆரம்பிக்கிறான். 'மண்ணை நம்பி' என்று அவன் பாட 'ஏலேலோ' என்று அவள் கூற 'மரமிருக்க' என்று அவன் பாட, 'ஐலசா' என அவள் பாடுகிறாள். அவள் ஏலேலோ ஐலசா என்று கூறாவிட்டால் பாட்டுக்குத் தாளமே அமைவதில்லை.

*'மண்ணை நம்பி – ஏலேலோ*

*மரம் இருக்க – ஐலசா*

*மரத்தை நம்பி – ஏலேலோ*

*கிளை யிருக்க – ஐலசா*

*கிளையை நம்பி – ஏலேலோ*

*கோல் இருக்க – ஐலசா*

*கோலை நம்பி – ஏலேலோ*

*இலை யிருக்க – ஐலசா*

*இலையை நம்பி – ஏலேலோ*

*பூ விருக்க – ஐலசா*

*பூவை நம்பி – ஏலேலோ*

*பிஞ்சிருக்க – ஐலசா*

*பிஞ்சை நம்பி – ஏலேலோ*

*காயிருக்க – ஐலசா*

*காயை நம்பி – ஏலேலோ*

*பழ மிருக்க – ஐலசா*

*பழத்தை நம்பி – ஏலேலோ*

*நீ யிருக்க – ஐலசா*

*உன்னை நம்பி – ஏலேலோ*

*நானிருக்கேன் ஐலசா!*

மண்ணிலிருந்து தொடங்கி பழம் வரை சென்று **'உன்னை நம்பி நானிருக்கேன்'** என்று தொடர்புபடுத்தி முடிக்கிறான் படகுக்காரன். மண்ணில் தொடங்கி கனிக்குமேல் கனியாக அவளைக் காண்பதற்குத்தான் என்பதை நேரடியாகக் கூறாமல் எங்கேயோ ஆரம்பித்து, அழகிய நிலைக்களனை ஏற்படுத்தி அதன் முடிவாக முக்கியக் கருத்தை அமைக்கிறான் நாட்டுப்புறப் பாவலன்.

**மீனவர் பாடல்**

மீனவர்கள் இரவில் சென்று கடலில் மீன் பிடிக்கும்போது நட்சத்திரங்கள்தாம் அவர்களுக்கு விளக்காகும். பரந்த கடலே அவர்களுக்குப் பயிற்சியளிக்கும் பள்ளிக்கூடம், அலையே அவர்களது தோழர்கள். மேகமே ஆடையாகவும், புயலே ஊஞ்சலாகவும், பனிமூட்டமே போர்வையாகவும், காயும் வெயிலே கூரையாகவும், கட்டுமரமே வீடாகவும், மீன்வலையே அரிச்சுவடியாகவும், பிடிக்கும்

மீன்களே வாழ்வுக்குரிய பொருளாகவும், வெண்மணலே பஞ்சு மெத்தையாகவும், முழு நிலலே கண்ணாடியாகவும் கொண்டு வாழ்கின்றனர். மீனவரது வாழ்வையே படம் பிடித்துக் காட்டும் இப்பாடலைக் காண்போம்.

*‘விடிவெள்ளி நம்விளக்கு – ஜலசா*
*விரிகடலே பள்ளிக்கூடம் - ஜலசா*
*அடிக்கும் அலையே நம்தோழன் - ஜலசா*
*அருமைமேகம் நமதுகுடை – ஜலசா*
*பாயும் புயல் நம் ஊஞ்சல் - ஜலசா*
*பனிமூட்டம் உடல்போர்வை – ஜலசா*
*காயும் ரவிச்சுடர்கூரை – ஜலசா*
*கட்டுமரம் வாழும் வீடு – ஜலசா*
*மின்னல்வலை அரிச்சுவடி – ஜலசா*
*பிடிக்கும் மீன்கள் நம்பொருட்கள் - ஜலசா*
*மின்னல் இடிகாணும் கூத்து – ஜலசா*
*வெண்மணலே பஞ்சுமெத்தை – ஜலசா*
*முழுநிலாதான் கண்ணாடி – ஜலசா*
*மூச்சடக்கி நீந்தல் யோகம் - ஜலசா*
*தொழும் தலைவன் பெருவானம் - ஜலசா*
*தொண்டு தொழிலாளர் நாங்கள் - ஜலசா*

**வண்டிக்காரன் பாட்டு**

வண்டியோட்டும் காளையொருவன் ஒருத்தி மீது காதல் கொள்கிறான். காதல் வளர்கிறது. அவள் அழகான சேலை உடுத்தி வருகிறாள். யார் கொடுத்த சேலை என வினவுகிறாள். நெஞ்சில் முள்ளாகத் தைக்கிறது. பொங்கி எழுகிறாள். உழைத்து வாங்கியது எனக் கூறுகிறாள். அவர்கள் பாடும் பாடல் இது.

*‘வட்ட வட்டப் பாறையிலே – குட்டி*

*வரகரசி தீட்டையிலே*
*ஆர்கொடுத்த சாயச்சீலை – குட்டி*
*ஆலவட்டம் போடுதடி?*
*ஆருங் கொடுக்கவில்லை – மச்சான்*
*ஆவிசாரி தான் ஆகவில்லை*
*வன்பாடு பட்டுதான் - மச்சான்*
*வாங்கினேண்டா சாயச்சீலை'*

## 5. கொண்டாட்டப் பாடல்கள்

மனிதன் தன் மகிழ்ச்சினை ஆடியும், பாடியும் பலரோடு கலந்து கொண்டாடுகிறான். மனிதன் தன் மகிழ்வினைப் பாட்டாகவும் கூத்தாகவும் வெளியிடுகிறான். அவ்வாறு வெளியிடும் போது தொன்மையான கலைச் சிறப்பையும் நமது நாட்டின் பண்பாட்டுச் சிறப்பினையும் அறியமுடிகின்றது. மனித உழைப்பிற்குப் பின் மனிதனுடைய மனமானது ஆடல், பாடல்களில் ஈடுபட விழைவது இயற்கையாகும். பலா் இணைந்து ஆடும் கும்மி, கோலாட்டம் போன்ற பாடல்களும், பெரும்பாலும் குடும்ப உறவினரே பங்கு கொள்ளும் பூப்புச் சடங்கு, திருமணம் போன்றவற்றில் பாடப்படும் பாடல்ளெல்லாம் கொண்டாட்டப் பாடல்கள் எனப்படும். பலரும் கலந்தாடும் கும்மி, கோலாட்டம் போன்ற ஆட்டங்களில் பாடப்படும் பாடல்களைப் புறப்பாடல்கள் எனலாம். சமூகத்திலுள்ள பலரும் இணைந்து குழுவாகப் பாடப்படுவது பூப்புச் சடங்குப் பாடல், திருமணம், பரிகாசம், நலுங்கு, ஊஞ்சல், வளைகாப்புப் பாடல்கள் போன்றவற்றை அகப்பாடல்கள் எனலாம். எனவே கொண்டாட்டப் பாடல்களை அகப்பாடல்கள் எனலாம். எனவே கொண்டாட்டப் பாடல்களை அகப்பாடல்கள் என்றும், புறப்பாடல்கள் என்றும், புறப் பாடல்கள் என்றும் இருபிரிவாகப் பிரிக்கலாம்.

## மணவாழ்த்து

திருமணத்தின் போது பெரியோர்கள் மணமக்களை வாழ்த்துவர். அகநானூற்றில் இதன் அரும்பையும், சிலம்பில் இதன் வளர்ச்சியையும் காணலாம். மணமக்கள் வாழ்வும், வளமும் நலமும் பொலிய வேண்டுமெனப் பெரியோர்கள் வாழ்த்துவர்.

*'பிள்ளை பதினாறும் பெற்றுப்*
*பெருவாழ்வு வாழ்ந்திருங்கள்*
*மக்கள் பதினாறும் பெற்று*
*மங்கலமாய் வாழ்ந்திருங்கள்!*
*ஆல்போல் தழைத்து*
*அருகுபோல் வேரூன்றி*
*நலமுடனே எந்நாளும்*
*ஞானமுடன் வாழ்ந்திடுவீர்!*

## பரிகாசப் பாடல்கள்

கறுப்பு நிறமான மாப்பிள்ளை மைத்துனிமார்களிடம் அகப்பட்டுக் கேலிக்குள்ளாகும் நிலையை விளக்கும் பாட்டு இது

*'எண்ணெ கொடத்துலே எளயுதய்யா ஓங்கருப்பு*
*தண்ணி கொடத்துலே தளம்புதய்யா ஓங்கருப்பு*
*கொட்டவந்த மேளக்காரன் கூடக் கருப்பென்றான்*
*ஆடவந்த தேவடியாள் அதிகம் கருப்பென்றாள்*
*மாலை கொண்டு வந்தவரும் கருப்பென்றார்*
*தாலி கொண்டு வந்த கருமருங் கருப்பென்றார்'*

## கும்மிப் பாடல்கள்

பருவமடைந்த பெண்ணுக்கு மஞ்சள் பூசி மாலை போட்டுப் பாட்டுப் பாடிக் கும்மியடிக்கின்றனர்.

*'கும்மியடி நல்லா கும்மியடி – அம்மா*

*குனிஞ்சு நல்லா கும்மியடி*

*குளக்கரை ஓரத்திலே பொண்ணு*

*குந்தியிருக்கா நல்லா கும்மியடி*

*பதினாறு நாளு தீட்டை நீக்க*

*பக்குவமா வாரா பார்த்து அடி*

*பக்கத்திலே நின்று பயத்தைநீக்கி*

*பணிந்து குனிந்து கும்மியடி*

*மஞ்சளும் பூசி மாலையும் போட்டு*

*மங்கையவள் வாரா கும்மியடி*

*குங்குமம் நீட்டி குந்தவும் வச்சு*

*குனிந்து வளைந்து கும்மியடி*

*மாமனும் மச்சானும் சீரோட வாரோங்கோ*

*கெட்டி மேளமும் கொட்டிட வாரோங்கோ!*

## 6. ஓப்பாரிப் பாடல்கள்

இறந்தவர்களை நினைத்து அவர்கள் மீது பாடப்படும் பாடல்களே ஒப்பாரி என்பர். இறந்தவர்களின், இழப்பை எண்ணி இறந்தவர்களையும், தம்மையும் ஒப்பிட்டுப் பாடுவதும் ஒப்பாரியாகும். தாலாட்டு கலங்கரை விளக்கமானால், முடிவுரை ஒப்பாரியாகும். தாலாட்டு கலங்கரை விளக்கமானால், ஒப்பாரி நினைவுச் சின்னமாகும். தாலாட்டும் ஒப்பாரியும் பெண்குலத்தின் படைப்பாகும். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி ஒப்பாரியை ஓப்ப + ஆரி எனப் பிரித்து ஒப்புச் சொல்லி அழுதல் எனப் பொருள் தருகிறது. ஒரு தமிழ் ஆங்கில அகராதி ஒப்பாரிக்கு ஒப்புச்சொல்லி அழுதல் என்று பொருள் கூறுகிறது. தமிழில் ஒப்பாரியைப் பிலாக்கணம், கையறுநிலை, புலம்பல், இரங்கற்பா, சாவுப்பாட்டு, இழவுப்பாட்டு, அழுகைப்பாட்டு எனப் பல்வகையாகக் கூறுவர். பாதுகாப்பை இழந்தாலும், பாதுகாக்கப்பட வேண்டியதை இழந்தாலும் பெண்களின் ஒப்பாரிகளில் சோகம் கொப்பளிக்கின்றது. கணவனுக்காகவும், பெற்றோருக்காகவும், உடன் பிறந்தவர்க்காகவும்

மாமன் மாமிக்காகவும் இறந்த பொழுதில் பெண்கள் ஒப்பாரி பாடுகின்றனா். 'தலைச்சன் பிள்ளை பெத்தவளுக்குத் தாலாட்டும், புருஷனை இழந்தவளுக்கு ஒப்பாரியும் தானாகவே வரும்' என்ற பழமொழி இக்கருத்துக்கு அரணாக விளங்குகிறது.

நமது தமிழ் சமுதாயத்தில் பெண் சமுதாயம் ஒரு சார்புச் சமுதாயமாகும். ஒரு பெண்ணானவள் தன் வாழ்க்கை முழுதும் யாரையேனும் சார்ந்தே வாழ்கிறாள். குழந்தைப் பருவத்தில் பெற்றோரைச் சார்ந்தும், திருமணத்திற்குப் பின்பு கணவனைச் சார்ந்தும், கணவன் இறந்து விட்டால் மகனையோ அல்லது மகளையோ சார்ந்தும் இருக்க வேண்டிய நிர்பந்தம் நம் சமுதாய அமைப்பில் இருந்து வருகிறது. நம் சமுதாயத்தில் விதவையின் நிலையை எண்ணிப் பார்த்தால் வேதனை தான் மிஞ்சும். விதவைகளைப் பாதிக்கும் சமூகப் பிரச்சினைகளும் நிறைய உண்டு.

இறந்தவரின் பெருமையும் அவரது குணநலன்களும் பிறரால் போற்றப்பட்ட முறையும் பேசப்படுவதுண்டு. ஒப்பாரி பாடுகின்றவர்கள் இறந்தவரை நேசித்தமுறையும் தன்னுடைய நிலைமை பற்றியும் குடும்பத்தின் நிலைமை பற்றியும் பாடுகின்றனா். ஈமச்சடங்குகள் பற்றிய விவரங்களும் கூறப்படுவதுண்டு. காலனது கொடுமையும் விதியின் வலிமையும் விதவையின் வேதனையும் இறந்தவரால் அடைந்த இழப்பும் ஒப்பாரியின் பொருளாகின்றன. ஒருவருடைய மனக்குறைகளை பிறரிடம் கூறினால் மனப்பாரம் குறையும் என மனிதன் எண்ணுவது இயல்பாகும். ஒப்பாரியை அவற்றின் வெளிப்பாடு (Outlet) என்றே கூறலாம். இறந்தவா்களின் ஆவி ஒப்பாரிகளால் சாந்தியடைவதாகவும், ஒப்பாரி பாடாவிட்டால் ஆவிகள் துன்புறும் என்றும், இவ்வுலகம் விட்டு மறுவுலகம் செல்ல ஒப்பாரிகள் இறக்கைகளாக உதவுகின்றன என்றும், ஆவிகள் மூலம் தீங்குவராமல் காக்கலாம் எ்னறும் மக்கள் நம்புகின்றனா்.

கணவன் இறந்துவிட்டால் கனவுகளில் மிதக்க வேண்டிய கண்ணீரில் மிதக்க வேண்டும். கணவனை இழந்து பெண்கள் படும்

துயரம் வார்த்தைகளால் விவரிக்க முடியாது. கணவனை இழந்துவிட்டால் 'அவளுக்குப் பூவும் பொட்டும் சொந்தமில்லை. அணிகலன்களால் அழகு செய்ய முடியாது. நிகழ்கால வாழ்க்கை சரிந்து வருங்காலத்தில் எண்ணற்ற துன்பங்களை எதிர்நோக்க வேண்டியவளாகிறாள். குணவனை இழந்த பெண்ணொருத்தி கணவன் இறந்த பின்பு தாலியைக் கழற்ற மனம் ஒப்பவில்லையே என்றும், சாப்பாட்டிற்கே வழியில்லையே என்றும் கூறி ஒப்பாரி வைக்கிறாள்.

*'தாலி பெருஞ்சரடு*
*தாழம்பூ நச்சரடு*
*தாலிமேல் கைவச்சா*
*தாளாதய்யா எம்மனசு*
*மாலையோ பெருஞ்சரடு*
*மகிழம்பூ நச்சரடு*
*மாலைமேல் கைவச்சா*
*மாளாதய்யா எம்மனசு!*
*கொத்தான பெருஞ்சரடு*
*கோர்வையான செஞ்சரடு*
*கொத்துமேல் கைபோட்டா*
*கோணுதய்யா எம்மனசு!*
--------- ---------- ------- ------
--------- ---------- ------- ------
*பம்ப புளியமரம்*
*பந்தடிக்கும் நந்தவனம்*
*பந்தடிச்சி வீடுவந்தா*
*பச்சத்தண்ணி யார் தருவா?*
*கடன் வாங்கிச் சோறுதின்னா*
*கடன்காரன் நச்சரிப்பான்*
*கண்கலங்கி நிக்கையிலே*

*கண்டசனம் பேசுமய்யா!'*

*கணவன் இறந்து விடுகிறான். கணவனின் இழப்பிற்கு இவர்களெல்லாம் காரணமாக இருக்கலாம் என்று எண்ணி வேதனைப் படுகின்றாள்.*

*'தாலிக்கு அரும்பெடுத்த*
*தட்டானும் கண் குருடோ?*
*சேலைக்கு நூலெடுத்த*
*சேணியனும் கண்குருடோ?*
*பஞ்சாங்கம் பாக்கவந்த*
*பார்ப்பானும் கண்குருடோ?*
*எழுதினவன் தான் குருடோ?*
*எழுத்தாணி கூர் இல்லையோ?'*

*பெற்றெடுத்த தாய் இறந்து விட்டாள். அத்தாயின் இழப்பை எண்ணி மகள் வருந்துகின்றாள். அவன் நெஞ்சிலுள்ள நெருப்பு என்று தணியும் என ஏங்கி இரங்குகிறாள்.*

*'தச்சன் ஓலை நெருப்பு*
*தணியும் ஒரு சாமம்*
*என் தங்கமடி நெருப்பு*
*தான் தணிவது எக்காலம்?*
*கொல்லன் ஓலை நெருப்பு*
*குளிரும் ஒரு காலம்*
*என் கொடிய மடி நெருப்பு*
*தான் குளிருவது எக்காலம்'*

'பனைமரத்து நிழலில் பறவைகள் வந்து தங்கி இழைப்பாறுவது வழக்கம். அந்த மரம் புயலில் சாய்ந்து விட்டால் பறவைகள் தங்க நிழலின்றித் தவிக்கும். அதுபோன்று தந்தையை இழந்து நாங்கள் தவிக்கின்றோம்' என்று ஒரு பெண் புலவர் பாடும் பாடல் இது.

*'கூந்தல் பனஞ்சோலை*

*குயிலடையும் மண்டபங்க – நீங்க*
*கூந்தல் பனைசாஞ்சா – நாங்க*
*குயிலடைய அஞ்சுறோம்பா*
*மட்டை பனஞ்சோலை*
*மயிலடையும் மண்டபங்க – நீங்க*
*மட்டை பனைசாஞ்சா – நாங்க*
*மயிலாட அஞ்சுறோம்பா.*
*நீல குளத்தங்கரை – நாங்க*
*நின்னழுவும் மந்தகரை*
*நின்னழுது வீடுவந்தா*
*நீரா தண்ணி யார் கொடுப்பா?*
*மூன்று கதவிருக்க*
*முத்திரை போட்டிருக்க*
*முத்திரையை நான் திறக்க*
*உத்தரவு யார் கொடுப்பா?'*

சீராட்டிப் பாராட்டி வளர்த்த அருமை மகளை மணக்கோலத்தில் காண விரும்புகிறாள் தாய். மணக்கோலத்தில் காண வேண்டிய மகளைப் பிணக்கோலத்தில் காணுகிறாள். அவள்படும் மன வேதனைக்கு அளவில்லை.

*'மணவறைப் பந்தலிலே - உன்*
*மணக்கோலம் பாராமல்*
*பிணவறைக் பந்தலிலே – நானும்*
*பேரிழவே கொள்ளுகின்றேன்'.*

## ஒப்பாரி காட்டும் பெண்கள் நிலை

குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டிய கணவன் இறந்து போனால் மனைவி பெரும் பாதிப்புள்ளாகிறாள். பேரிழப்பை மட்டுமின்றி அமங்கலி என்ற சொல்லையும் தாங்கிக் கொள்ள வேண்டியவளாகிறாள்.

கணவனை இழந்த இழப்பைக் காட்டிலும் நோன்பின் கொடூரம் வேதனைக்குள்ளாக்குகிறது. விதவைகள் எந்தச் சுபகாரியத்திலும் பங்கு பெறக்கூடாது. அவள் தொட்ட காரியம் துலங்காது. எதிரே வந்தால் சகுனத்தடை என்றெல்லாம் சமூகம் நினைக்கிறது. பெண்களுக்குச் சொத்துரிமை இல்லாத நிலையில் பெண்களுக்கு நேரும் துயரங்களை ஒப்பாரிப் பாடல்களில் காண்கிறோம். பெற்றோருக்குப் பின் பிறந்த வீட்டிலும் வரவேற்பில்லை. தன் வயது ஒத்த அண்ணி கொடுமையின் சின்னமாக நாட்டுப்புறப் பாடல்களில் சித்தரிக்கப்பட்டுள்ளாள். பெற்றோரை இழந்த பெண்ணொருத்தி தனக்குப் பொன்னும் பொருளும் சீதனமும் வேண்டாம். அன்பான வார்த்தை கூறி வரவேற்றால் போதும் என வேதனையால் புலம்புவதையும் காண்கிறோம்.

***'அள்ளி கொடுக்க வேண்டாம்***
***அரண்மனையில் பாகம் வேண்டாம்***
***அன்பான வார்த்தை சொல்லி – என்னை***
***அரவணைத்தால் போதும்***
***பணங்காசு கொடுக்க வேண்டாம்***
***பட்டுப்பாய் போட வேண்டாம்***
***பாசமுள்ள வார்த்தை சொல்லி – என்னை***
***பராமரிச்சா போதும்***
***சீர்வரிசை செய்ய வேண்டாம்***
***சிப்பக்கட்டு கட்ட வேண்டாம்***
***சாந்தமான வார்த்தை சொல்லி – என்னை***
***சிரிக்க வைச்சா போதும்'.***

சுருங்கக்கூறின் பெண்களின் சோக உணர்ச்சிகள் முழுமையும் ஒப்பாரிப் பாடல்களில் பிரதிபலிப்பதைக் காணலாம்.

**வினாக்கள்**

**250 வார்த்தைகளில் விடை தருக.**

1. நாட்டுப்புறப் பாடல்களின் வகைப்பாடுகளை விவரி?
2. தொழிற்பாடல்கள் என்பது யாது? ஏதேனும் இரண்டு தொழிற்பாடல்கள் விளக்குக.
3. ஒப்பாரிப்பாடல்கள் - குறித்து கட்டுரை வரைக.

# பாடம் - 3

## நாட்டுப்புறக் கதைகள்

மனிதகுலம் வளர்ந்த கதை சுவையானது. யாவரும் அறிய விரும்புவது மனிதனின் கதை மகத்தானது. கதை சொல்வதும் கேட்பதும் மாந்தர் இயல்பு. கதை சொல்வதும், கேட்பதும் கலை. ஆதிகால மனிதன் நாடோடி வாழ்க்கை நடத்தினான். ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் சென்றதும் கால்நடை மேய்ச்சலுக்காக அலைந்து திரிந்த போது அதைக் கதையாகக் கூற ஆரம்பித்தான். ஆதி மனிதன் தன் அனுபவங்களை மற்றவர்களுக்குக் கதையாகக் கூற ஆரம்பித்ததே கதையின் தொடக்கம் என்பர். அச்ச உணர்வு, இயற்கை நிகழ்ச்சிகளுக்குக் காரணம் காணும் முயற்சி,வாழ்வியலில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளால் மக்கள் மனதில் நேர்ந்த பாதிப்பு உயர்வு, தாழ்வு மனப்பான்மை அறம் உரைத்தல் முதலியவைகள் கதைகள் தோன்றக் காரணம் என்பர். பொழுது போக்கிற்காகவும் நீதிகளை வலியுறுத்தவும் கதைகள் புனையப்பட்டன. உலக முழுவதும் ஒரே மாதிரியான கதை பரவ தொழில், கொண்டு கொடுத்த உறவுமுறை, விழா முதலியனவும் பிறமொழிக் கதைகள் பரவ வணிகத் தொடர்பு, கலை, இலக்கியம், பண்பாடு ஆட்சித்தொடர்பு முதலியவைகளும் காரணமாக உள்ளன.

கதைகள் தொல்காப்பியர் காலத்திலே வழக்கிலிருந்து அறிகிறோம்.

‘***பொருள் மரபில்லாப் பொய்ம்மொழி யானும்***

***பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்.***’ (தொல். செய். 173)

இச்சூத்திரத்திற்குப் பேராசிரியரும் நச்சினார்க்கினியருமம் பின்வருமாறு விளக்கம் அளிக்கின்றனர்.

இந்தியா ஒரு கதைக் களஞ்சியம். தமிழ்நாடு கதைகளின் கருவூலம். ஆதிகால மக்கள் உலகத்தைப் பற்றியும் உலகத் தோற்றத்தைப் பற்றியும் கதைகள் புனைந்தனர். இவைகளே

காலப்போக்கில் கற்பனைக் கதைகளாகவும் இதிகாசங்களாகவும் புராணங்களாகவும் மாறின. பழங்கால சமுதாயத்தை அறிய இக்கதைகள் பெரிதும் உதவும்.

இயற்கை மாறுதல்களையும், உற்பாதங்களையும், உருவகங்களால் விளங்குவதற்காகக் கதைகள் ஏற்பட்டன என மானிடவியலாரும், சமூகவியலாரும் உளவியலாரும் பொது விளக்கம் அளிக்கின்றனர். இயற்கையின் வளம், பிறப்பு, இறப்பு போன்றவற்றை விளக்குவது பழங்கதைகள் என்கிறார் பிரேசர் (Frazer).ஆசை நிறைவேறுவதற்குரிய கருவி பழங்கதைகள் என்கிறார் உளவியல் பேரறிஞர் சிக்மண்ட் பிராய்டு (Sigmund Fraud) மனித தெய்வத்தின் நனவில் மனக்கனவுகளைக் காட்டுவது பழங்கதைகள் என்கிறார் யுங் (Jung) என்னும் பேரறிஞர்.

உலகக் கதைகளை ஆராயும் போது மனித குலத்தின் வளர்ச்சியும் மனித மனங்களின் எழுச்சியும் புலனாகின்றன. அடிப்படை உண்மைகளைக் கொண்ட கதைகள் உலகெங்கும் சிரஞ்சீவியாக வாழ்கின்றன. கதைகள் வெறும் பொழுதுபோக்கு இலக்கியங்கள் மட்டுமல்ல, அறக்கோட்பாடுகளை விளக்கும் கதைகள் புவி போற்றும் காவியத்தன்மை பெற்றுவிடுகின்றன. சிறுவர் முதல் பெரியோர் வரை கேட்டு மகிழ்ந்து நினைத்து அசை போடத்தக்கன.

நாட்டுப்புறக் கதைகள் வாய்மொழியாகப் பரப்பப்படுவதாகும். மரபு வழிபட்டதாகும். பல நூற்றூாண்டுக்காலமாக வாய் மொழியாக மக்களிடையே வழங்கி வருவதால், மாற்றத்தை காண்கிறோம். மூல ஆசிரியர் யாரென அறிய வொண்ணாமையை ஒரு வித வாய்ப்பாடுக்குள் அடங்குவதும் நாட்டுப்புற கதைகளுக்கும் பொருந்தும்.

உலகில் தொன்று தொட்டு நாட்டுப்புறக் கதைகள் வழங்கி வந்தாலும் அ∴து அச்சேறியகாலம் பதினாறாம் நூற்றாண்டாகும். தமிழில் வெளிவந்த நாட்டுப்புறக் கதைகளின் தொகுப்பை காண்போம்.

| | | |
|---|---|---|
| 1867 | வீராச்சாமி நாயக்கர் | மயில்ராவணன் கதை |
| 1871 | வீராச்சாமி நாயக்கர் | விக்கிரமாதித்தன் கதை |
| 1873 | சி. மாணிக்க முதலியார் | சுதாமஞ்சரி |
| 1876 | வீராச்சாமி நாயக்கர் | விநோதரச மஞ்சரி |
| 1886 | நடேச சாஸ்திரி | திராவிட மத்தியகாலக் கதைகள் |
| 1886 | நடேச சாஸ்திரி | தக்காணபூர்வ கதைகள் |
| 1890 | Kingscote & Natesa Sastri | Folk tales in Southern India |
| 1891 | புஷ்பரத செட்டியார் | விநோதரச மஞ்சரி |
| 1897 | நடேச சாஸ்திரி | Folklore in Southern India |
| 1897 | இராஜேந்திரம் பிள்ளை | பூலோக விநோதக் கதைகள் |
| 1933 | கஸ்தூரி அய்யங்கார் | பஞ்சதந்திரக் கதைகள் |
| 1851 | தாண்டவராய முதலியார் | கதாமஞ்சரி |
| 1952 | அ. லெ. நடராசன் | ஈசாப் கதைகள் |
| 1952 | வாணன் | உலக நாடோடிக் கதைகள் |
| 1952 | அரு. இராமநாதன் | மரியாதை இராமன் கதைகள் |
| 1953 | ஆனவரத விநாயகம் பிள்ளை | பஞ்சதந்திரக் கதைகள் |
| 1954 | கா. அப்பாதுரை | நாட்டுப்புறக் கதைகள் |
| 1954 | இராமச்சந்திரன் | டெக்கமரான் கதைகள் |
| 1955 | இராமையா | தெனாலிராமன் கதைகள் |
| 1957 | க. அ. பக்தவச்சலம் | தெனாலிராமன் கதைகள் |
| 1957 | அ. லெ. நடராசன் | அரபுக் கதைகள் |
| 1957 | க. அ. இராமசாமிப் புலவர் | தென்னாட்டுப் பழங்கதைகள் (4 தொகுதிகள்) |
| 1958 | அரு. இராமநாதன் | இராயர் அப்பாஜி கதைகள் |

| | | |
|---|---|---|
| 1958 | பழநியப்பன் | மரியாதை ராமன் கதைகள் |
| 1958 | க. அ. இராமசாமிப் புலவர் | தென்னாட்டுப் பழங்கதைகள் (5, 6 தொகுதிகள்) |
| 1959 | இ. மு. ஆறுமுகம் செட்டியார் | தமிழ் நாட்டுக் கதைகள் |
| 1960 | சீனி வேங்கடசாமி | புத்தர் ஜாதகக் கதைகள் |
| 1962 | சௌரி | அழியாக் கதைகள் |
| 1962 | நா. ரா. நாச்சியப்பன் | பஞ்சதந்திரக் கதைகள் (1 -5 பகுதிகள்) |
| 1963 | மணிஜி | மதி வளர்க்கும் கதைகள் |
| 1964 | வை. கோவிந்தன் | தமிழ்நாட்டுப் பழங்கதைகள் |
| 1964 | வை. கோவிந்தன் | பழங்காலக் கதைகள் |
| 1965 | வை. கோவிந்தன் | ஈசாப் குட்டிக் கதைகள் |
| 1965 | ராஜநாராயணன் | தமிழ் நாட்டு நாடோடிக் கதைகள் |
| 1967 | கல்பனா | 1001 இரவு அராபியக் கதைகள் |
| 1967 | சி. சின்னப்ப பாரதி | தமிழகக் கிராமியக் கதைகள் |
| 1968 | க. அ. இராமசாமிப்புலவர் | வினோதக் களஞ்சியம் |
| 1968 | எல்லார்வி | குழந்தைகளுக்கான நாடோடிக் கதைகள் |
| 1968 | எஸ். கே. ஸ்வாமி | போதிசத்துவர் கதைகள் |
| 1969 | மு. க. அருள்சாமி | ஈசாப் கதைகள் |
| 1969 | தெய்வசிகாமணி | பீர்பால் கதைகள் |
| 1969 | K. A. Seethalakshmi | Folktales of Tamil Nadu |
| 1969 | அ. லெ. நடராசன் | ஈசாப் கதைகள் |
| 1970 | எஸ். லீலா | பஞ்சதந்திரக் கதைகள் |
| 1970 | முஹிதின் | அவாந்தி கதைகள் |
| 1974 | வாண்டு மாமா | குழந்தைக் கதைகள் |
| 1974 | தி. செல்வக்கேசவராய முதலியார் | அராபிக் கதைகள் |

| | | |
|---|---|---|
| 1975 | அ. லெ. நடராசன் | பஞ்சதந்திரக் கதைகள் |
| 1976 | அ. லெ. நடராசன் | ஈசாப் நீதிக் கதைகள் |
| 1977 | கி. ராஜநாராயணன் | தமிழ்நாட்டுக் கிராமியக் கதைகள் |
| 1977 | கி.மா. பக்தவச்சலம் | தெனாலிராமன் கதைகள் |
| 1977 | பரதன் | மதனகாமராசன் கதைகள் |
| 1977 | அ. லெ. நடராசன் | அலாவுதீனும் அற்புத விளக்கும் |
| 1978 | சி.எஸ். சுப்பிரமணியம் | ஆர்மீனிய நாடோடிக் கதைகள் |
| 1978 | அ. கா. பெருமாள் | நாட்டார் கதைகள் |
| 1978 | இளங்குமரன் | தமிழ்நாட்டுப் பழங்கதைகள் |
| 1979 | சரஸ்வதி இராமநாதன் | பிரெஞ்சு நாடோடிக் கதைகள் |
| 1979 | சரஸ்வதி இராமநாதன் | மலைநாட்டு நாடோடிக் கதைகள் |
| 1979 | கி. ராஜநாராயணன் | தமிழ்நாட்டுக் கிராமியக் கதைகள் |
| 1979 | ர. சண்முகம் | சிறுவர் நாடோடிக் கதைகள் |
| 1980 | க. கிருட்டிண சாமி | கொங்கு நாட்டுப்புறக் கதைகள் |
| 1980 | பொன்னம்மாள் | பாட்டி சொன்ன கதைகள் |
| 1981 | மே. பரதன் | 1001 இரவு அராபியக் கதைகள் |
| 1982 | முகவை இராசமாணிக்கம் | தமிழக நாடோடிக் கதைகள் |
| 1984 | க. சண்முக சுந்தரம் | தமிழக நாட்டுப்புறக் கதைகள் |
| 1984 | கி. ராஜநாராயணன் | தாத்தா சொன்ன கதைகள் |
| 1984 | வி. எஸ். சுப்பிரமணியம் | கிரேக்க நாடோடிக் கதைகள் |
| 1985 | Mugavai Rajamanikam | Folktales of Tamil Nadu |
| 1986 | ஆறு. இராமநாதன் | நாட்டுப்புறக் கதைகள் |
| 1986 | முல்லை முத்தையா | தெனாலிராமன் கதைகள் |
| 1986 | முல்லை முத்தையா | அப்பாஜி யுத்திக் கதைகள் |
| 1986 | முல்லை முத்தையா | மரியாதைராமன் தீர்ப்புக் கதைகள் |
| 1987 | Kamil Zvelebil | Two Tamil Folktales |

| | | |
|---|---|---|
| 1987 | P. Raja | Folktales of Pondidcherry |
| 1990 | ஆசார்யா | வாழ்வியல் நீதிக்கொத்து பஞ்சதந்திரக் கதைகள் |

**நாட்டுப்புறக் கதைகளின் வகைப்பாடு**

நாட்டுப்புறவியல் அறிஞர்கள் நாட்டுப்புறக் கதைகளைப் பல்வேறு அடிப்படையில் வகைப்படுத்துகின்றனர்.

1. வில்லியம் பாஸ்கம் (William Bascom) அவர்கள் மூவகையாக பகுக்கின்றார்.
    1. புராணக்கதை (Myth)
    2. பழமரபுக்கதை (Legend)
    3. நாட்டுப்புறக்கதை (Folktale)
2. ஆண்டி ஆர்னே (Antti Aarne)யும் ஸ்டித் தாம்ஸனும் (Stith Thompson) இணைந்து நாட்டுப்புறக் கதைகளை ஐந்தாக வகைப்படுத்துகின்றனர்.
    1. விலங்குக் கதைகள் (Animal Tales)
    2. சாதாரணக் கதைகள் (Ordinary Folktales)
    3. நகைச்சுவை மற்றும் துணுக்குக் கதைகள் (Jokes and Anccdots)
    4. வாய்ப்பாட்டுக் கதைகள் (Formula Tales)
    5. வகைப்படுத்தப்படாத கதைகள் (Unclassified Folk Tables)
3. ஸ்டித் தாம்ஸன் (Stith Thompson) அவர்கள் ‘The Tales’ என்ற நூலில் நாட்டுப்புறக் கதைகளைப் பன்னிரண்டாக வகைப்படுத்துகிறார்.
    1. வீட்டுக் கதைகள்
    2. இயற்கை கடந்த பகைவர்கள்
    3. மந்திரங்களும் அதிசயங்களும்

4. காதலர்களும் மணமானவர்களும்
5. கடமை
6. நன்றி
7. உறவினர்கள்
8. மேலான சக்திகள்
9. உண்மைக் கதைகள்
10. விகடங்களும் கட்டுக்கதைகளும்
11. கட்டுக்கதைகளும் மரபுக்கதைகளும்
12. கட்டுக்கதைகளும் மரபுக்கதைகளும்

இப்பிரிவே மேலும் வகைப்படுத்தப்பட்டு உட்பிரிவாக வகைப்படுத்தப்பட்டு அவற்றிற்கு எண்கள் தரப்பட்டுள்ளன. அடிப்படை ஆய்வுக்கு இன்றியமையாததாகும். ஆய்வுகள் பெருகப் பெருக மாற்றங்களைச் செய்து கொள்ளலாம்.

4. போக்ஸ் (Boggs) என்பவர் பதினான்கு பிரிவாக வகைப்படுத்துகிறார்.

1. விலங்குச் சந்தை
2. பொதுவான கதை
3. தந்திரக் கதை
4. சமயக் கதை
5. புனைவியல் கதை
6. அரக்கனின் முட்டாள் கதை
7. நகைச்சுவை கதை
8. முட்டாள் ஆண், பெண் கதை
9. திருமணத் தம்பதியர் கதை
10. பெண்கள் கதை
11. ஆண்கள் கதை
12. நீண்ட பொய்க்கதை
13. குறுகிய கதை

14. முடிவில்லாக் கதை

5. கான்ஸ்டன்ஸ் பொல்ஸி அவர்கள் நாட்டுப்புறக் கதைகளைப் பதினான்காக வகைப்படுத்துகிறார்.
   1. மனிதக் கதைகள்
   2. நீதிக் கதைகள்
   3. அறநெறிக் கதைகள்
   4. தியாகக் கதைகள்
   5. அரசர் கதைகள்
   6. குடும்பக் கதைகள்
   7. வேடிக்கைக் கதைகள்
   8. தொழில் கதைகள்
   9. பயணக் கதைகள்
   10. மிருகக் கதைகள்
   11. மந்திரக் கதைகள்
   12. தெய்வக் கதைகள்
   13. சமயக் கதைகள்
6. பிரிட்டனிகா கலைக் களஞ்சியம் (Encyclopaedia of Brittanics Vol 19 p 519) மூன்று வகையாகப் பகுக்கின்றது.
   1. புராணக்கதை (Myth)
   2. பழங்கதை (Legend)
   3. பொதுமக்கள் கதை (Popular Tale)
7. போத்கர் (டீழனபயச) இந்திய விலங்குக் கதைகளை ஏழாக வகுத்துப் பல உட்பிரிவுகளை வகுத்துள்ளார்.
   1. விலங்குகளுக்கிடையில் பகைமை (Enmity Between Animals)
   2. அறிவுள்ள விலங்கு (Wise Animal)
   3. தப்பித்தல் (Escape)
   4. அறிவில்லாத விலங்கு (Unwise Animal)

5. நன்றியும் நன்றியில்லாத் தன்மையும் (Gratitude and Ungratitude)
6. அதிர்ஷ்டமும் விதியும் (Luck and Fate)
7. விலங்கு வாழ்க்கையில் மற்ற கூறுகள் (other aspects of animal life)
8. ஸ்டித் தாம்ஸனும் (Stith Thompson) வாரன் இ. ராபர்ட்ஸூம் (Warren E Roberts) விலங்குக் கதைகளை ஆறாகப் பகுக்கின்றனர்.
    1. காட்டு விலங்குகள் (Wild Animals)
    2. காட்டு விலங்குகளும் வீட்டு விலங்குகளும் (Wild Animals and Domestic Animals)
    3. மனிதனும் காட்டு விலங்குகளும் (Man and Wild Animals)
    4. வீட்டு விலங்குகள் (Domestic Animals)
    5. பறவைகள் (Birds)
    6. பிறவிலங்குகளும் பொருள்களும் (Other Animals and Objects)
9. டாக்டர். சு. சண்முகசுந்தரம் அவர்கள் நான்கு வகையாகப் பகுக்கின்றனர்.
    1. மனிதக் கதைகள்
    2. மிருகக் கதைகள்
    3. மந்திரக் கதைகள்
    4. தெய்வக் கதைகள்

    டாக்டர். சண்முகசுந்தரம் அவர்களே நாட்டுப்புறக் கதைகளை இருபத்தி மூன்று வகையாகவும் பகுத்துள்ளார்.
10. டாக்டர். தே. லூர்து அவர்கள் பழமரபுக் கதைகளை (Legends) ஒன்பதாக வகைப்படுத்துகிறார்.

1. தோற்றம் பற்றிய பழமரபுக்கதைகள்
2. வரலாற்றுப் பழமரபுக் கதைகள்
3. இடப்பெயர் சார்ந்த பழமரபுக் கதைகள்
4. உள்ளூர் பழமரபுக் கதைகள்
5. போர், அழிவு பற்றிய பழமரபுக் கதைகள்
6. நம்பிக்கை பழமரபுக் கதைகள்
7. இறப்பு இறந்தோர் பழமரபுக் கதைகள்
8. பேய்கள் பற்றிய பழமரபுக் கதைகள்
9. சமயப் பழமரபுக் கதைகள்

11. டாக்டர். துர்கா பகவத் (Durga Bhagawat) அவர்கள் இருவகையாகப் பகுக்கின்றனர்.

1. பரவல் (Migratory)
2. உள்ளூர் (Local)

12. டாக்டர். கிருட்டிணசாமி அவர்கள் ஐந்து வகையாகப் பகுக்கின்றார்.

1. மந்திர தந்திரக் கதைகள்
2. கட்டுக்கதைகள் அல்லது பழங்கதைகள்
3. புராணக்கதை
4. விலங்கு பறவைக்கதை
5. உயிரற்ற பொருட்களின் கதைகள்

13. கி. ராஜ்நாராயணன் அவர்கள் பத்தொன்பது வகையாகப் பாகுபடுத்துகிறார்.

1. சாதியக் கதைகள்
2. ஏழை, பணக்காரன்
3. அறிவாளிகளும், அல்லாதோரும்
4. ராஜா குடிமகன்
5. புருஷன் மனைவி
6. மாமியார் மருமகன்
7. சொக்காரங்கள் பிரியம், பகை, பொறாமை

8. கடவுள்
9. காடுகள் மிருகங்கள், பட்சிகள்
10. பேய், பிசாசு, பூதம்
11. மதங்கள்
12. வீரம்
13. தனிநபர் போற்றுதல்
14. குழந்தைகள்
15. நகைச்சுவை
16. பால் உணர்ச்சிக் கதைகள்
17. குடும்பம், பாசம்
18. நட்பு
19. அரசியல் முதலியன

14. அ. லெ. நடராசன் ஆறாக வகைப்படுத்துகிறார்

1. அறிவுரைக் கதைகள்
2. நகைச்சுவைக் கதைகள்
3. வேடிக்கைக் கதைகள்
4. கிண்டல் கதைகள்
5. கேலிக் கதைகள்
6. பழமொழிக் கதைகள்

15. டாக்டர். ரோஸ்லெட் டானிபாய் அவர்கள் ஏழாகப் பகுக்கின்றார்.

1. புராண இதிகாசக் கதைகள்
2. காரணக் கதைகள்
3. பேய்க் கதைகள்
4. விலங்குக் கதைகள்
5. விசித்திரக் கதைகள்
6. நகைச்சுவைக் கதைகள்
7. சமுதாயக் கதைகள்

16. டாக்டர். அய்யனார் பொருளடிப்படையில் ஒன்பதாகப் பகுக்கின்றார்.

1. பண்பு விளக்கக் கதைகள்

2. நீதி விளக்கக் கதைகள்

3. சமயமரபுக் தழுவியக் கதைகள்

4. சமூக வரலாற்றுக் கதைகள்

5. நகைச்சுவைக் கதைகள்

6. குலமரபுக் கதைகள்

7. நம்பிக்கை விளக்கக் கதைகள்

8. இயற்கை இகந்த கதைகள்

9. பிறவகைக் கதைகள்

17. தமிழ்க் கலைக்களஞ்சியத்தில் ஏழு வகையாகப் பகுக்கப்பட்டுள்ளது.

1. நீதிக் கதைகள்
2. தந்திரக்கதைகள்
3. ஏளனக் கதைகள்
4. நகைச்சுவைக் கதைகள்
5. நம்பிக்கைக் கதைகள்
6. கற்பனைக் கதைகள்
7. வஞ்சகக் கதைகள்

18. டாக்டர் சு. சக்திவேல் அவர்கள் ஆறாக வகைப்படுத்துகிறார்.

1. மனிதக் கதைகள்
   - காதல் கதைகள்
   - காரணக் கதைகள்
   - விசித்திரக் கதைகள்
   - நகைச்சுவைக் கதைகள்
   - அதிர்ஷ்டக் கதைகள்
   - குடும்பக் கதைகள்
   - வேடிக்கைக் கதைகள்
   - உல்லாசக் கதைகள்
   - நீதிக் கதைகள்
   - பிரயாணக் கதைகள்
   - கனவுக் கதைகள்

2. மிருகக் கதைகள்

3. மந்திர-தந்திரக் கதைகள்

4. தெய்வக் கதைகள்

5. இதிகாச புராணக் கதைகள்

6. பல்பொருள் பற்றிய கதைகள்

19. சில நாட்டுப் புறவியல் அறிஞர்கள் கதை சொல்லும் நேரத்தையொட்டி நான்காக வகைப்படுத்துகின்றனர்.

1. நொடிக் கதைகள்
2. சிறுகதைகள்
3. நெடுங்கதைகள்
4. கிளைக் கதைகள்

## நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்

கதையைப் பாடலாகப் பாடப்படுவதைக் கதைப்பாடல் என்பர். அது ஒரு கதையாகவோ அல்லது பல உட்கதைகள் கொண்ட கதையாகவோ இருக்கலாம். ஆங்கிலத்தில் இதனை 'ballad' என்று கூறுவர். டீயடடயசந என்ற இலத்தீன் சொல்லிலிருந்து பிறந்ததாகும். நடனம் என்ற பொருளும் உண்டு. மேலை நாட்டில் இச்சொல் பல பொருளில் வழங்கி, பதினாறாம் நூற்றாண்டிற்குப் பின்னரே இச்சொல்லுக்குக் குறிப்பிட்ட வரையறை ஏற்பட்டது. கதைப்பாடல்கள் முதலில் பாடுவதற்கே எழுந்தனவாகும். நாட்டுப்புற இலக்கியத்திற்குரிய அனைத்துக் கூறுகளும் கதைப்பாடலுக்கும் பொருந்தும். கதைப்பாடல்கள் பெரும்பாலும் மக்களது பேச்சு மொழியிலே அமைந்திருக்கும். காப்பியங்கள் தோன்றுவதற்குக் கதைப்பாடல்களே மூல காரணம் எனின் மிகையாகாது. பன்னிரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட கதைப்பாடல்களை உலகிலே எங்கும் காணமுடியாது. கதைப்பாடலின் தோற்றம் எத்தகையதாக இருப்பினும் தெளிவான வடிவம் பெற வாய்மொழியாகப் பரப்பப்பட்டதே முக்கிய காரணமாகும்.

கதைப்பாடலின் தோற்றித்திற்குப் பண்பாடு முக்கிய எதிரி என்பர். வறட்சிப் பகுதியிலும் பின்தங்கிய பகுதிகளிலும் நிறைய கதைப்பாடல்கள் தோற்றம் பெற்றிருக்கின்றன. இயற்கைச் சூழல்,

மக்களின் மனப்பாங்கு, சாதிகளின் நடத்தை போன்றவை கதைப்பாடல் தோன்ற முக்கியப் பங்கு வகித்தன எனக் கூறலாம். நாட்டுப்புற மக்களின் கூட்டு முயற்சியால் எழுந்ததே கதைப்பாடலாகும். கிட்ரெட்ஜ் (Kittredge) அவர்கள் இக்கருத்தை ஏற்றுக்கொண்டு அதில் சில மாற்றம் செய்தார். நாட்டுப்புற மக்களின் கூட்டு முயற்சியால் தோன்றினாலும், அது ஒரு தலைவனின் கீழ் செயலாக்கம் பெற்றது என்று கூறுகிறார். மத்தியக் காலத்தில்தான் கதைப்பாடல்கள் தோற்றம் பெற்றிருக்க வேண்டும். பல்லாண்டு காலமாகக் கதையைப் பாடலாக பாடியதால் மக்கள் அவற்றில் சில மாற்றங்களைச் செய்திருப்பர். வாய்மொழி இலக்கிய வகையான கதைப்பாட்டு மக்கள் முன் எடுத்துரைக்கப்பட்டு பரம்பரை பரம்பரையாக இசைக்கருவிகளின் துணைகொண்டு மக்கள் முன் பாடப்படுவதாகவும் இக்கதைப் பாடல்களைத் திருநெல்வேலி மாவட்டத்தில் வில்லுப்பாடல்கள், மகுடாட்டப் பாடல்கள் என்றும் கோவை மாவட்டத்தில் உடுக்கடிப் பாடல்கள் என்றும் கூறுவர்.

ஓரிடத்தில் வழங்கப்பெறும் ஒரு புகழ்மிக்க கதைப் பாடல் வடிவில் ஆக்கப்பெறுகின்றது. கதையை உள்ளடக்கி விளக்குதலால் கதைப்பாடல் என்று பெயர் பெற்றுள்ளது என சரசுவதி வேணுகோபால் கூறுகிறார். கதையைப் பாடலாகக் கூறுவது அல்லது பாடலின் கதை பொதிந்து வருவது கதைப்பாடல் என்றழைக்கப்படுகின்றது. இது ஒரு கதையைப் பற்றியதாகவும் இருக்கலாம் அல்லது பல உட்கதைகள் கொண்ட கூட்டுக் கதையாகவும் இருக்கலாம். இந்த உட்கதைகள் மூலக்கதைக்குப் பக்கபலமாக அல்லது அதன் மையத்தை நோக்கிச் செல்வனவாகவும் அமையும் என்கிறார் டாக்டர். சு. சண்முகசுந்தரம் அவர்கள்.

கதைப்பாட்டு என்ற இலக்கிய வகையானது மக்களது நாவில் திகழ்கின்றது. இதை இயற்றியவர் யாராகயிருப்பினும் பாடுபவரது

உரிமையாகவே மாறிவிடுகிறது. இதற்கு முன்னுரையும் பின்னுரையும் விளக்கமும் தேவையில்லை என கலைக்களஞ்சியம் கூறுகிறது.

கதைப்பாடல்கள் வரலாறுகள் அல்ல, அவை வீர காவியங்கள், மனிதப் பண்பின் உயர்ந்த அம்சங்களைப் போற்றுபவை. சமூகச் சீர்கேடுகளைக் கேலி செய்பவை, இவற்றைக் கற்பனையால் உருவான நாட்டார் பாடல் என்றே கொள்ள வேண்டும் என டாக்டர் நா. வானமாமலை அவர்கள் கூறுகிறார்.

ஆங்கிலத்தில் ‘பாலட்’ என்று சொல்லும் கருத்தைத் தமிழில் அம்மானை என அழைக்கின்றனர். இதற்குக் காரணங்கள் பல ஒன்று பாடல்களில் அம்மானை என்ற சொல் பயன்படுத்தப்படுவது. மற்றொன்று செந்தமிழ் இலக்கியமாக இராமல் சொற்ப எழுத்தறிவுடையவர்களே பாடி வைத்தது. பாமரர் இலக்கியம் என்று சொல்லும் மரபுடையது. நீண்ட பாடல்கள், நெடுங்கதைப் போக்குடையன, பாமர மக்கள் அநுபவிக்கத்தான் பாடல்கள் என தமிழறிஞர் மு. அருணாசலம் கூறுகிறார்.

குறிப்பிட்டதொரு பண்பாட்டில் குறிப்பிட்ட சில சூழல்களில் வாய்மொழியாக ஒரு பாடகனோ அல்லது ஒரு குழுவினரோ சேர்ந்து மக்கள் முன் எடுத்துரைத்து இசையுடன் நிகழ்த்துகின்ற கதை தழுவிய பாடலே கதைப் பாடலாகும் என டாக்டர். நா. இராமச்சந்திரன் நாயர் கூறுகிறார்.

டேவிட் புக்கன் (David Buchan) அவர்கள் கதைப் பாடலைக் கீழ்கண்டவாறு வரையறுக்கிறார்.

கதைப்பாடல்கள் இடர்ப்பாடானவை. சில இலக்கிய வகைகள் பெரும்பான்மையான மக்களுக்கு மிகுந்த இன்பத்தை அளிப்பவை. வியப்பு, காதல், கொலை போன்றவற்றைப் பொருளாகக் கொண்ட இக்கதைகள் கவிதை நடையினின்றும் கூர்மையாக வேறுபட்ட ஒரு வகை நடையில் சொல்லப்படுவன. அவற்றில் ஆசிரியர், வரையறை,

வகைப்பாடு குறித்துச் சிக்கல் எழுகின்றது. கதைப்பாடல் புதிராக அமைகின்றது. வாய்மொழியாகப் பரப்பப்படுவதே கதைப்பாடலாகும்.

மால்கம் லாஸ் (Malcom Laws) கதைப்பாடலைக் கீழ்க்கண்டவாறு வரையறுக்கிறார்.

'கதைப்பாடல் என்ற சொல் பல்வேறு பொருள் கொண்டது அறிஞர்கள் கூட வரையறுப்பதில் மாறுபாடு கொள்கின்றனர். கதைப்பாடலில் கதையே இன்றியமையாதது. கதையைக் கூறாத நாட்டுப்புறப் பாடலைக் கதைப்பாடலாகக் கருத மாட்டேன். கதைப்பாடல் மரபான ஒரு வாழ்க்கைக் கொண்டிருக்க வேண்டும். மக்களது நினைவில் நிலைத்திருக்க வேண்டும். வாய்மொழியாகப் பரவவேண்டும் என்கிறார்.

## தமிழ்க் கதைப்பாடலின் தோற்றமும் தன்மையும்

தமிழ்க் கதைப்பாடலின் தோற்ற வளர்ச்சியை ஆராய்வது கதைப்பாடலைக் புரிந்துகொள்வதற்குப் பெருந்துணையாக அமையும். கதைப்பாடலுக்குத் தமிழில் அம்மானை என்ற பெயரும் உண்டு. முதல் கதைப்பாடலே அம்மானை என்ற பெயரும் உள்ளது. அம்மானையின் வளர்ச்சியே கதைப்பாடலின் வளர்ச்சியாகும். அம்மானை கதை தழுவா நிலையிலிருந்து கதை தழுவிய நிலையின் வளர்ச்சியைக் காண்கிறோம்.

'அம்மானை' என்ற சொல் முதலில் சிலப்பதிகாரத்தில் தான் கையாளப்பட்டுள்ளது. அம்மனை என்ற சொல்லிலிருந்து தான் அம்மானை, அம்மானை வரி, அம்மானைப் பாட்டு, அம்மானைக் காய், அம்மானை மடக்கு என்ற சொற்கள் பிறந்தன. அம்மானை என்பதற்குத் தாய், தலைவி, ஆடுங்கருவி, தீ என்ற பொருள்கள் உண்டு. கலம்பக உறுப்பு, வரிப்பாடல், பெண்பால் பிள்ளைத் தமிழ் உறுப்பு என்ற நிலையிலும் அமைகின்றது. பெண்கள் விளையாடும் விளையாட்டு அம்மானை அவ்விளையாட்டின் போது பாடப்படும் பாடல் அம்மானைவரி. அவ்விளையாட்டில் பயன்படுத்துவது அம்மானைக்காய். அம்மானைப் பாட்டு என்பது கதைப்பாடலைக் குறிக்கும். அம்மானை தோழியையும்,

விளையாட்டையும் அம்மன் சக்தியையும் குறிக்கிறது. மகளிர் இருவர் வினா விடையாக இரு பொருள்பட பாடுவது அம்மானை மடக்காகும்.

த. இராசாராம் அவர்கள் அமைப்பு அடிப்படையில் நான்காகப் பகுக்கின்றார்.

1. சிலப்பதிகார நிலையில் அமைந்த வினாவிடை நிலை.
2. திருவாசகம், பிள்ளைத்தமிழில் வரும் அம்மானை எனும் சொல்.
3. அம்மானைப் பாட்டு எனும் கதைப்பாடல் நிலை.
4. அம்மானை ஆட்டத்திற்கேற்ற தாள் இசைக்குத் தக அமைந்த நிலை.

சிலப்பதிகாரத்தில் அம்மானை வரியைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்ற.

***'வீங்குநீர் வேலி உலகாண்டு விண்ணவர்கோன்***
***ஓங்கரணங் காத்த உரவோன்யார் அம்மானை***
***ஓங்கரணங் காத்த உரவோன் உயர்விசும்பில்***
***தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்காண் அம்மானை***
***சோழன் புகார்நகரம் பாடேலோர் அம்மானை'***

வினா, விடை இறுதியில் பொதுக்கூற்று என்னும் நிலையில் அமைந்துள்ளது.

கலம்பக அம்மானையில் வினாவிற்குப் பதில் பொதுக் கூற்றும் பின்னர் வினாவும் அதன்பின்னர் பதிலும் அமைகின்றன.

***'வற்றா வளக்காஞ்சி வாழ்ந்தருள் ஏகாம்பரனார்***
***செற்றார் புரமெரித்த தீயர்காண் அம்மானை***
***செற்றார் புரமெரித்த தீயரே ஆமாயின்***
***சுற்றார்கள் அந்தணராக் கழலுவதேன் அம்மானை***
***கழறல் அறுதொழில்சேர் காரணத்தால் அம்மானை'.***

தனிப்பாடல்களாகவும் அம்மானை உள்ளது. கலம்பக அமைப்பையொட்டி அமைப்பதுடன் பொதுக்கூற்று, வினா, விடை என்ற நிலையில் உள்ளது.

*‘திருவாரும் நல்லைநகர்ச் செவ்வேல் பெருமானார்*
*இருபாலைக் குயத்தியரோடு இன்பமுற்றார் அம்மானை*
*தருவாரோ சட்டிகுடம் சாறுவைக்க அம்மானை*
*தருவர்கரண் சட்டிகுடம் சாறுவைக்க அம்மானை’*

சிலப்பதிகார அம்மானைக்கும் திருவாசக அம்மானைக்கும் பெருத்த வேறுபாடு உண்டு. திருவம்மானை ஒரு பெண்ணே பாடி ஆடும் நிலையில் உள்ளது. வினா, விடை நிலை மாறி பெண்ணே ஆடிப் பாடுகிறாள்.

பிள்ளைத் தமிழில் அம்மானைப் பருவம் பாடி ஆடும் நிலையில் இல்லாமல் இலக்கிய நிலையில் உள்ளது. பெண்பால் பிள்ளைத் தமிழ் ஒன்பதாவது பருவம் அம்மானை பருவமாகும்.

மனோன்மணிய நாடகத்திலும் வினா, விடை அமைப்பில் அம்மானை ஆட்டம் உள்ளது.

அம்மானைப் பாட்டு கதைப்பாடலைக் குறிக்கும். சிலம்பு, கலம்பக அம்மானைப் பாடல்களிலமைந்த மடக்கு, மோனை வளர்ச்சி பெறுகிறது. சிலம்பில் வினா, விடை, பொதுக்கூற்று, வினா விடை அமைப்பில் உள்ளது. திருவாசகத்தில் ஆட்ட நிலை வீழ்ச்சியடைந்து கதையமைப்பு மிஞ்சி , கதைப்பாடலாக மலர்கின்றது. பிள்ளைத்தமிழில் அம்மானை தனிப்பருவமாகவே வளர்ச்சி பெற்றது. கதைப்பாட்டும் விளையாட்டு அம்மானையும் இரு வேறுபட்ட நிலைகளாகித் தனித்தனியே வளரலாயின. கலம்பக அமைப்பு, திருவாசக அமைப்பு, கதைப்பாட்டமைப்பு, விளையாட்டுப் பாடலமைப்பு என நான்கு நிலைகளில் அம்மானை அமைந்துள்ளது.

1. வினா விடை நிலை (சிலம்பு, கலம்பகம், தனிப்பாடல்)
2. கதைநிலை (சிலம்பு)
3. சொல் நிலை (திருவாசகம்)
4. எண்ணிக்கை நிலை (சுழற்சிப்பாடல்)

என சண்முகசுந்தரம் அவர்கள் நால்வகையாகப் பகுத்து (1, 3, 4) என்ற நிலைகளில் விளையாட்டுப் பண்பும் இரண்டாவது நிலையில் கதைப்பண்பும் உள்ளதாகச் சுட்டிக்காட்டுகிறார். பெண்களது விளையாட்டினின்றும் வளர்ச்சி பெற்ற நிலையே கதைப்பாடலாகும்.

சிலப்பதிகார, திருவாசக அம்மானைகளில் கதை இடம் பெற்றிருக்கின்றது. காலப்போக்கில் விளையாட்டுக் கூறுகள் மறைந்து கதை இடம் பெற்றிருக்கின்றது. கலம்பகத்தில் ஆட்டமும், கதைப்பாடலும் இணைந்திருந்தன. திருவாசகம், பிள்ளைத் தமிழில் ஆட்டநிலை வீழ்ச்சியடைந்து கதையமைப்பு மிஞ்சி கதைப்பாட்டாக மலர்ந்த நிலையைக் காண்கிறோம். விளையாட்டும் கதைப்பாட்டும் இருவேறு நிலைகளாயின. கதைப்பாடலின் தோற்ற காலமாகப் பதினாறாம் நூற்றாண்டைக் குறிப்பிடுகிறார். மு. அருணாசலம் அவர்கள் மூவர் அம்மானை கி.பி. 1575-இல் எழுதப்பட்டது. இராமப்பய்யன் அம்மானை கி.பி. 1640-இலும் அல்லி அரசாணி மாலை போன்ற கதைப் பாடல்கள் கி.பி. 1575 – 1625-இலும் தோன்றியன.

அம்மானை எனும் கதைப்பாடலை மூன்று நிலையில் காணலாம். நூலின் பெயரிலும் உள்ளேயும் அம்மானை சொல்வரல். சிவகெங்கை அம்மானை, மாணிக்கவாசகர் அம்மானை, புவனேந்திரன் அம்மானை பெயரில் மட்டும் அம்மானை இடம் பெற்றுள்ளது. கதைப்பாடலில் அச்சொல்லே இடம் பெறவில்லை. இராமப்பய்யன் அம்மானை பெயரிலும் கதைப் பாடலிலும் அம்மானை என்ற சொல் இடம் பெறாத கதைப்பாடல்கள் நிறைய உண்டு. பெரும்பாலான அம்மானைப் பாடல் தரவு கொச்சமாய் நாற்சீராய் அமையும். திரும்பி வரல் பண்பினை அம்மானையில் காணலாம். அம்மானையில் இயற்கையைக் கடந்த நிகழ்ச்சிகளையும் காணலாம்.

சிலப்பதிகார அம்மானை - வினா – விடை – பொதுக்கூறு

கலம்பக அம்மானை - பொதுக்கூறு – வினா – விடை

தனிப்பாடல் அம்மானை - பொதுக்கூறு – வினா – விடை

பல பாடல்கள் - வினா விடை இல்லா விளக்க நிலை
பெண்பால் பிள்ளைத்தமிழ்- அம்மானைப் பருவம்
உலா அம்மானை - ஆடல் பற்றிய செய்தி

அம் + மனை ஸ்ரீ அழகிய மனையில் ஆடும் மகளிரின் ஆடல், பாடல் என்றும் பொருள் கொள்வாருமுளர். பெண்களின் விளையாட்டினின்றும் வளர்ச்சி பெற்றதே கதைப்பாடல். சிலப்பதிகார அம்மானையில் செம்பியன், சிபி, மனு, கரிகாலன் கதை இடம் பெற்றுள்ளன. திருவாசக அம்மானையில் சிவனைப் பற்றிய புராணக் கதைகள் இடம பெற்றுள்ளன. கதைப் பாடலின் தோற்றகாலம் பதினாறாம் நூற்றாண்டாகும். வீர வழிபாடு (Hero Worship) தான் அம்மானை தோன்றுவதற்கு அடித்தளம் என்கிறார். டாக்டர். மு. வரதராசனர் அவர்கள். கதைப்பாடல்கள் வீர காவியங்கள் என்கிறார் டாக்டர். நா. வானமாமலை அவர்கள்.

**கதைப்பாடல்**

மாக் எட்வர்ட் லீக் (Mac Edward Leach) கதைப் பாடலின் மரபும் தன்மையும் பற்றிக் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்.

1. கதைப்பாடல் வாய்மொழியாக வழங்கப்படுவது
2. பாட்டாகப் பாடப்படுவது
3. பொருளாலும் நடையாலும் பெயராலும் மக்கட்கே உரியது.
4. சிறு கதைகளில் காணப்படுவதைப் போன்று தனிச் சம்பவத்தைப் பிரதிபலிப்பது (A ballad focuses on a single incident as does in the short story)
5. நாடக உத்தி அமைந்து காணப்படுவது (It is highly Dramatic)

மாக் எட்வர்ட் லீக் அவர்கள் கதைப்பாடலின் வரையறையை விரிவுபடுத்தி விளக்குகிறார். எடுத்துரைக்கப்படும் எல்லா வகையான கதைகளுக்கும்,

1. கதையின் நிகழ்ச்சிப் போக்கு (Action)
2. பாத்திரங்கள் (Characters)
3. பின்புறம் (Setting)
4. கரு (Theme)

என நான்கு பண்புகள் உள. இந்நான்கு பண்புகளில் கதைப்பாடலுக்கு இன்றியமையாதது நிகழ்ச்சிப்போக்கு ஆகும். நிகழ்ச்சிப் போக்கைத் தொடர்புபடுத்தி இணைப்பதில் கதைப்பாடல் செறிவானது என லீச் குறிப்பிடுகின்றார்.

ஹோல்ஜர் ஓலாப் நிகார்டு (Holger Olob Nygard) கீழ்க்கண்டவற்றைக் கதைப்பாடல்களில் இயல்புகளாகக் கூறுகின்றார்.

1. அமைப்பியல் பண்புகளைக் கொண்டவை
2. வாய்மொழி நிலையிலும் ஓரளவு மாறாத தன்மை
3. பத்தியமைப்பு, இசைத்தொடர்பு, ஒலியமைவு, எடுத்துரைத்தலில் தொடர் ஒழுங்கு, கூட்டல் திருப்பல், கதைப்பாடல்களின் பாடல்களில் வாய் மொழியமைப்பு மாறாமல் காத்து வருகின்றன.
4. பத்தியமைப்பு மிக முக்கியமானது.

பிரிஸ்பெர்லி கதைப்பாடலின் இயல்புகளாகக் கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடுகின்றார்.

1. செய்யுள் வடிவம்
    - எளிமையான யாப்பு (Simple Metre)
    - அடுக்கிசை என்ற பல்லவி (Refroam)
    - பாடுவதற்கேற்றது
2. எடுத்துரைக்கப்படுவது
3. வாய்மொழி மரபு
4. பொதுரஞ்சகத் தன்மை
5. நோக்கம்
6. எளியமொழி
7. எழுதுவதற்கு அவ்வளவு எளிதல்ல
8. பொதுமைப் பண்பு

முதன்மைப் பண்புகளாக இவற்றைக் கூறிய அவர் துணைமைப் பண்புகளாகக் கீழ்க்கண்டவற்றைக் கூறுகிறார்.

1. ஒரு நிகழ்ச்சியை மட்டும் விவரித்தல் (Describes only one event)
2. உண்மையில் நடந்த நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொள்ளல் (Originates from Actual Incident)
3. வட்டாரக் கரு (Local theme)
4. வீரப் பண்புக்கு முக்கியத்துவம் (Prominece of Heroism)
5. எளிய பாத்திரப் படைப்பு (Simple Plot)
6. எவரும் கதைப்பாடலின் கதாநாயகன் ஆகலாம் (Anybody can become hero)
7. உரையாடல் (dialogures)
8. திரும்பத் திரும்ப வரல் (Repetitions)

சோமர் வில்லே (Somar Ville) கதைப்பாடலின் இயல்புகளாகக் கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடுகிறார்.

1. கதைப்பாடல்கள் எளிமையான யாப்பு வடிவத்தைப் பெற்றிருப்பதோடு சில அடுக்குகள் திரும்ப திரும்ப வருதலையும் பெற்றிருக்கும்.
2. சில கதைப்பாடல்கள் எழுதப்பட்டிருப்பதுடன் இயற்கை கடந்த நிகழ்ச்சிகளும் (Super Natural Elements) இடம் பெற்றிருக்கும்.
3. மந்திரம், காதல், வரலாறு பற்றியதாக இருக்கும்.

**கதைப்பாடலின் அமைப்பு**

1. காப்பு அல்லது வழிபாடு
2. குரு வணக்கம்
3. வரலாறு
4. வாழி

என்ற நான்கு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

கதைப்பாடல் துவங்கும் முன்பு இறைவனை வணங்கி பாடும் பாடலினையே 'காப்பு' என்பர். பெரும்பாலும் விநாயகர் பற்றியும் அத்துடன் அந்தந்த ஊர் நாட்டுப்புறத் தெய்வங்களைப் பற்றியும் பாடுவர். காப்புப் பாடலையடுத்து இன்ன கதையினைப் பாடப்போகிறோம் என்ற செய்தி இடம்பெறும். இதனை பாட்டாகவோ உரைநடையிலோ கூறுவர். காப்பு விருத்தம் பாடும்போதே கூறிவிடுவதும் உண்டு.

தனக்குப் பாடஞ்சொன்ன குருவணக்கம் பாடும் மரபும் உண்டு. இதனைக் 'குருவடி' என்றும் கூறுவர். அவையடக்கம் பெரும்பாலும் உரைநடையில் அமைவதுண்டு. நாட்டுவளம் பெரும்பாலும் கீழ்க்கண்ட அமைப்பிலே இடம் பெறுகின்றது.

***'நாடு நல்லநாடு***
***நாவலர்கள் புகழும் நாடு***
***இஞ்சி மஞ்சள் பூக்கள் நாடு***
***இருவாச்சி மலரும் நாடு***
***கோடைமழை பொழியும் நாடு***
***குளிர்ந்த தென்றல் வீசும் நாடு***
***மாதம் மும்மாரி மழை பொழியும் நாடு'***

பின்னர் கதையின் வரலாறு தொடங்கப்படும். கதைப்பாடலின் இறுதிப்பகுதி வழிபடுதலாகும். குதை கேட்போரும் மற்றோரும் கடவுள் அனைவரின் அருளும் பெற்று வாழ்க என வாழ்த்தலும் உண்டு.

மக்கள் முன் எடுத்துரைக்கப்படும் நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் மட்டுமே இத்தகைய அமைப்பினைப் பெற்றிருக்கும். மற்ற கதைப்பாடல்கள் பெரும்பாலும் காப்பு, வாழி போன்ற பகுதிகளைப் பெற்றிருக்காது என்பது குறிப்பிடத்தக்கது.

பொருள் அடிப்படையில் கதைப்பாடல் அமைப்பினை டாக்டர் ஷீலா ஆசீர்வாதம் அவர்கள் நான்கு வகையாகப் பகுக்கின்றார்.

1. முதன்மைச் சுற்று (Primary Cycle)

2. தலைமைச் சுற்று (Main Cycle)

3. துணைமைச் சுற்று (Secondary Cycle)

4. இடை விளக்கச் சுற்று (Interevning Cycle)

| | |
|---|---|
| முதன்மைச் சுற்று | கதைத் தலைவனின் பிறப்புக்கு முந்திய வரலாறு |
| தலைமைச் சுற்று | கதைப்பாடலின் மையக் கருத்தைக் கூறுவதாக அமையும். |
| துணைமைச் சுற்று | கதைத் தலைவனின் மரணத்திற்குப் பின் நிகழும் நிகழ்ச்சிகள் தலைமைச் சுற்றையடுத்து வரும். |
| இடை விளக்கச் சுற்று | ஏனைய மூன்று சுற்றுக்களிலும் இடை இடையே அமைந்துவரும் காரண காரியத் தொடர்பை விளக்குவதாக அமையும். |

முன்கதை, மையக்கதை, பின்கதை என்ற நிலையிலும் அடக்கலாம். தலைமைச்சுற்று, அனைத்துக் கதைப்பாடல்களிலும் நிச்சயம் இடம் பெறும். ஏனைய சுற்றுக்கள் அமைந்தோ அமையாமலோ வரலாம். சான்றுக்குச் சில கதைப் பாடல்களின் அமைப்பியல் வாய்ப்பாட்டைக் காண்போம்.

| கதைப்பாடல் | வடிவம் | உள்ளடக்கம் | அமைப்பியல் வாய்பாடு |
|---|---|---|---|
| காத்தவராயன் | Mv F | சமூகக் கதைப் பாடல் | (P(p1p2)M[m1m2m3m4g1g2)ms |
| சின்னத்தம்பி | Mv F/DF | | M(m1m2m3m4(g1g2)m5m6) |
| நல்லதங்காள் | Mv F | | P[p1p2p3p4] M[m1m2m3m4] (g1g2g3)m5m6m7m8 |
| முத்துப்பட்டன் | Mv F/DF | | P[p1p2p3p4] M[m1m2m3m4m5(g1g2g3)m6m7m8] |
| வன்னிராசன் | Mv F/DF | | M[m1m2m3m4m5(g1g2)m6] |

## கதைப்பாடலின் மூலம் அறியலாகும் செய்திகள்

கதை நிகழ்த்துவதற்கு அடிக்கருத்துக்கள் பெரிதும் பயன்படுகின்றன. கதைப்பாடல்கள் பல்வேறு அடிக்கருத்துக்களை இணைத்துக் கதைப்பாடலை உருவாக்குகிறான். 'ஒரு கதையை வாய்மொழி வாய்பாட்டு நடையில் பரம்பரையாகச் சொல்லி வரும்போது பயன்படுத்தப்படும் கருத்துக்களின் தொகுதிகளை அடிக்கருத்துகள் என்கிறார் ஆல்பர்ட் பேட்ஸ் வார்டு அவர்கள்.

மரபுவழி வாய்மொழிப் பாடல்களில் எடுத்துரைப்பதற்காக மீண்டும் மீண்டும் வரும் ஒரு கூறு அல்லது வருணனை அடிக்கருத்தாகும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. வாய்பாடு என்பது எடுத்துரைப்பதற்காகவும் வருணிப்பதற்காகவும் வரும் கூறு என்றாலும் யாப்பியல் முறையில் கட்டுப்படுத்தப்பட்டது. அடிக்கருத்துகளில் அளவில் மட்டுமின்றி அவற்றின் வாய்ப்பாட்டு உள்ளடகத்திலும் மாறுபடுகின்றன. எனவே அடிக்கருத்து என்பது செறிவின்றி மீண்டும் மீண்டும் வரக்கூடியது எனலாம்.

தமிழ்க் கதைப் பாடல்களில் காணப்படும் அடிக்கருத்துக்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. முப்பத்திரண்டு சமூகத்தைப் பாடல்களின் அடிப்படையில் அடிக்கருத்துக்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

1. காப்பு 2. நாட்டு வளம் 3. குழந்தை இல்லாமை 4. குறத்தி குறி சொல்லல் 5. தவம் செய்தல் 6. கருவுறுதல் 7. பிள்ளை பிறத்தல் 8. சோதிடன் குறி சொல்லல் 9. பள்ளியில் படித்தல் 10. அண்ணன்மாரைப் பிரிந்து செல்லல் 11. அரசனிடம் பணியாற்றல் 12. அரசன் பரிசளித்தல் 13. பெண்களைக் கண்டு காதல் 14. உரையாடல் 15. தந்தை ஆயுதமெடுத்தல் 16. மணந்துகொள்ள விருப்பம் தெரிவித்தல் 17. திருமணத்திற்கு நிபந்தனை விதித்தல் 18. பெண்ணை மணப்பதாக உறுதி கூறல் 19. சகோதரர்கள் சிறையிலிடலும் தப்பித்தலும் 20. நிபந்தனையை நிறைவேற்றல் 21. திருமணம் 22. களவு போதல் 23.

கனவு 24. போரிடல் 25. கொடிசுற்றிக் குழந்தை பிறத்தல் 26. காட்டில் விடப்பட்டு நாகப்பாம்பால் பாலூட்டல் 27. சக்கிலியன் வளர்த்தல் 28. ஆரசன் மகளைக் காதலித்து மணம் முடித்தல் 29. அரசன் போரில் இறத்தல் 30. மற்றொரு மன்னனிடம் பணியாற்றல் 31. கள்ளரை அடக்க மதுரை செல்லல் 32. அரண்மனை பெண்ணைத் தூக்கிச் செல்லும் போது மாறுகால் மாறுகை வாங்கப்படல் 33. சேபிளையான் வளர்த்தல் 34. ஆரிய மாலையைச்சிறை எடுத்தல் 35. மன்னனிடம் முறையிடல் 36. இறந்த பெண்ணை உயிர்பெறச் செய்தல் 37. உயர்சாதி வீட்டில் தங்க எதிர்ப்பு 38. காதலனும் காதலியும் சந்தித்தல் 39. ஊரைவிட்டுப் புறப்படல் 40. அண்ணன்மார் தேடல் 41. காட்டிக் கொடுத்தல் 42. பெண்ணை விரும்பல் 43. பெண்ணின் தந்தை மறுத்தல் 44. கோடை நாளில் திருமணம் செய்தல் 45. சுடலைக்கு நேர்ந்த பன்றியைக் கொல்லல் 46. மச்சினன் சகோதரி கணவனைக் கொல்லல் 47. இரண்டு ஆண் குழந்தைகள் பிறத்தல் 48. தந்தை வரலாறு அறிதல் 49. மச்சினன் சகோதரி கணவனைக் கொல்லல் 50. திருடர்களை விரட்டியடித்தல் 51. மக்கள் புகழ்ந்து பரிசு வழங்கல் 52. குலப் பெருமை அறிதல் 53. பகைவனுடன் மோதல் 54. மற்ற அரசனின் உதவியைப் பெறல் 55. சூழ்ச்சியால் கொல்லப்படல் 56. தீச்சகுனங்கள் 57. சுனையாடும்போது வழிதவறல் 58. கருவூலத்தை எடுக்கத் திருடர்களால் கொல்லப்படல் 59. கொடிய விலங்குகளால் திருடர்கள் அழிதல் 60. உறவினர்கள் மாள்தல் 61. வேட்டையாடல் 62. திருடல் 63. பிடிபடல் 64. மந்திரவாதி வீட்டில் தங்கல் 65. மாட்டிறைச்சி விரும்பல் 66. கள்ளனைக் கண்டு பிடித்துக் கொலை செய்யல் 67. நாக்கைப் பிடுங்கிச் சாதல் 68. குதிரையடக்கி மந்திரியாதல் 69. பெண்ணுடன் தொடர்பு 70. தம்பிக்குத்தன் மனைவியுடன் தொடர்பு இருக்குமென ஐயப்பட்டு சுடல் 71. அண்ணன் கொழுந்தனுடன் உடன்கட்டை ஏறல் 72. கணிகையர் தொடர்பு 73. மந்திரத்தால் பலர் இறத்தல் 74. கற்பழிப்பு 75. திருமணப் பேச்சு மறுப்பு 76. பஞ்சம் 77. ஆண்ணன் வீடுவரல் 78. அண்ணி இறத்தல் 79. ஏழு குழந்தைகளைக் கிணற்றில் வீசித் தானும் இறத்தல்

80. அனாதை 81. வேலை இல்லை 82. தடி எடுத்துத் தண்டல்காரனாதல் 83. பெருஞ் செல்வந்தனாகி மந்திரியாதல் 84. வழிப்பறி செய்து ஏழைகளுக்கு அளித்தல் 85. குற்றமிழைத்தல் கொடுத்தல் 86. காவலர் தேடல் 87. தலைமறைவு வாழ்க்கை 88. காட்டிக் கொடுத்தல் 89. தண்டனை பெறல் 90. புதையல் எடுத்தல் 91. கோயில் பூசை 92. மகனைத் திரும்பித் தரத் தெய்வம் மறுத்தல் 93. தலைவன் கொல்லப்படுதல் 94. தலைவி கொல்லப்படுதல் 95. புதையலுக்காகக் கொல்லப்படல் 96. கழுவிலேற்றம் 97. நாய் சாவைத் தெரியப்படுத்தல் 98. உடன்கட்டை ஏறல் 99. தீக்குளித்தல் 100. நாக்கைப் பிடுங்கிச்சாதல் 101. வன்னி மரமாதல் 102. உயிர் பெற்று எழல் 103. வரம் பெற்றுப் பழி வாங்கல் 104. தெய்வமாதல் 105. வழிபடுதல் 106. வாழ்த்து

மந்திர சக்திகாலம், தெய்வீக உறவுக்காலம், தன்னிகரில்லாத மனிதர்காலம் பழைய கருத்துக்களால் கட்டுண்டு அவற்றிற்குப் பலியாகும் கதைத்தலைவர் காலம், சமுதாயச் சட்டங்களையும் வழக்கங்களையும் எதிர்த்து உயிர்விடும் காலம் முதலிய ஐந்து வகையான காலகட்டங்களில் இருவகையான சோகபாத்திரங்கள் இருவகையான காரணங்களால் தோற்றம் பெறுவதை நா. வானமாமலை அவர்கள் கூறுவதை இங்கு குறிப்பிடுவது இன்றியமையாததாகும்.

ஒவ்வொரு கட்டத்திலும் பழமையும் புதுமையும் ஒன்றையொன்று எதிர்க்கின்றன. கடைசிக் கட்டத்தில் பழமையின் செல்வாக்கு இருந்தபோதிலும் அதனை எதிர்த்துப் புதிய கருத்துக்கள் தோன்றுகின்றன. புதிய கருத்துக்களுக்காகப் போராடுபவர்களைப் பழைய கருத்துடையவர்கள் சமுதாய அமைப்பில் மேல்நிலையில் உள்ளவர்கள் அந்த நிலையைப் பாதுகாத்துக் கொள்ளச் சமுதாயச் சட்டங்களைப் பயன்படுத்தி அடக்குகிறார்கள். கருத்துப் போரில் பழமை பலவீனமடைந்து விட்டதையே இது காட்டுகிறது. கடைசிக் காலக் கட்டத்தில் கருத்துப் போரை விட்டுவிட்டுப் புதிய கருத்தை அழிக்க ஆளும் பிரிவினர் வன்முறையும் சூழ்ச்சிகளையும் பயன்படுத்துகின்றனர். அவற்றிற்கு அடிபணியாது தமது புதிய கருத்திற்கும் புதிய வாழ்க்கை

ஆர்வத்திற்காகவும் மறுக்கப்பட்ட மனித உரிமைகளைப் பெறவும் போராடும் வீரர்களே நமது கதைப்பாடல்களில் வரும் சோகபாத்திரங்களான முத்துப்பட்டன், சின்னத்தம்பி ஆகியோர், பழமையான சிந்தனைகளால் செயலூக்கம் இழந்து, புதிய நிலைமைகளை அறிய முடியாமல் புதிய சக்கரங்களுக்குப் பலியாகிற சோகப் பாத்திரங்கள் பெரும்பாலும் உயர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், சிற்றரசர்கள், பாளையக்காரர்கள், தளபதிகள், அதிகாரிகள் முதலியோர் இவர்களுக்கு உதாரணங்கள் குலசேகரன் (ஐவர் ராசாக்கள் கதை), சடைக்கத் தேவன் (இராமய்பய்யன் அம்மானை), இரவிக்குட்டி பிள்ளை (இரவிக்குட்டிப் பிள்ளை போர்), கான்சாகிபு (கான்சாகிபு சண்டை), மருது சகோதரர்கள் (சிவகெங்கை அம்மானை), கட்டபொம்மு, ஊமைத்துரை (வீர பாண்டியக் கட்டபொம்மு கதைப்பாடல்).

கதைப்பாடல்கள் வீரகாவியங்களாகும். மனிதப் பண்பின் உயர்ந்த அம்சங்களையும் சமூகத்தின் சீர்கேடுகளையும் சமுதாயத்தின் பழக்க வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் விளக்குகின்றன. வரலாற்றையும் அறிந்து கொள்ளப் பயன்படுகின்றன. எனவே,சமூகவியல் பேரறிஞர்களுக்கும், வரலாற்று ஆசிரியர்களுக்கும் மொழியியல் பேரறிஞர்களுக்கும் பெருந்துணை புரிகின்றன எனலாம்.

**வினாக்கள்**

1. நாட்டுப்புறக் கதைகளின் வகைப்பாடுகளை விவரி?
2. கதைப்பாடலின் அமைப்பு விளக்குக.
3. கதைப்பாடலின் வாயிலாக அறியப்படும் செய்திகள் யாவை?

## பாடம் 4

### பழமொழிகள்

மூதறிவிலிருந்து தோன்றிய மொழி பழமொழி. நினைப்பிற்கும் எட்டாத பழங்காலத்திலிருந்தே மக்கள் வாழ்வில் வாழ்ந்து வருபவை என்பதைப் பழமொழியிலுள்ள ‘மொழி’ என்னும் சொல் உறுதிப்படுத்துகிறது. சமுதாயத்தின் அனுபவ முதிர்ச்சியையும் அறிவுக்கூறுகளையும் விளக்கும் சான்றாகப் பழமொழிகளும் விடுகதைகளும் திகழ்கின்றன. உலகிலுள்ள அனைத்து மொழிகளிலும் பேச்சு மொழியே முதன்மையானது என்பது அனைவரும் அறிந்ததொன்றாகும். ஆங்கிலச் சொற்களான Sayings, old sayings என்பதை நோக்கின் இவ்வுண்மை புலனாகும்.

தமிழில் பழமொழிக்கு மூதுரை, முதுமை, மொழிமை, முன்சொல், முதுசொல், பழஞ்சொல் என ஆறுபொருள் இருப்பதாகச் சேந்தன் திவாகரம் கூறுகின்றது. மலையாளத்தில் ‘பழஞ்சொல்’ என்றும் தெலுங்கில் ‘நாதுடி’ என்றும் கன்னடத்தில் ‘நாண்ணுடி’ ன்றும் ஆங்கிலத்தில் ‘Proverb’ என்றும் அழைக்கின்றனர். தமிழ் இலக்கிய, இலக்கணங்களை ஆராய்ந்து பார்த்தால், பழமொழியைக் குறிக்க முப்பத்திநான்கு சொற்கள் இருப்பதாக டாக்டர். வ. பெருமாள் அவர்கள் குறிப்பிடுகிறார். 1. பழகுமொழி 2. தொன்னெறி மொழி 3. முதுமொழி 4. முதுசொல் 5. தோன்றுபடு கிறவி 6. தொன்றுபடு பழமொழி 7. புழமொழி 8. வாய்மொழி 9. அறம் 10. நெடுமொழி 11. பல்லவையோர் சொல் 12. பண்டைப் பழமொழி 13. சொலவு 14. மூதுரை 15. பழஞ்சொல் 16. மூத்தோர் சொல் வார்த்தை 17. வழக்கு 18. உரை 19. பழைய நெறியனாய் வரும் சொல் 20. பழவார்த்தை 21. உலகமொழி 22. உபகதை 23. சுலோகம் 24. சொலவடை 25. வசனம் 26. எழுதா இலக்கியம் 27. வாய்மொழி இலக்கியம் 28. எழுதாக்கிளவி 29. கேள்வி 30. சருதி 31. நீதிமொழி 32. முதுமை 33. மொழிமை 34. முன்சொல்.

அனுபவ முதிர்ச்சியிலே பிறந்த பழமொழிகள் சுருக்கம், தெளிவு, பொருத்தம் ஆகிய இயல்புகளால் மாறாத அமைப்புடன் (Fixed Phrase Genre) பயின்று வருகின்றன. நாட்டுப்புற இலக்கியங்களிலே குறுகிய அமைப்புக்கொண்ட பழமொழிகளும், விடுகதைகளும் ஒன்றொடொன்று நெருங்கிய தொடர்புடையனவாகும். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றல் வாய்ந்தன. மக்கள் மனதிலே ஆழமாக பதிந்து நற்செயலைத் தூண்டச் செய்வன. பழமையான நம்பிக்கைகளையும், வரலாற்றினையும் பண்பாட்டினையும் மனித உணர்வுகளையும் காட்டுபவை பழமொழிகள். பழமொழிகள் சமுதாயத்தின் அனுபவ முதிர்ச்சியையும் அறிவுக்கூறுகளையும் விளக்கும் சான்றாகத் திகழ்கின்றன.

'பழமொழி' என்ற சொல்லே பழமொழி பற்றிய சிறந்த வரையறையாக அமைந்துள்ளது என்கிறார் ஜான் லாசரஸ் அவர்கள். பழமொழி என்பது உலகுக்கு உணர்த்தும் உண்மையை ஒரு சிறிய வாக்கியத்தின் மூலம் சுருக்கிக் கூறுவது ஆகும். அப்பழமொழி முழுமையாக இல்லாவிடினும் அதை விளக்கிக் கூறும்போது முழுக்கருத்தும் வெளிப்படும் என்கிறார் துர்கா பகவத் அவர்கள். ரிச்சார்டு டார்சன் (Richard Dorson) அவர்கள் பழமொழியானது எளிதில் கவனிக்கக்கூடிய, சேகரிக்கக்கூடிய தொன்மை வாய்ந்த கருத்தாகும். இருப்பினும் எளிதில் புரிந்து கொள்ளக் கடினமானது என்கிறார். ஜான் ரஸ்ஸல் (John Russel) அவர்கள் பழமொழி பலரின் அறிவையும் ஒருவரின் உண்மைத் தன்மையையும் உணர்த்துவனவாகும் என்கிறார். எல்லோருக்கும் தெரிந்த உண்மைகளைச் சிறு வாக்கியத்தில் வெளிப்படுத்துவன பழமொழிகள் என ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி எடுத்தியம்புகிறது.

பழமொழி என்ற சொல்லே மிகப் பழமையானவற்றை உணர்த்துவதாகும். பலரது அறிவையும் ஒருவரது நுண்ணுணர்வையும் அறிய முடியும் அறிவின் சுருக்கமே பழமொழி எனலாம். பழமொழிகள்

மக்களது வாழ்வுடன் வாழ்வாகப் பின்னிப் பிணைந்து விட்டன. பழமொழி மூலம் மக்களது பண்பாட்டையும் நாகரிகத்தையும் அறிந்து கொள்ளலாம். சமூகத்தின் அனைத்து நிலைகளிலுமுள்ள மக்களின் பண்பாட்டை அறியத் துணைபுரிகிறது. பொருட்செறிவும் ஆழ்ந்த கருத்துக்களும் நிரம்பிய சொற்றொடர்கள் பழமொழி என்ற குறியுடன் நின்று நிலவுகின்றன. பழைய மொழி பழமொழி, அ.ஃது பழமையும் எளிமையும், இனிமையும் வாய்ந்தது. பழமொழிகள் அறவுரையையும் அறிவுரையையும் கொண்டிலங்குவதோடு வாழ்க்கைக்குக் கைவிளக்காகவும் பயன்படுகின்றன.

அறிவு வளர்ச்சியிலே பிறந்து சுருக்கம், தெளிவு, பொருத்தம் ஆகிய பண்புகளால் என்றும் இறவாமல் இவ்வுலகில் வாழ்கின்றன என்கிறார் அரிஸ்டாட்டில் எனும் பேரறிஞர். வாழ்க்கை அனுபவ அடிப்படையில் எழுந்த குறகிய அமைப்புடையது பழமொழி என்கிறார் ஜெர்மன் நாட்டுப் பேரறிஞர் செல்வந்தே அவர்கள் டிரென்ச் (R. C. Trench) அவர்கள் 'பழமொழிகளும் அவற்றின் படிப்பினைகளும்' என்ற நூலில் பழமொழி ஒரே மூச்சில் சொல்லக் கூடியதாகவும் சுருக்கமாகவும், செறிவாகவும், கூர்மையாகவும் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தக்கூடியதாகவும் இருக்க வேண்டும் என்கிறார். இவர் கூறும் வரையறை ஏறத்தாழ தொல்காப்பியர் கூறும் வரையறை போன்று உள்ளது எனலாம். ஆலன் டாண்டிஸ் (Alan Dundes) அவர்கள் பழமொழிக்கு அமைப்பியல் அடிப்படையில் வரையறை கூறுகிறார். ஒவ்வொரு பழமொழியும் விளக்கக்கூறு (Discriptive Element) ஒன்றினைப் பெற்றிருக்கும். அவ்விளக்கக்கூறு தலைப்பையும் (Topic) முடிபுரை (Comment)யையும் பெற்றிருக்கும். இவ்வரையறை மூலம் ஒருசொல் பழமொழிக்கு (One word proverb) வாய்ப்பில்லை என அறிகிறோம்.

**பழமொழி வகைப்பாடு**

1. சுமித் (Smith) அவர்கள் பழமொழிகளை ஏழு பிரிவாக வகைப்படுத்துகிறார்.

1. உவமைத் தன்மையன
2. கேலித் தன்மையன
3. சிலேடைத் தன்மையன
4. மரபுத் தன்மையன
5. சொற்றொடர்கள்
6. விடுகதைத் தன்மையன
7. ஒலி இயைபின

2. ஆப்ரஹாம் (Roger D Abraham) அவர்கள் பழமொழிகளை நான்கு வகையாகப் பாகுபடுத்துகிறார்.

1. நேர்சம மதிப்பு (Positive Equivalence) காலம் பொன்னானது.
2. எதிர்மறை சமமதிப்பு (Negetive Equivalence) ஏற்றப்பாட்டிற்கு எதிர்ப்பாட்டில்லை.
3. நேரடி காரண காரியத் தொடர்பு (Positive Causational) பதறிய காரியம் சிதறிப் போகும்.
4. எதிரிடை காரண காரியத் தொடர்பு (Negative Causational) இரண்டு குற்றங்கள் நியாயமாகாது.

3. பிரௌனே (B. Browne) அவர்கள் பழமொழியை இரண்டாக வகைப்படுத்துகிறார்.

1. இலக்கியப் பழமொழி (Literary)
2. இலக்கியமில்லாப் பழமொழி (Non-Literary) அல்லது மரபுப் பழமொழி

4. டாக்டர். சு. சக்திவேல் அவர்கள் தமிழ்ப்பழமொழிகளை ஐந்து வகையாக வகைப்படுத்துகிறார்.

1. அளவு அடிப்படை (Size Basis)
2. பொருள் அடிப்படை (Subject Basis)
3. அகரவரிசை அடிப்படை (Alphabetical Basis)
4. அமைப்பியல் அடிப்படை (Structural Basis)

5. பயன் அடிப்படை (Functional Basis)

5. டாக்டர். க. சாந்தி அவர்கள் தமிழ்ப்பழமொழிகளை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கின்றார்.

| | |
|---|---|
| 1. உருவத்தை அடிப்படையாகக் கொண்ட பழமொழிகள் | வாக்கிய அமைப்புள்ள பழமொழிகள் மேற்கோள் பழமொழிகள்<br>ஒலியியைபுப் பழமொழிகள்<br>கேள்விப் பழமொழிகள்<br>உவமைப் பழமொழிகள் |

2. பொருளை அடிப்படையாகக் கொண்ட பழமொழிகள்

1) வேளாண்மைப் பழமொழிகள்
2) மிருகங்கள் பற்றிய பழமொழிகள்
3) பறவைகள் பற்றிய பழமொழிகள்
4) வேடிக்கைக் பழமொழிகள்
5) நெருப்புப் பழமொழிகள்
6) வானவியல் பழமொழிகள்
7) அறிவுரைப் பழமொழிகள்
8) பொருளின் குணத்தை அடிப்படையாகக் கொண்ட பழமொழிகள்
9) நம்பிக்கைப் பழமொழிகள்
10) விலக்குப் (வயடிழழ) பழமொழிகள்
11) எதிரான கருத்துப் பழமொழிகள்
12) இரட்டைப் பொருள் பழமொழிகள்
13) குறிப்புடன் கூடிய பழமொழிகள்
14) திருமணம் பற்றிய பழமொழிகள்
15) ஓரே பொருளைத் தரும் பழமொழிகள்

6. பேராசிரியர் வ. பெருமாள் அவர்கள் தமிழ்ப் பழமொழிகளைப் பதினெட்டு வகையாக வகைப்படுத்துகிறார்.

1. பொருள் அடிப்படை
2. தகுதி அடிப்படை

3. சமுதாய அடிப்படை

4. சமய அடிப்படை

5. ஒத்த கருத்து அடிப்படை

6. ஒரு கருத்து பலதுறை அடிப்படை

7. வட்டார அடிப்படை

8. நிலை எல்லை அடிப்படை

9. சொல் அடிப்படை

10. அளவு அடிப்படை

11. கருத்து எண்ணிக்கை அடிப்படை

12. அமைப்பு அடிப்படை

13. கதை அடிப்படை

14. நூல் அடிப்படை

15. இலக்கண இலக்கிய அடிப்படை

16. செவிப்புல அடிப்படை

17. அணியியல் அடிப்படை

18. பல்பொருள் அடிப்படை

ஒவ்வொரு அடிப்படையின் கீழும் பல்வேறு உட்பிரிவுகள் உண்டு. அனைத்துப் பழமொழிகளையும் சேகரித்து ஆராய்ந்தால் முறையான அறிவியல் அடிபப்படையிலமைந்த வகைப்பாடு செய்யலாம்.

## பழமொழியின் தன்மை

தினந்தோறும் வாழ்க்கையில் ஏற்படும் அனுபவங்களின் திரட்டே பழமொழியாகும். அனுபவத்தின் அடிப்படையில் எழுந்தவை. அறிவின் சுருக்கமே பழமொழி எனலாம். வாழ்க்கையில் உயிர்ப் பண்பும், உணர்வுப் பண்பும் அறிவுப் பண்பும் பழமொழிகளில் கருவாக அமைந்து வாய்மொழி இலக்கியங்களில் சிறந்ததொன்றாகக் கருதப்படுகின்றது. சிந்தனை ஆற்றலுக்கும் அறிவு வளர்ச்சிக்கும் பெருந்துணையாக உள்ளது. தமிழ்ப் பழமொழிகளைத் தமிழ் மக்களின் அறிவுக் களஞ்சியம் என்றே கூறலாம்.

பழமொழி செய்யுளிலும், உரைநடையிலும் அமைந்துள்ளது. செய்யுளுக்குரிய எதுகை, மோனை, இயைபு முதலியவற்றை இவற்றில் காணலாம். பழமொழி கூறப்படும் சூழலையொட்டிப் பொருள் வேறுபடுவதும் உண்டு. சில பழமொழிகள் கதைகளின் சாறு ஆகும். எனவே தான் பழமொழிக்குத் தஞ்சை மாவட்டத்தில் 'உபகதை' என்றும் இராமநாதபுர மாவட்டத்தில் 'ஒவகதை' என்றும் வழங்குவதும் குறிப்பிடத்தக்கது. பழமொழிகள் பெரும்பாலும் உவமைகளாகவும், சிலேடைகளாகவும் சொற்றொடர்களாகவும், மரபுத்தொடர்களாகவும், கேலித்தன்மையினவாகவும் விடுகதைத் தன்மையினவாகவும் அமைந்திருக்கின்றன. பழமொழியும், விடுகதையும் நிலைத்த தொடர் அமைப்புடையவாகும் (Fixed Phrase genre) பழமொழி அது வழங்கும் இயற்கைச் சூழலைப் பொறுத்தே பழமொழியாகும். புழமொழி நேர் பொருளை உணர்த்துவதோடு தற்சார்பற்றதாகும்.

பழமொழிகள் பொதுவான (Universal) உண்மையின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். மக்களிடையே வழக்கில் உள்ளனவாக இருக்க வேண்டும். அளவில் சிறியவையாக இருக்க வேண்டும். இயற்கையிலே உருவகம் அமைந்தவையாக இருக்க வேண்டும். மக்களின் பண்பாட்டைப் பிரதிபலிப்பனவாகவும் உணர்த்தக் கூடிய கருத்தின் அடிப்படையிலும் தனித்தன்மை வாய்ந்தவையாகவும் மிகவும் புகழ்ப்பட்டு மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடியவையாகவும் இருக்க வேண்டும்.

## பழமொழியின் அமைப்பு

பழமொழிக்கு இரு சொற்கள் இருந்தே தீரவேண்டும். இதனைத்தான் ஆலன் டாண்டிஸ் (Alan Dundes) தலைப்பு (Topic) முடிபுரை (Comment) பெற்றிருக்க வேண்டும் என்கிறார். இதன் மூலம்

ஒரு சொல் பழமொழி (One word proverb)க்கு வாய்ப்பில்லை என அறிகிறோம்.

| தலைப்பு (Topics) | முடிபுரை (Comment) |
|---|---|
| அழுத பிள்ளை | பால் குடிக்கும் |
| அதிக ஆசை | அதிக நஷ்டம் |
| காய்ந்த மரம் | கல்லடி படும் |

**பழமொழியின் கருப்பொருள்**

உலகில் காணப்படும் அனைத்துப் பொருட்கள் பற்றியும் பழமொழி பேசுகின்றது. பழமொழி தொடாத பொருளே இல்லை எனலாம். பழமொழியில் காணப்படும் கருத்துக்கள் எக்காலத்திற்கும் பொருந்துவனவாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். மனித சமுதாயத்தில் காணப்படும் நம்பிக்கை, பழக்கவழக்கங்களையும் பழமொழி விளக்குகின்றது. மனித சமுதாய வரலாற்றை விளக்கும் வாயிலாகவும் உள்ளது.

பழமொழியின் கருப்பொருளை 1. மக்கள் இனம் (ர்ரஅயெ டீநபைௌ)
2. விலங்கினம் 3. மரம், செடி, கொடி, இனம் 4. பண்பாடு 5. பல்பொருள் பற்றியது எனப் பிரிக்கலாம். இப்பெரும் பிரிவில் பல உட்பிரிவுகளும் உண்டு.

1. இயற்கை
2. மனித உலகம்
3. விலங்குகளும் பறவைகளும்
4. மரம், செடி, கொடிகள்
5. குடும்பம்
6. சாதி
7. வேளாண்மை
8. கல்வி

9. பொருளாதாரம்
10. தத்துவம்
11. தெய்வம்
12. நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும்
13. மாதமும் கிழமையும்
14. வானிலை
15. பல்பொருள் பற்றியது (Miscellaneous)

**இயற்கை பற்றிய பழமொழிகள்**

1. சூரியனைக் கண்ட தாமரைபோல்
2. பூமியைக்போல பொறுமை வேண்டும்
3. ஆடியில் காற்றடித்தால் ஐப்பசியில் மழை பெய்யும்

**மனித உலகம்**

1. பாம்புக்குப் பல்லில் விஷம்
   பங்காளிக்கு உடம்பெல்லாம் விஷம்
2. கல்லானாலும் கணவன்
   புல்லானாலும் புருஷன்
3. மச்சினன் உண்டானால் மலையேறிப் பிழைக்கலாம்

**விலங்குகளும் பறவைகளும்**

1. ஆட்டுக்கு வாலை அளந்து வைத்தாற்போல
2. நாயைக் கண்டால் கல்லைக் காணோம்
   கல்லைக் கண்டால் நாயைக் காணோம்
3. பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது
4. உயரப்பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது
5. காகம் வலமானால் ஆயுள் விருத்தியாகும்.

**மரம், செடி, கொடிகள்**

1. கொடிக்குக் காய் பாரமா?
2. தென்னை வைத்தவன் தின்றுவிட்டுச் சாவான்
   பனை வைத்தவன் பார்த்துவிட்டுச் சாவான்
3. இஞ்சி லாபம் மஞ்சளிலே
4. மிளகு சிறுத்தாலும் வீரியம் போகுமா?

**குடும்பம்**

1. தந்தை எவ்வழி அவ்வழி புதல்வன்
2. கை நிறைந்த பொன்னைக் காட்டிலும் கண் நிறைந்த கணவன் மேல்
3. உள்ளூர் பெண்ணும் அயலூர் மண்ணும் ஆகாது
4. தாய்க்குப் பின் தாரம்
5. மாமியார் உடைத்தால் மண்குடம்
   மருமகள் உடைத்தால் பொன்குடம்

**சாதி**

1. எண்ணிச் செய்கிறவன் செட்டி
   எண்ணாமல் செய்கிறவன் மட்டி
2. தாய்ப்பவுன் ஆனாலும்
   மாப்பவுன் எடுப்பான் தட்டான்
3. இடையன் புத்தி பிடரியிலே

**வேளாண்மை**

1. அகல உழுவதை விட ஆழ உழு
2. அந்தி ஈசல் அடைமழைக்கு அறிகுறி
3. உழுதவன் கணக்குப் பார்த்தால் தார்க்குச்சி மிஞ்சாது
4. சோம்பேறிக்கு சோளம் வெள்ளாண்மை
5. நன்செய்க்கு ஏழு உழவு, புன்செய்க்கு நான்கு உழவு
6. கை காய்த்தால் கழுகு காய்க்கும்
7. வெற்றிலைக்குத் தண்ணீரும் வேசிக்கு மஞ்சளும் போல

8. அக்கரைக்கு மாட்டுக்கு இக்கரை பச்சை
9. உள்ளூர் மருமகனும் உழுகிற கடாவும் சரி
10. கன்றைக் காணத பசுபோல

### கல்வி

1. இளமையிற் கல்
2. கற்றது கைம் மண்ணளவு
   கல்லாதது உலகளவு
3. கல்வியில்லாச் செல்வமும்
   கற்பில்லா அழகும் பிரகாசிக்காது

### பொருளாதாரம்

1. திரை கடலோடியும் திரவியம் தேடு
2. வரவுக்குத் தகுந்தபடி செலவு செய்
3. வட்டிக்கு ஆசை முதலுக்குக் கேடு
4. வரவுக்குத் தகுந்த செலவு
   மாப்பிள்ளைக்குத் தகுந்த மஞ்சம்
5. மலிந்த சரக்கு சந்தைக்கு வரும்

### மருத்துவம்

1. சுக்கு இல்லாத கசாயம் உண்டா?
2. வேலப்பட்டை மேகத்தைப் போக்கும்
   ஆலம்பட்டை பித்தத்தைப் போக்கும்
3. கோழையை அறுக்கும் குப்பைமேனிச்சாறு
4. ஆலும், வேலும் பல்லுக்குறுதி

### இலக்கண இலக்கியம்

1. கல்லாடம் படித்தவனிடம் சொல்லாடாதே
2. வில்லுக்கு விசயன்
3. ஆற்று மணலை எண்ணினாலும்
   அர்ச்சுனன் மனைவியை எண்ண முடியாது

**நுண்கலை**

1. ஆடிய காலும் பாடிய நாவும் சும்மா இராது
2. கைப்பட்டால் கண்ணாடி
3. பாடப் பாட ராகம் மூட மூட ரோகம்

**உளவியல்**

1. ஆசைக்கு ஓர் அளவில்லை
2. மனக்கவலை பலக்குறைவு
3. நார் அறுந்தால் முடியலாம்
   மனம் அறுந்தால் முடியலாமா?

**தத்துவம்**

1. ஆசை அண்டினால் அழுகையும் அண்டும்
2. செத்த பிணங்களைக் கண்டு
   சாகும் பிணங்கள் அழுகின்றன
3. அச்சாணி இல்லாத தேர்
   முச்சாணும் ஓடாது
4. இன்றிருப்பார் நாளை இல்லை

**தெய்வம்**

1. திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை
2. நாம் ஒன்று நினைக்கத்
   தெய்வம் ஒன்று நினைக்கும்
3. தெய்வமே துணை

**பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்**

1. பரணியில் பிறந்தவன்
   தரணி ஆள்வான்
2. தொட்டில் பழக்கம்
   சுடுகாடு மட்டும்
3. சனிப்பிணம் தனியே போகாது
4. மாலைசுற்றிப் பிறந்த பிள்ளை மாமனுக்கு ஆகாது

5. தாரமும் குருவும் தலைவிதிப்படி

**வானிலையியல்**

1. தட்டான் தாழப்பறந்தால்
   தப்பாமல் மழை வரும்
2. ஐப்பசிமாதம் அடைமழை
   கார்த்திகை மாதம் கனமழை
3. அந்தி ஈசல் பூத்தால்
   அடைமழை அதிகரிக்கும்

**மாதம், கிழமை**

1. சித்திரை மாதம் சீர் கூட்டும்
2. ஆடிப்பட்டம் தேடி விதை
3. தை பிறந்தால் வழி பிறக்கும்
4. ஞாயிறு பிறப்பு நாய் பிறப்பு
5. பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது
6. வேதம் பொய்த்தாலும்
   வியாழன் பொய்க்காது
7. வெள்ளிக்கிழமை கொள்ளிக்காகாது

**பல்பொருள் (Miscellaneous)**

1. வல்லான் வகுத்ததே வாய்க்கால்
2. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்
3. மனம்போல வாழ்வு
4. தாய் செய்தால் மணம்
   மகள் செத்தால் பிணம்
5. கறந்த பால் முறை ஏறுமா?
6. தலை எழுத்து சிரைத்தால் போகுமா?
7. கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்
8. கிணற்று நீரை வெள்ளமா கொண்டு போகும்?
9. நாக்குக்கு நரம்பில்லை

10. தன் கையே தனக்குதவி

## பழமொழி நடையியல் ஆய்வு (Stylistic Study of Provers)

1. **Echo Word**

   புலி பிடித்ததோ

   கிலி பிடித்ததோ

2. **Parallelism**

   கழுத்தில் இருப்பது உத்திராட்சம்

   கையில் இருப்பது கன்னக்கோல்

3. **Coupling**

   அக்காள் உடைமை அரிசி

   தங்கச்சி உடைமை தவிடு

4. **Onomatopoeia**

   வாய் வழவழ கை கரகர

5. **Epistrophe**

   மரத்தை இலை காக்கும்

   மானத்தைப் பணம் காக்கும்

6. **Anadiplosis**

   ஆனதுக்கு ஒரு ஆகாதது

   ஆகாததுக்கு ஒரு ஆனது

7. **Epanalepsis**

   திணை விதைத்தவன் திணை அறுப்பான்

   வினை விதைத்தவன் வினை அறுப்பான்

## பழமொழியும் தமிழ் இலக்கியங்களும்

தொல்காப்பியர் பழமொழியை ‘முதுசொல்’, ‘முதுமொழி’ என்று குறிப்பிடுகிறார்.

***‘…………………………………..***

***அங்கதம் முதுசொலோடு அவ்வேழ் நிலத்தும்' (தொல்.செய். 391)***

***'ஏது நுதலிய முதுமொழி என்ப'*** (தொல். செய். 165)

தொல்காப்பியர் - பழமொழிக்கு விளக்கம் தருகிறார்.

***'நுண்மையும் சுருக்கமும் ஒளியும் உடைமையும்***
***மென்மை என்றிவை விளங்கத் தோன்றி***
***குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்***
***ஏது நுதலிய முதுமொழி'***

கருதிய பொருளை விளக்கும் வகையில் நுண்மை, சுருக்கம், தெளிவு, மென்மை ஆகிய இயல்புகளுடன் பழமொழி விளங்கும். தொல்காப்பியர் நுட்பம், சுருக்கம், விளக்கம், எளிமை ஆகிய இயல்புகளுடன் குறிப்பிட்ட பொருளைக் காரணத்துடன் உணர்த்த வல்லது பழமொழி என பழமொழிக்கு வரையறை செய்கிறார். ஒரு கருத்தை உணர்த்துவதும் அக்கருத்து காரணத்துடன் அறிவுக்கு ஏற்றதாகவும் நுட்பம், சுருக்கம், விளக்கம், எளிமை உடையதாகவும் இருக்க வேண்டும். 'கூரியதாய்ச் சுருக்கி விழுமியதாய் எளிதாகி இயற்றப்பட்டுக் குறித்த பொருளை முடித்தற்குக் காரணமாகிய பொருளினைக் கருதுவது முதுமொழி என்ப' எனப் பேராசிரியர் விளக்கம் தருகிறார்.

தொல்காப்பியர் பழமொழியை 'முதுமொழி', 'முதுசொல்' என்ற பெயரால் அழைக்கிறார். இளங்கோவடிகள் 'நெடுமொழி' என்று அழைக்கிறார். திருவெம்பாவை 'பழஞ்சொல்' என்றும் குமரேச சதகம் 'உலகமொழி' என்றும் கொன்றை வேந்தேன் 'மூத்தோர் சொல்' என்றும் அழைக்கின்றன. கம்பரும் பழமொழியை 'மூதுரை' என்ற சொல்லால் குறிப்பிடுகிறார். கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நச்சினார்க்கினியர் பழமொழியைப் 'பழம் வார்த்தை' என்ற சொல்லால் குறிப்பிடுகிறார். கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த படிக்காசுப் புலவர் 'பழமொழி' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். அதே நூற்றாண்டில் வாழ்ந்த முத்தப்ப செட்டியார் பழமொழியைப் 'பழமைச்சொல்' என்று

குறிப்பிட்டுள்ளார். பார் புகழும் பாரதி பழமொழியைத் தனது பாடல்களில் புகுத்திப் பாடியுள்ளார். பழமொழியைச் சுருக்கியும் கருத்தை விரிவாக விளக்கியும் பயன்படுத்தியுள்ளார்.

## விடுகதைகள்

விடுகதை என்பது விடுவிக்கப்பட வேண்டியது. முறை பொருளினின்றும் விடுவிக்கப்பட வேண்டிய கதையே விடுகதையாகும். விடுகதையின் அடிப்படைப் பண்பு உருவகமாகும். விடுகதைகளுக்கும் உருவகங்களுக்குமுள்ள தொடர்பினை முதன் முதலில் உலகுக்கு உணர்த்தியவர் கிரேக்கப் பேரறிஞர் அரிஸ்டாட்டில் ஆவார்.

விடுகதையால் கூறுபவனின் உளப்பான்மை வளர்கிறது. ஆர்வத்தினின்றும் விடுதலை கிடைக்கிறது. சிறியோர்க்கும் பெரியோர்க்கும் தொடர்பை ஏற்படுத்துகிறது' என ஜேம்ஸ் என்ற அறிஞர் கூறுகிறார். 'கனவு மனிதனது அடிமன உணர்வுகளுக்கு வெளியீடு தருவது போல விடுகதைகளும் வெளியீட்டிற்கு உதவி வருகின்றன' என கார்லோசு கூறுகிறார். 'சில விடுகதைகள் கதையைப் போலவே விரிவாக இருக்கும். சின்னச்சின்ன விடுகதைகட்குப் புதிர் என்ற பெயரே மிகவும் பொருந்தும். கதை போல் வருவனவற்றை விடுகதை என்று குறிப்பதுதான் பொருத்தமாக இருக்கும்' என நாட்டுப்புறவியல் அறிஞர் க.வா. ஜெகந்நாதன் கூறுகிறார்.

விடுகதையின் வரலாறு தொல்காப்பியத்தில் தொடங்கி இன்று வரை தொடாகிறது. இனிமேலும் தொடரும். ஊரையாசிரியர்கள் விளக்கம் தந்தனர். இடைக்காலப் புலவர்கள் விடுகதைகளைச் செய்யுள் வடிவில் பாடினர். இருபதாம் நூற்றாண்டில் விடுகதைகளைத் தொகுக்க ஆரம்பிதனர். தற்போது விடுகதைகளைப் பற்றி ஆய்வே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

தொல்காப்பியர் யாப்பு முறையைக் குறிப்பிடும்போது விடுகதை பற்றியும் குறிப்பிடுகிறார்.

*‘பாட்டு, உரை, நூலே, வாய்மொழி, பிசியே,*

*அங்கதம், முதுசொல்லோடு அவ்வேழ் நிலத்தும்*

*வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்*

*யாப்பின் வழியது எம்மனார் புலவர்’* (செய்யுளியல் - 79)

அடிவரையில்லாத ஆறுவகை யாப்பினையும் தொல்காப்பியர் உரைக்கிறார்.

*‘நூலி னான உரையி னான*

*நொடியோடு புணர்ந்த பிசியி னான*

*ஏது நுதலிய முதுமொழி யான*

*முறைமொழி கிளந்த மந்திரத் தான*

*கூற்றிடை வைத்த குறிப்பி னான்’* (செய்யுளியல் - 100)

இவற்றில் ‘பிசி’ என்பது விடுகதையாகும்.

*‘ஒப்பொடு புணர்ந்த உவமத் தானும்*

*தோன்றுவது கிளர்ந்த துணிவி னானும்*

*என்றிரு வகைத்தே பிசிவகை நிலையே’*

என்று பிசிக்கு விளக்கம் தருகிறார். உவமையாக அமைவதும் தெளிவுபட வருவதும் என விடுகதை இருவகையில் அமையும் என்கிறார் தொல்காப்பியர். விடுகதையை விளக்கியவர் தொல்காப்பியரே ஆவார்.

தொல்காப்பிய உரையாசிரியரான இளம்பூரணர் உவமை விடுகதைக்குக் கீழ்க்கண்ட சான்றைத் தருகிறார்.

*‘அச்சுப்போல பூப்பூக்கும்*

*அமலேயென்னக் காய்காய்க்கும்’*

பேராசிரியர் மூன்று விடுகதைகளும் தந்து அவற்றிற்கு விடையும் தருகிறார். விடுகதைகளைத் தொகுத்தவர்களில் பேராசிரியரே முதலாவார்.

*‘பிறை கவ்வி மலை நடக்கும்’* – யானை

*‘முத்துப்போல் பூத்து*

*முதிரில் களாவண்ண*

*நெய்த்தோர் குருதி*
*நிறங்கொண்டு வித்துதிர்த்து'* - கழுகு
*'நீராடான் பார்ப்பான்*
*நிறஞ்செய்யான் நீராடின்*
*நிறஞ்செய்யான் நீராடின்*
*ஊராடு நீரிற் காக்கை'* - நெருப்பு

தமிழில் பிசி, நொடி, புதிர், விடுகதை என்றும் வழங்கப்படுகின்றன. விடுகதை என்ற சொல்லாட்சி பண்டைத் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் காணப்படவில்லை. இச்சொல்லாட்சி எக்காலத்துப் புகுந்தது என்பதற்குச் சான்றில்லை. 'பிசி' என்ற சொல்லே பின்னாளில் 'பிதிர்' என்றாகிப் பின் 'புதிர்' என்றாகியிருக்க வேண்டும். கிராம மக்களின் அன்றாடப் பேச்சில் என்ன புதிர் போடுகிறாய் எனக் கூறுவதைக் கேட்கிறோம். மிகக் குறுகிய காலத்தில் கூறத்தக்கவாறு சுருங்கிய அமைப்புடையது என்ற கருத்தில் 'நொடி' என்ற சொல் கையாளப்பட்டிருக்க வேண்டும். திருச்சி, தென்னார்க்காடு, வடஆற்காடு, சேலம், தர்மபுரி மாவட்டங்களில் 'வெடி' என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். திருநெல்வேலி மாவட்டத்தில் விடுகதையை அழிப்பாங்கதை என்கிறார்கள். ஒருவர் விடுகதை போட, மற்றவர் அதனை விடுவித்து விட்டால் அவர் அதனை அழித்துவிட்டார் என்று பொருளாகும். எனவே 'அழிப்பாங்கதை' என்கிறார்கள். கதையில் ஏற்படும் சிக்கலை, புதிரை அவிழ்த்தல் என்ற பொருளில் அவிழ்ப்பாங்கதை என மாறிற்று எனக் கூறுவாறுமுளர். பேச்சு வழக்கில் விடுகதை என்றும் இலக்கிய வழக்கில் 'புதிர்' என்றும் கொள்ளலாம்.

உலகில் பல்வேறு மொழிகளில் வழங்கும் சொல்லாட்சி பற்றி இங்குக் காண்போம். அவ்வம் மொழிகளில் வழங்கும் சொல்லாட்சி அதன் தன்மையை விளக்குவது போல் காணப்படுகின்றது.

**தமிழ்**

பிசி

நொடி

புதிர்

விடுகதை

வெடிபோடுதல்

அழிப்பாங் கதை

**தெலுங்கு**

விடிகதா

பொபுக்கலு

**கன்னடம்**

ஒடகதா

விடிகதா

**மலையாளம்**

விடிகதா

கடன்கதா

**வடமொழி**

பிரம்மோத்யம்

பிரஸ்னம்

கூதம்

பிரவக்லிகா

விவாத

சமஸ்யா

குடா

**மராத்தி**

உகானா

**வங்கமொழி**

பிராஹெல்இகதந்தா

**குஜராத்தி**

வரத்

**இராஜஸ்தானி**

பஹேலி

**அஸ்ஸாமி**

**சதுர்**

| | | |
|---|---|---|
| English | : | Riddle |
| German | : | Ratsel |
| Greek | : | Enigma |
| African | : | Alo |
| Western Countries | : | Quiz, puzzle |

நாட்டுப்புற இயலை நாட்டுப்புற இலக்கியம் என்றும் நாட்டுப்புறக்கலை, நம்பிக்கை என்றும் இரண்டு பிரிவாகப் பிரிப்பர். விடுகதை நாட்டுப்புற இலக்கியத்தின் பாற்படும். அந்த நாட்டுப்புற இலக்கியத்தையும் இரண்டு வகையாகப் பிரிப்பர். மாறும் அமைப்புடையவை (Free Phrase genre) என்றும் மாற அமைப்புடையவை (Fixed Phrase genre) என்றும் பிரிப்பர். விடுகதையை மாறா அமைப்புடையவையின் கீழ் வகைப்படுத்துவர். நாட்டுப்புற இலக்கியத்திற்குரிய அனைத்துப் பண்புகளும் விடுகதைக்கும் பொருந்தும். விடுகதைகள் அறிவுக்கு உரை கல்லாகவும் சிந்தனைக்குத் தூண்டுகோலாகவும் கதைக்கு ஆதாரமாகவும் உள்ளவை. கதைகளிலும் விடுகதையின் பண்பைக் காணலாம். விடுகதைகள் பழமொழிகளைக் காட்டிலும் பழமைப் பண்பு வாய்ந்தவை. பழமொழிகள் ஒரு உண்மை அல்லது கருத்து உருவகப்படுத்தப்பட்டு வருகின்றன. விடுகதை பொருளையோ அல்லது கருத்தையோ மறைத்துக் கூறுகின்றது. விடுகதையில் ஒப்புவமைப் பண்பும் உருவக அமைப்பும் இன்றியமையாதவையாகும். உவமையும் உருவகமும் இல்லையெனின்

விடுகதையே இல்லை எனலாம். பெரும்பாலான விடுகதைகளில் உவமை, உருவகப் பண்பு அடிப்படையாக அமைந்துள்ளன.

## விடுகதைகளின் வகைகள்

விடுகதைகளை ரோஜர் டி. ஆப்ரஹாம் அவர்களும் ஆலன் டாண்டிஸ் அவர்களும் ஒன்பது வகையாகப் பிரிக்கின்றனர்.

1. விளக்க விடுகதைகள்
2. எதிர்மறை விடுகதைகள்
3. தலைதப்பும் விடுகதைகள்
4. கதையமைப்பு விடுகதைகள்
5. உரையாடல் வகை
6. சொல் விளையாட்டு
7. நகை வினாக்கள்
8. அறிவு வினாக்கள்
9. புதிர்கள்

மரியா லீச் (Maria Leach) அவர்கள் இரண்டு வகையாகப் பகுக்கின்றனர்.

1. உண்மை விடுகதைகள்
2. வினா விடுகதைகள்

பிரிட்டானியா கலைக்களஞ்சியம் இரண்டு வகையாகப் பகுக்கின்றன.

1. விளக்க விடுகதைகள் (Descripitive riddles)
2. நகை வினாக்கள் (witty questions)

டாக்டர் ச.வே. சுப்பிமணியம் அவர்கள் பண்பு கருதி விடுகதைகளை இரண்டாகப் பகுக்கின்றனர்.

1. நாட்டுப்புற விடுகதைகள் (Folk Riddles)
2. இலக்கிய விடுகதைகள் (Literary Riddles)

அவரே பயன் அடிப்படையில் நான்கு வகையாகப் பகுக்கின்றனர்.

1. விளக்க விடுகதைகள் (Descriptive Riddles)
2. நகைப்பு விடுகதைகள் (Witty Question Riddles)
3. கொண்டாட்ட விடுகதைகள் (Ritualistic Riddles)
4. பொழுதுபோக்கு விடுகதைகள் (Recreative Riddles)

ஆறு. இராமநாதன் அவர்கள் விடுபுதிர், விடுகணக்கு முதலியவற்றை நாட்டுப்புற விடுகதைகளும் இருசொல் அலங்காரம், முச்சொல் அலங்காரம் முதலியவற்றை இலக்கிய விடுகதையிலும் அடக்குவர். விடுகதையைப் பாட்டு விடுகதை என்றும் உரைநடை விடுகதை என்றும் பிரிக்கிறார். விடுபுதிரை வினாவிடு புதிரின் கீழ் மெய்யறிவு வினாவையும் நகைப்பு வினாவையும் உண்மை விடு புதிரை எதிர்மறை, எதிர்மறை அல்லாதது என இரண்டாகப் பகுக்கின்றனர்.

**விடுகதைச் சூழல்**

புதிரையும் நொடிவினாவையும் உலகிற்கு வழங்கிய பெருமை இலத்தீன் மொழிக்கு உண்டு. ஜெர்மனியில் ஒரு காலத்தில் மணப்பெண்ணை விடுகதை மூலம் தேர்ந்தெடுத்ததாக அறிகிறோம். தொடக்க காலத்தில் விநோதப் பண்புகளை அடிப்படையாகக் கொண்ட விடுகதைகள் காலப்போக்கில் சமயஞ்சார்ந்த விடுகதைகளாக மாறின. பைபிளிலும் குர்ரானிலும் விடுகதைகள் காணப்படுகின்றன. திருமணச்சடங்கு, இறப்பு, பலி, விழாக் காலங்களில் விடுகதைகள் போடப்பட்டன. ஆப்ரிக்க விடுகதைகள்தான் உலகில் சிறந்தவை எனக் கூறுகின்றனர். விடுகதை இரவிலே தான் போடப்படுகின்றது. இதற்குரிய காரணம் புரியவில்லை. தமிழ் நாட்டில் சிறுவர்கள் ஒன்று சேர்ந்து விட்டால், விடுகதைபோடும் வழக்கத்தைச் சில கிராமங்களில் இன்றும் காணலாம். இவ்வழக்கும் இன்று அருகி வருவது நாட்டுப்புறச் சிறுவர்களிடையேதான் இவ்வழக்கம் ஓரளவு உள்ளது. விடுகதைகளுக்கு உரிய செய்தியைப் பெரும்பாலும் சிறுவர்களிடமிருந்துதான் சேகரித்தேன். கடினமான விடுகதை

பழமொழிகளை அன்றாட வாழ்வில் பயன்படுத்துவது போன்று விடுகதைகள் பயன்படுத்தப்படவில்லை. ஒரு குறிப்பிட்ட சொற்போராகவும் விளையாட்டாகவும் பொழுதுபோக்காகவும் பழமொழி இருக்கும். பழமொழி உள்ள சமுதாயத்தில் நிச்சயம் பழமொழி இருக்கும். எனவே ஏறத்தாழ எல்லாச் சமுதாயத்திலும் பழங்குடி சமுதாயம் உட்பட பழமொழிகளையும் விடுகதைகளையும் காணலாம்.

## விடுகதையின் கருப்பொருட்கள்

மக்கள் வாழ்க்கையின் பல்வேறு பகுதிகளையும் பிரதிபலிப்பனவான விடுகதைகள் வாழ்க்கையின் பயன்படுபொருள்களான கருப்பொருள் யாவற்றையும் விளக்கும் வகையினாக அமைகின்றன.

1. இயற்கைப் பொருட்கள்
2. விலங்குகள் மற்றும் பறவைகள்
3. தாவரங்கள் (மரம், செடி, கொடிகள்)
4. உடல் உறுப்புகள் (ர்ரஅயெ டீழனல ீயசவள)
5. உணவுப் பொருட்கள்
6. பண்ட பாத்திரங்கள்
7. அணிகலன்கள்
8. வாகனங்கள்
9. தத்துவம்
10. அறிவியல்
11. புராணம் இதிகாசம்
12. பல்பொருள் (ஆளைஉநடடயநெழரள)

## இயற்கைப் பொருட்கள்

1. அப்பா பணத்தை எண்ண முடியாது
   அம்மா புடவையை மடிக்க முடியாது - விண்மீன், வானம்
2. அலை அலையாய் ஆடிவரும் கடலும் அல்ல
   நிலையாக இருக்காது நிலவும் அல்ல – அது என்ன? - மேகம்

3. அள்ளலாம், கிள்ள முடியாது - தண்ணீர்
4. அறிவின் மறுபெயர்
   இரவில் வருவது – அது என்ன? - மதி
5. ஆனை ஏறாத மலையிலே
   ஆடு ஏறாத மலையிலே
   ஆயிரம் பூ பூத்திருக்கும் - அது என்ன? - விண்மீன்
6. உலகுக்கெல்லாம் ஒரே துப்பட்டி - வானம்
7. உருவம் இல்லாத மனிதன்
   உலகம் எல்லாம் சுற்றுகிறான் - காற்று
8. பொழுதுபோனால் பூந்தோட்டம்
   விடிந்து பார்த்தால் வெறுந்தோட்டம் - வானம்
9. ஊருக்கெல்லாம் ஒரே கூரை - வானம்
10. ஆதவன் உதித்தால் மறைந்திடுவான்
    ஆயிரம் விளக்கை அணைத்திடுவான் - இருள்
11. மோதிய பின் மின்னும்
    மின்னிய பின் வெடிக்கும் - மின்னல், இடி
12. கோடி கோடி வெள்ளிப்பணம்
    ஓடி விடுது சாலைப்பணம் - நட்சத்திரம்
13. ஏழை படுக்கும் பஞ்சணையை
    எடுத்துச் சுருட்ட ஆளில்லை - பூமி
14. ஒரு குளத்தில் ஒரு தட்டு
    நனையாமல் கிடக்கிறது - நிலா
15. இரவில் தோன்றும்
    இருளை வெட்டும் - மின்னல்
16. இரவெல்லாம் பூக்காடு
    பகலெல்லாம் வெறுங்காடு - வானம்
17. எட்டாத ராணி
    இரவில் வருவாள்

பகலில் மறைவாள் - நிலா

18. கண் சிமிட்டி மணி அடித்து
கண்ணீர் வடிப்பார்கள் -மின்னல், இடி, மழை

19. அந்திக் கிழக்கே அதிகாலை மேற்கே -
வானவில்

20. ஓடோடும் சங்கிலி உருண்டோடும் சங்கிலி
பள்ளத்தைக் கண்டால் பாய்ந்தோடும் சங்கிலி – தண்ணீர்

21. எஸ்.எஸ். கன்றுக்குட்டி
இங்கிலீஸ் கன்றுக்குட்டி
தண்ணீர் பட்டால் செத்துப்போகும் - நெருப்பு

22. திரி இல்லாத விளக்கு - சூரியன்

**விலங்குகள்**

1. உண்டதை நினைப்பான்
உதையை மறப்பான்
உயிரையும் கொடுப்பான் - நாய்

2. ஒற்றைக் கால் நாராயணன்
ஓடையிலே மீன் பிடிக்கிறான் - கொக்கு

3. கால் இல்லாத கள்வன்
கால் உள்ளவனைப் பிடித்தான்
தலையில்லாதவன் அதைப்பார்த்து
கலகலவென்று சிரித்தான் -பாம்பு,தவளை, நண்டு

4. செடியை உலுக்குது ஒரு குருவி
செடியோரம் போகுது ஒரு குருவி
குட்டையைக் குழப்புது ஒரு குருவி
குட்டையோரம் போகுது ஒரு குருவி
- வெள்ளாடு, செம்மறியாடு, எருமை, பசு

5. தண்ணீர் இல்லாத தடாகத்தில்
தாவிப்பாயுது ஒரு கப்பல் - ஒட்டகம்

6. இருட்டிலே எழுவார் எங்கள் தாத்தா
உருட்டிடுவார் பானையை எங்கள் தாத்தா - பூனை
7. இருட்டு வீட்டிலே எங்கள் தாத்தா
குருட்டெருமை மேயுது - பெருச்சாளி
8. உச்சாணி மரத்திலே உயர்ந்த கிளையிலே
பட்டாண இருந்து பாக்கு வெட்டுது - அணில்
9. பாரினில் பறவாத கொக்கு
பாயாத வேங்கை - குதிரை
10. நோய் நொடியில்லாமல்
முக்கி முனங்கித் திரிகிறான் ஒருவன் - பன்றி
11. பந்தக்கால் நாலு
பவளப்பல் பத்து
வெள்ளத்தடி இரண்டு
வெள்ளத்தடி இரண்டு
வெஞ்சாமரம் ஒன்று - பசு
12. ஆடாத அழகிக்கு
ஆடு என்று பெயர் வந்தது - ஆடு
13. கணுக்கால் தண்ணீரில்
கரடி நீச்சல் போடுது - தவளை

**பறவைகள்**

1. அத்திக் கட்டை முள் எடுத்து
அடைப்பாரும் இல்லை
அழகான பூ எடுத்து
முடிப்பாரும் இல்லை - சேவல்
2. அது ஓர் அழகு தேவதை
ஆடும் தேவதை – அது என்ன? - மயில்
3. அவனொரு தாசி அதிகப் பிள்ளைக்காரி
பால் இல்லாமல் பிள்ளை வளர்ப்பதில்

பலே கெட்டிக்காரி - கோழி

4. அவள் ஒரு பாடகி
   ஆனால் பெண் அல்ல – அது யார்? - குயில்
5. அம்பலத்தில் ஆடும் அழகுக் கண்ணன் - மயில்
6. தங்க உடற்காரி தரமான ஆட்டக்காரி
   மேகம் இரண்டு வந்தால் மோகம் கொண்டு ஆடுவாள் - மயில்
   அங்கம் முழுவதும் தங்க நிறம்
7. பகலில் துயிலுவான்
   இரவில் அலறுவான் - ஆந்தை
8. கறுப்புச் சட்டை அணிந்தவன்
   கபடம் அதிகம் உள்ளவன்
   கூவி அழைத்தால் வந்திடுவான்
   தன் கூட்டம் அனைத்தும் சேர்ந்திடுவான் - காகம்
9. பட்ட மரத்தில் பச்சை
   அதிலும் சிவப்பு - கிளி
10. மாட மாளிகையில் வசிப்பான் மன்னன் அல்ல
    கூட மாளிகையில் இருப்பான் கடவுள் அல்ல - மாடப்புறா
11. குட்டியம் போடும் குவலயத்திலும் பறக்கும - வௌவால்

**தாவரங்கள்**

1. பரந்த காட்டேறிக்குப்
   பக்கமெல்லாம் சடை - ஆலமரம்
2. அடி பெருத்தேன் குந்தாணியானேன்
   தலை விரித்தேன் சடைச்சியானேன் - தென்னை
3. ஓகோ ராசா உயர்ந்த ராசா
   தோள்மேல் என்ன தொண்ணூறு முடிச்சு - தென்னை
4. ஆழக்குழி வெட்டி
   அதிலே ஒரு முட்டையிட்டு

அண்ணாந்து பார்த்தால்
தொண்ணூறு முட்டை - பனை

5. அம்மிக் குழவிபோல் பூ இருக்கும்
அரிவாள் பிடிபோல் காய் காய்க்கும் - வாழை
6. மரமுண்டு அடுப்பெரிக்க விறகுமாகாது
சீப்புண்டு தலைகோதி வார முடியாது
பூவுண்டு கொண்டையிலே முடிக்க முடியாது - வாழை
7. கத்திபோல் இலை இருக்கும்
கவரிமான் பூ பூக்கும்
தின்னப் பழம் பழுக்கும்
தின்னாத காய் காய்க்கும் - வேப்பமரம்
8. ராசா மகள் பூ இல்லாமல்
சடை போட மாட்டாள் - முருங்கை
9. அவரோ பெரியவர் அவர் இலையோ சிறியது
அவர் பெற்றதெல்லாம் கோணல் - புளியமரம்
10. அவிழ்த்த தலைமுடியாத சிறுக்கி
அவள் பெற்ற பிள்ளைகளுக்கு
வகைவகையாய் பெயராம் - பனை
11. அடி மலர்ந்து நுனி மலராத பூப்பூக்கும் - வாழை

## செடிகள்

1. மரத்திலே மரம் முளைத்து
மக்க சக்கரப் பழம் பழுத்து
எடுப்பார் உண்டு தின்பார் இல்லை - காப்பி
2. மாடிமேல் மாடிகட்டி
குடியிருக்கும் மனிதனை
தொட்டால் குத்திடுவான்
பட்டால் கீறிடுவான் - சப்பாத்திக்கள்ளி

3. பல்லில்லாத வெள்ளையன்
   காட்டிலேயும் மேட்டிலேயும்
   வாய்விட்டுச் சிரிக்கிறான் - பருத்தி
4. மண்ணுக்குள்ளே பொன்னம்மாள் - மஞ்சள்
5. சுற்றுவேன் அந்தச் செடியை
   சூடேன் அந்தப்பூவை
   நத்துவேன் அந்தக் காயை
   நாடேன் அந்தப் பழத்தை - சுண்டைக்காய்

**காய்**

1. முட்டைக்கு மூன்று கண்
   அட்டைக்கு ஆயிரம் கண் - தேங்காய்,
   சல்லடை
2. அடித்தால் அழுவான்
   பிட்டால் சிரிப்பான் - தேங்காய்
3. கடைக்குப் போனேன், ஒருவனைக் கண்டேன்
   கண்டவுடன் கொண்டேன் கொண்டவுடன் அடித்தேன்
   அடித்தவுடன் அழுதான் அழுதவுடன் சிரித்தான்
   சிரித்தவுடன் கடித்தேன் - தேங்காய்
4. பெரிய கடராங்காய் போலக் காய் காய்க்கும்- பூசணிக்காய்
5. பச்சைக்கிளி பறக்கமுடியாத கிளி
   கொம்பிலே இருக்கும் குள்ளக்கிளி - மாங்காய்
6. செடியைச் சுற்றிச் செந்துருக்கம் - மிளகாய்
7. ஒற்றைக்கால் கோழிக்கு
   வயிறு நிறைய முட்டை - கத்திரிக்காய்

**பழம்**

1. எங்கள் வீட்டுத் தோட்டத்திலே
   மஞ்சள் குருவி ஊஞ்சலாடுகிறது - எலுமிச்சம்பழம்

2. அடிஅடி என்று அடித்து
   உரிஉரி என்று உரித்து
   உள்ளிருப்பதை எடுத்துக்கொண்டு
   மேலே இருப்பதை எறிந்துவிட்டேன் - புளியம்பழம்
3. அட்டைக்கரிப் பெண்ணுக்கு
   உச்சந்தலை மஞ்சள்
4. அட்டைக்கரிப் பெண்ணுக்கு
   ஆத்தாள் சடைச்சி
   குழந்தைகள் சக்கரைக்கட்டி - பலாப்பழம்
5. தோல் இருக்கச் சுளை விழுங்க - வாழைப்பழம்
6. பூத்தபோது மஞ்சள்
   பூத்ததும் சிவப்பு
   காய்த்தபோது சிவப்பு
   காய்த்ததும் கரும்பு - ஈச்சம்பழம்
7. செம்பு நிறைய கெம்பு - மாதுளம்பழம்
8. செம்பு நிறைய சிவப்புமுத்து - மாதுளம்பழம்
9. குடுக்கை நிறைய வயிரமணி - மாதுளம்பழம்

**தானியம்**

1. அடி காட்டில் நடு மாட்டில்
   நுனி வீட்டில் - நெல்
2. நடுகாட்டில் ஈட்டி - கம்பு
3. ஒற்றைக்கால் குருவி
   உழக்கு முட்டையிடும் - சோளம்
4. இவ்வளவுண்டு ராமனுக்கு
   அவ்வளவுண்டு நாமம் - உளுந்து

**உடல் உறுப்புகள் (Human Body Parts)**

1. கட்டி மாம்பழம் தொப்புன்னு விழுந்தது
   பார்த்தது இரண்டு பேர்

எடுத்தது ஐந்து பேர்
தின்றது முப்பத்திரண்டு பேர்
ருசி கண்டது ஒருவர்
இவர்கள் யார்? - கண்கள், விரல்கள், பற்கள், நாக்கு

2. அக்காள் தங்கை உறவுண்டு
அண்டை அண்டை வீடுண்டு
கிட்டக்கிட்ட வந்தாலும்
தொட்டுக்கொள்ள முடியாது - கண்கள்
3. ஒரு சாண் குட்டையில் ஒரு முழங்வால் - நாக்கு
4. ஒரு கட்டுத்துறையில் முப்பத்திரண்டு வெள்ளைப் பசுக்கள் - பற்கள்
5. அண்ணனுக்கு எட்டாதது தம்பிக்கு எட்டும் - உதடு
6. இரண்டு கிணற்றுக்கு ஒரு பாலம் - மூக்கு
7. ஆற்றிலே பத்துமரம்
அசையுது பிடுங்க முடியவில்லை - கைவிரல்கள்
8. எந்நேரமும் கொட்டும் சத்தங் கேட்காது - கண்ணிமை
9. அங்கு மிங்கும் அலைவது இரண்டு
பக்கம் பக்கமாய் பார்ப்பது இரண்டு
கண்ணொலி தன்னைக் கேட்பது இரண்டு
எட்டி எடுத்துக் கொள்வது இரண்டு -கால், கண், காது, கை
10. சொன்னதைக் கேட்பான்
சொல்லச் சொல்லச் கேட்பான்
திருப்பச் சொல்ல மாட்டான்
திருடன் மாதிரி இருப்பான் - காது
11. மூன்று கோடி முச்சத்தில் கூடி
கொள்ள வாளம்பட்டு கொடிகட்டு ஆடுவோம் - சடை
12. பாறைக்குள்ளே கோரை
கோரைக்குள்ளே குறவன் - தலை

13. மஞ்சள் பெட்டி மரக்கால் பெட்டி
ஒருக்காலும் திறக்காப்பெட்டி - வயிறு
14. இரணியனைப் பிளந்தவனை
அறுத்தெடுத்து வருவாயயேல்
மனமகிழ இருக்கைக்கும்
வெகுமானம் தருவேன் - நகம்
15. கிணற்றைச் சுற்றி அகத்திமரம் - புருவம்

**உணவுப்பொருட்கள்**

1. ஒரு மரத்திலே ஐந்து பூக்கள் - பால், தயிர், மோர், வெண்ணெய், நெய்
2. தாய் இனிப்பாள்
மகள் புளிப்பாள்
பேத்தி மணப்பாள் - பால், தயிர், வெண்ணெய்
3. ஏரித்தண்ணீர் வற்ற வற்ற
எருமைக்கடா உப்ப - பணியாரம்
4. ஒண்ணும் இரண்டும் கலப்பு
உள்ளங்கையில் அடைப்பு
ஆவியிலே நடிப்பு
ஆண்டவனுக்கு படைப்பு - கொழுக்கட்டை
5. அரிசி பணத்துக்கு ஒருபடி
ஆக்கித் தின்ன ஆள் இல்லை - உப்பு
6. ஊருக்கெல்லாம் ஒரே கல் - உப்பு
7. கல்லும் கரடும் முள்ளும் முரடும் வேரும் விறகும் -கற்கண்டு
8. ஆற்று மணலை அள்ளி அள்ளித் திண்போம்
பாராங்கல்லைக் கடித்து கடித்துத் தின்போம் -சர்க்கரை, கற்கண்டு
9. வெள்ளைக்காரன் பூக்க
வெகுபேர் காத்திருக்கிறார் - சோறு
10. கறுத்த கட்டிலின் மீதே காரிகையாம்

விரிக்கும் விரிப்பாம் எடுக்கும் விரிப்பாம் - தோசை

11. கோழி மேயுது குடல் வேகுது - முட்டை

12. அப்பனே பறங்கிக்காயே
அடுப்பிலே ஏறினாயே
ஏறி இறங்கினாலும்
என்னை நீ மறந்திடாதே - வெல்லம்

**பண்ட பாத்திரங்கள்**

1. மூடாத வாய்க்கு முழம் வால் - அகப்பை
2. ஒரு பெண்ணுக்கு மூன்று கொண்டை - அடுப்பு
3. கடகடா குடுகுடு நடுவிலே பள்ளம் - ஆட்டுக்கல்
4. பொழுது விடிந்தல் நல்லது என்றது ஒன்று
பொழுது விடியவேண்டாம் என்றது ஒன்று
விடிந்தால் என்ன, விடியாவிட்டால் என்ன என்றது இன்னொன்று
-கட்டில், அடுப்பு, உறி
5. அட்டைக்கு ஆயிரம் கண் - சல்லடை
6. ஆள் இறங்காத கிணற்றுக்குள்
மரம் இறங்கிக் கூத்தடிக்கிறது - மத்து
7. கையிலே கணக்குப் போடும் கணக்கப்பிள்ளை - படி
8. அனல் மேல் கறுப்புக்குதிரை
அதன் மேல் வெள்ளையன்
ஏறி ஏறிக் குதிக்கிறான் - தோசைக்கல்
9. அக்காள் சப்பாணி தங்கை நர்த்தனப்பெண்
இந்த இருவரும் இல்லாவிட்டால்
குடித்தனப்பெண் சிணுங்குவாள் - உரல், உலக்கை
10. அக்காள் வீட்டுக்குத் தங்கை போகலாம்
தங்கை வீட்டுக்கு அக்காள் போகமுடியாது -படியும், உழக்கும்
11. அங்கே சிலுக்குவாள் இங்கே பிலுக்குவாள்
கதவு மூலையில் ஒண்டிக் கொள்வாள் - விளக்குமாறு

12. இத்தனையுண்டு பூனைக்குட்டி
வைத்ததெல்லாம் சுமக்குது - அடுப்பு
13. ஒத்தைக்கால் குள்ளனுக்கு எட்டுக்கை - குடை
14. கடக்கா முடக்கான் சந்தைக்குப் போறான் - வண்டி
15. நட்டமாய் நிற்கிறவனுக்கு
நறுக்கு நறுக்கு ஒன்று கடிக்கும் வேலை - அரிவாள்மனை

**அணிகலன்கள்**

1. நாடி நாடி நீட்டும் கை
தேடித் தேடி அலையும் கை
கோதிக் கோதி முடிக்கும் கை
ஊதி ஊதி ஒட்டும் கை - நகை
2. கங்கையிலே பிறந்து வளர்ந்து
கடைகளிலே வந்து போயி
மங்கையின் உடலிலே மருவி
மங்காமல் ஜொலிப்பாள் ராணி - முத்து
3. வீட்டைச் சுற்றிப் புளியமரம்
உலுக்கினால் கலகல என்னும் - வளையல்
4. ஒட்டுத் திண்ணையிலே பட்டுக் காயுது - மூக்குத்தி
5. தரையில் முட்டிடும் விரலில் ஒட்டிடும் - கால்மெட்டி
6. தலையை முறித்துக் கம்புக் காட்டுக்குள் வைத்தான் - தலைப்பாகை
7. கழுத்து உண்டு தலையில்லை
உடல் உண்டு உயிர் இல்லை
கையுண்டு விரலில்லை - சட்டை

**வாகனங்கள்**

1. ஆனை சேனை அறுபதுபோர் கூடி
வாளறுத்துக் கூறுபோட்டு வன்னிமரம் பிளந்து

நாலுகால் சிலம்பு கட்டி
நடுத்தெருவில் போற பெண்ணே - இரதம்

2. மொட்டைத் தட்டிலே
எட்டுப்பேர் பயணம் - படகு

3. உடலுண்டு உயிரில்லை
ஓடி ஓடி போய்ச்சேர்ந்தான் ஊருக்கு - சைக்கிள்

**புராண இதிகாசம்**

1. இராவணன் சிரசற்றதேன்?
இராவெள்ளி மறைவதேன்? -இராமன் தாரத்தால், இராம மந்திரத்தால்

2. தொட்டுக் கெட்டவன் ஒருத்தன்
தொடாது கெட்டவன் ஒருத்தன்
விட்டுக் கெட்டவன் ஒருத்தன்
விடாமல் கெட்டவன் ஒருத்தன் பத்மாசூரன், கீசகன், மகாபலி, இராவணன்

3. இலங்கை அழிந்ததேன்
இரும்பு உருகுவதேன் - நெருப்பால்

**தத்துவம்**

1. போய் வருபவை இரண்டு
போனால் வராதவை இரண்டு
எப்போதும் இருப்பவை இரண்டு - இரவு, பகல் - நாள், இளமை - சூரியன், சந்திரன்

2. காலையில் நான்கு காலோடே
பகலில் இரண்டு காலோடே
மாலையில் மூன்று காலோடே
முடிவில் எட்டுக் காலோடே - உடல்

**அறிவியல்**

1. உயிர் இல்லாமல் ஓடித்திரிவான்
   மூக்கு இல்லாமல் மூச்சு விடுவான்
   வாய் இல்லாமல் தண்ணீர் குடிப்பான்
   வயிறு இல்லாமல் கரியைத் தின்பான்
   காற்றிற்கு அஞ்சான் மழைக்கு அஞ்சான்
   காட்டிலும் மேட்டிலும் போவான் - புகைவண்டி
2. அடங்கிக் கிடப்பான்
   எடுத்துக் காதில் வைத்தால்
   கதை ஆயிரம் அளப்பான் - தொலைப்பேசி
3. ஆடையில்லாத கறுப்பழகி
   ஆடிச் சுழன்று பாடுகிறாள் - இசைத்தட்டு
4. ஆயிரமாய்க் கூடச் செய்யும்
   ஆரவாரம் எழுப்பச் செய்யும்
   ஆடிப்பாடி விளையாடும்
   அடங்கிவிடும் பெட்டிக்குள் - திரைப்படம் (சினிமா)
5. இந்த ஊரிலே அடிபட்டவன்
   அடுத்த ஊரிலே போய்ச் சொல்லுகிறான் - தந்தி
6. இரத்தம் குடிப்பான்
   கண்ணுக்குத் தெரியாதவன் - மின்சாரம்
7. உயரப் பறக்குது ஊர்க்குருவி - வானவூர்தி
8. உள்ளதைச் சொல்லுவான்
   சொன்னதைக் கொள்ளுவான் - டேப்ரிக்கார்டர்
9. ஒரு பக்கம் செய்தி
   ஊர் எங்கும் செய்தி - வானொலி
10. வானத்திலே ரோடுபோட்டு
    எட்டாத தொலைவிலே

இங்கிருந்து பார்த்தால்

இங்கிலீஸ்காரன் பள்ளிக்கூடம் - டெலிவிஷன்

சில விடுகதைகள் ‘அன்று’ வாய்ப்பாட்டுடன் முடிகின்றன. விடுகதைப் பொருளோடு தொடர்புடைய பொருளைக் கூறி, ‘ஆனால் அது அல்ல’ என்று கூறுவதையும் காண்கிறோம். சிந்திப்பதற்காகத்தான் ‘அன்று’ ‘ஆனால் அதுவல்ல’ போன்ற வாய்ப்பாடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

**விடுகதையின் நடை** (Style of Riddle)

1. **மோனை**

கறுப்புச் சட்டைக்காரன்

காவலுக்குக் கெட்டிக்காரன் - பூட்டு

2. **எதுகை**

கடித்தால் கடிபடாது

பிடித்தால் பிடிபடாது - தண்ணீர்

3. **இயைபு**

பச்சை பசேலென்றிருக்கும் பாகற்காயுமல்ல

பக்கமெல்லாம் முள்ளிருக்கும் பலாக்காயுமல்ல

உள்ளே வெளுத்திருக்கும் தேங்காயுமல்ல

உருக்கினால் நெய்வடியும் வெண்ணெயுமல்ல - ஆமணக்கு

4. **அந்தாதி**

ஏணியிலே கேணி

கேணியிலே குண்டு

குண்டுமேலே புல்லு

புல்லுக்குள் பூச்சி

**ஓரடி விடுகதை**

சிவப்புச் சட்டிக்குக் கறுப்பு மூடி - குன்றிமணி

**ஈரடி விடுகதை**

செத்துக் காய்ந்த மாடு

சந்தைக்குப் போகிறது - கருவாடு

**மூவடி விடுகதை**

காயும் காய்க்கும்
பூவும் பூக்கும்
காசுக்கொரு இலையில்லை - நாகதாளி

**நாலடி விடுகதை**

ஏறினால் வழுக்கும்
இலையென்றால் சுருளும்
காய் என்றால் துவர்க்கும்
பழம் என்றால் இனிக்கும் - வாழை

## பழமொழியும் விடுகதையும்

பழமொழியும் விடுகதையும் நிலைத்த அமைப்புடையதெனினும; (Fixed Phrase genre) அவற்றிடையே ஒற்றுமையும் வேற்றுமையும் காணப்படுகின்றன. அவற்றைப் புரிந்து கொள்வது பழமொழி, விடுகதையைப் புரிந்து கொள்வதற்குப் பெருந்துணையாக இருக்கும்.

**ஒற்றுமைகள்**

1) இவ்விரண்டிற்கும் அடிப்படை வாக்கியங்களே, செய்யுளுக்குரிய நடை இவற்றிற்கும் உண்டு.
2) இவ்விரண்டிலும் கூறுகளின் பொருத்தத்தின் மூலம் குறிப்பிட்ட (Referrents) உரை முடிகிறது.
3) உடன்பாட்டு (Non Oppositional) எதிர்மறைப் (Oppositional) பழமொழிகள் இருப்பது போன்று, உடன்பாட்டு, எதிர்மறை விடுகதைகளும் உண்டு.
4) பழமொழி இல்லாமல் விடுகதையோ, விடுகதை இல்லாமல் பழமொழியோ உள்ள சமுதாயத்தைக் காண முடியாது. பழமொழி உள்ள சமுதாயத்தில் விடுகதையும், விடுகதை உள்ள சமுதாயத்தில் பழமொழியும் நிச்சயம் இருக்கும்.

## வேற்றுமைகள்

1) பழமொழிகள் அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்படுகின்றன. விடுகதைகள் விடுகதை அமா்வில் போடப்படுகின்றன.
2) பழமொழியில் எளிமையும், தெளிவும் உள்ளன. வினா எழுப்பி விடை கூற வேண்டிய நிலையில் சிந்தனைத் தடுமாற்றம் விடுகதையில் உண்டு.
3) பழமொழி விடை கூறுகின்றது, விடுகதை வினா எழுப்புகின்றது.
4) இயல்பான நிலையைப் பழமொழியிலும் மீச்செலவு இயல்பை விடுகதையிலும் காணலாம்.
5) பழமொழியில் மறைத்துக் கூறுவதை விடுகதையில் வெளிப்படையாகவும் விடுகதையில் வெளிப்படையாக உள்ளதைப் பழமொழியில் மறைத்தும் கூறுவதைக் காணலாம்.
6) பழமொழிகள் மறைவான கேள்விக்கு வெளிப்படையாகப் பதில் கூறினால், விடுகதைகள் வெளிப்படையான கேள்விக்கு மறைவான பதிலைத் தருகின்றன.
7) அமைப்பியலடிப்படையில் விடுகதைகள் மேல்நிலை சொற்றொடா்களையும் (Suproa Phrasal) பழமொழிகள் சொல் துணுக்குகளையும் (Phrasal CLiches) கொண்டிலங்குகின்றன.

## வினாக்கள்

1. பழமொழியின் தன்மை, அமைப்பு, கருப்பொருள் குறித்து விளக்குக.
2. விடுகதை என்பது யாது? அதன் வகைகளை விளக்குக.
3. பழமொழிக்கும், விடுகதைக்குமான வேறுபாடுகள் யாவை?

# பாடம் - 5

# புராணக் கதைகள்

**புராண கதை**

பல்வேறு காலங்களில் பல்வேறு சூழல்களில் புராணக் கதைகள் எடுத்துரைக்கப்படுகின்றன . புராணங்கள் சமூக முக்கியத்துவம் வாய்ந்தது . அதன் சமூகப் பயன்பாடு எப்பொழுதும் ஒரே மாதிரியானதாக இருக்காது . புராணம் வழக்கில் இருக்கும் பண்பாட்டின் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப அமையும் . புராணங்களைப் பற்றிய பல்வேறு வரையறைகள் இடம்பெறுகின்றன . விளாடிமிர் பிராப் என்பவர் , தெய்வங்களையும் பற்றிய கதைகள் புராணங்கள் ஆகும் அவர்களையும் அவர்களைச் சார்ந்தவர்களையும் மக்கள் உண்மை என்று நம்புகின்றனர் .

புராணங்கள் குறித்து பல்வேறு வரையறைகள் இடம்பெறுகின்றன .விளாடிமிர் பிராப் என்பவர் இ ”தெய்வத் தன்மை வாய்ந்தோரையும் தெய்வங்களையும் பற்றிய கதைகள் புராணங்கள் ஆகும் . அவர்களையும் அவர்களைச் சார்ந்த கதைகளையும் மக்கள் உண்மை என்று நம்புகின்றனர் ” என்று குறிப்பிடுகின்றார் . தியோடர் காஸ்டர் என்பவர் இ”புராணம் ஒரு கதைஒத்துக்கொள்ள படுவதற்கு முன் அது ஒரு சடங்கில் பயன்படுத்தப்பட்டது என்ற நேரடிச் சான்று தேவை படுகின்றது ” என்று சுட்டுவதாக கூறுகின்றார் . புராணம் கடவுளரை பற்றிய ஒரு கதை அடிப்படை சம்பவங்கள் போன்றவை பற்றிய ஒரு சமயவரலாறு .

லாரி ஹங்கோ என்பவர் ," புராணம் கடவுளரை பற்றிய ஒரு கதை உலக தொடக்கம் , படைப்பு , அடிப்படை சம்பவங்கள் போன்றவைபற்றிய ஒரு சமய வரலாறு ; கடவுளரின் முன்மாதிரியான செயல்களின் விளைவாக உலகம், இயற்கை பண்பாடு போன்றவை அவற்றின் பகு திகளுடன் சேர்த்துப்

படைக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டு அவை இன்றும் நிலை பெற்றிருப்பது பற்றிதொரு விளக்கம் . சமூகத்தின் சமய மதிப்புகளையும் , விதிகளையும் புராணம் வெளிப்படுத்துகிறது ; உறுதிசெய்கிறது ; பின்பற்றி நடக்க வேண்டிய நடத்தை ஒழுங்குமுறைகளை நல்குகின்றது . சடங்குகளின் பயன்பாடு நோக்கங்களின் சான்று பகர்கின்றது . புனிதத் தன்மையையும் சூழலிலும் காணவேண்டும்.

வழிபாட்டின் புனிதத் தன்மையையும் நிலைநாட்டுகின்றது . புராணத்தின் உண்மையான சூழலினைச் சடங்குகளிலும் கரணங்களிலும் காணவேண்டும். சடங்கின் போது புராணம் நடித்துக் காட்டப்படுவதன் மூலம் உலகின் ஒழுங்குமுறை பாதுகாக்கப்படுகிறது . புனிதமான முன்மாதிரிச் செயல்களைபின்பற்றி அவற்றை போலசெய்வதன் மூலம் உலகம் குழப்பத்திலிருந்து தடுக்கப்படுகின்றது . ஒரு படைப்பு சம்பவம் மீண்டும் நடித்து காட்டல் (சான்றாக காலத்தின் தொடக்கத்தில் கடவுளொருவர் நோயைக் குணப்படுத்துவது போன்ற செயல்) புராணம் , சடங்கு போன்ற இரண்டின் பொது நோக்கமாகலாம் . இவ்வாறாக முந்தைய சம்பவம் நிகழ்காலத்திற்கு மாற்றப்படுகின்றது .மேலும் அதன் பயன் அதாவது நோய்வாய்ப்பட்ட ஒருவனை குணமாக்கல் ,மீண்டும் இங்கே இப்பொழுது அடையபெறுகின்றது .இவ்வாறாக தொல்லூழிக்காலத்தில் உருவாக்கப்பட்டு புராணங்களில் பிரதிபலிக்கும் உலக ஒழுங்கு தற்கால மக்களுக்கு ஒரு முன் மாதிரியான செயலாகவும் , மாதிரியாகவும் அதன் மதிப்பை காத்து வைத்துள்ளது . ஒரு சமயவாதிக்கு புராணங்களில் மறுபடியும் சுட்டப்படும் சம்பவங்கள் மதிப்புடையவை என்று அவர் கூறுகின்றார் .

புராணக் கதையை ஆங்கிலத்தில் ‘Myth’ என்றும் புராணவியலை ‘Mythology’ என்றும் வழங்குவர். Myth என்பது Mythis என்ற கிரேக்கச் சொல்லினின்றும் உருவானதாகும். Myth என்ற சொல்லுக்கு இணையாகப் புராணம், புராணக்கதை, தொன்மம், புனைகதை, புராண மரபுக்கதை, தொல்கதை எனத் தமிழில் வழங்குகின்றனர். Myth என்ற சொல்லுக்கு இணையாகத் ‘தொன்மம்’ என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. ‘தொன்மைதானே உரையொடு புணர்ந்த யாப்பின் மேற்றே’ என்ற தொல்காப்பியச். சூத்திர அடிப்படையில் தொன்மம் என்ற சொல் உருவாக்கப்பட்டது. தொன்மம் என்பது பழமை என்ற பொருளை உடையதாகும். நாட்டுப்புற வழக்கில் புராணம் என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. மித் (Myth) எனும் சொல் மூன்று வகைப் பொருளைத் தருகிறது. (I) மிகப் பழங்காலத்தில் பாரம்பரியமான கதைத் தொடர்களைக் குறிக்கிறது. (ii) உலகத்திலுள்ள உயிர்களுக்கேற்ப உலகம் ஏன் இவ்வாறு இயங்குகிறது என்ற விளக்கத்தை அளிக்கிறது. (iii) மனித வாழ்வினை அமைப்பதற்குத் தேவையான நியதிகளின் ஆதாரங்கள் ஆகியவற்றின் அடிப்படைக் கோட்பாடுகளை விளக்குகிறது. நம் நாடு தொன்மங்கள் நிறைந்த நாடாக இருப்பினும் தொன்மங்களைப் பற்றி மேலை நாட்டில் நடந்துள்ள ஆய்வுகள் போன்று நம் நாட்டில் ஆய்வுகள் பெருகவில்லை. தமிழ்நாட்டில் தொன்மக் களங்கள் விரிந்து கிடக்கின்றன. தொன்மச் சுரங்கத்தைத் தோண்டி எடுத்து ஆராயும் முயற்சி தொடர வேண்டும்.

மித் (Myth) எனும் சொல்லுக்கு மேனாட்டறிஞர்கள் பல்வேறு வரையறைகளையும் விளக்கங்களையும் அளித்துள்ளனர். அவற்றைத் தொகுத்துக் காண்பது தொன்மத்தைப் பற்றி அறிவதற்கு இன்றியமையாததாகும்.

‘தொன்மங்கள் இலக்கியங்களின் ஆன்மா’ என அரிஸ்டாட்டில் (Aristotle) குறிப்பிடுகிறார். இ.பி. டெய்லர் (E.B. Taylor) அவர்கள் ‘புராணக் கதைகள் தங்களை உருவாக்கிய மக்களைப் பற்றியும் பயன்படுத்துவோரைப் பற்றியும் கூறுகிறது’ என்கிறார். மானிடவியல் பேரறிஞர் மாலினோவஸ்கி (Malinowski) அவர்கள் ‘புராணக் கதைகளைச் சமுதாயத்தின் தனியுரிமைப் பத்திரம்’ என்கிறார். மர்சியா எலியட் (Marcea Eliade) அவர்கள் மனிதனின் தொடக்க நிலைகளைப் பற்றியும் தோற்றங்களைப் பற்றியும் கூறுவன; புராணக் கதைகளில் காணப்படும் நிகழ்ச்சிகள் மீண்டும் மீண்டும் உலகத்தில் நிகழ்கின்றன’ என்கிறார். லேவிஸ்டிராஸ் (Levistranss) அவர்கள் ‘புராணக் கதைகளை

வாய்பாட்டு முறையில் அமைந்த உண்மை நிகழ்ச்சிகள்’ என்கிறார். போவாஸ் (Boas) அவர்கள் ‘புராண உலகம் கலைக்கப்படுவதாற்காகவே படைக்கப்படுவது போல் தோன்றுகிறது் கலைக்கப்பட்டபின் மீண்டும் படைக்கப்படும் என்பர். மாக்ஸ்முல்லர் (Max Muller) அவர்கள் ‘ஒவ்வொரு புராணமும் ஏதோ ஒரு உண்மையைக் கூற விழைகிறது. அது அடுக்கடுக்காக அமைந்த பல்வேறு செய்திகளால் மறைக்கப்பட்டு கிடக்கிறது. வேண்டாத செய்திகளையெல்லாம் அகற்றிக் கொண்டே வந்தால் வேண்டிய செய்தியாகிய உண்மை இறுதியில் கிடைத்துவிடும்’ என்கிறார். ஆலன் டண்டிஸ் (Alan Dundes) அவர்கள் ‘உலகமும் மனிதனும் தற்போதைய வடிவில் எப்படி வந்து சேர்ந்தனர் என்பதை விளக்குவதற்காகப் புனிதமாக எடுத்துரைக்கப்படும் ஒன்று புராணம்’ என்கிறார். விளாடிமிர் பிராப் (Vladimir Propp) அவர்கள் ‘தெய்வத்தன்மை வாய்ந்தோரையும் தெய்வங்களையும் பற்றிய கதைகள் புராணங்களாகும். அவர்களைப் பற்றிய இக்கதைகளையும் உண்மையென்று மக்கள் நம்புகின்றனர்’ எனக் குறிப்பிடுகிறார். தியோடர்கஸ்டர் (Theoder Guster) அவர்கள் ‘புராணம் என்று ஒரு கதை ஒத்துக் கொள்ளப்பபடுவதற்கு முன் ஒரு சடங்கில் பயன்படுத்தப்பட்டது என்ற நேரடி சான்று தேவைப்படுகிறது’ எனக் குறிப்பிடுகிறார். லூரி ஹங்கோ (Laury Honko) அவர்கள் ‘புராணம் கடவுளரைப் பற்றிய ஒரு கதை: உலகத் தொடக்கம் படைப்பு, அடிப்படைச் சம்பவங்கள் போன்றவை பற்றிய சமய வரலாறு: கடவுளரின் முன் மாதிரியான செயல்களின் விளைவாக உலகம், இயற்கை, பண்பாடு போன்றவை அவற்றின் பகுதிகளுடன் சேர்த்துப் படைக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டு நிலை பெற்றிருப்பதாகும்’ என்கிறார். எட்மண்ட் லீச் (Edmund Leach) அவர்கள் ‘புராணங்கள் கதை வடிவில் உலகத்தைப் பற்றிய வரலாற்றை அளிக்கின்றன: புராணவியல் குறிப்பிடும் பழமை சில வறையறைக்குட்பட்டது: மூதாதையர், தெய்வம் போன்ற கதாபாத்திரங்கள் காலத்தாலும் இடத்தாலும் மிக நெருக்கமானவை: புராணக் கதைகள் மெய்ப்பொருள் மூல ஆராய்ச்சித் தன்மை பற்றியன: வாழ்க்கை பிரபஞ்சம் போன்ற இயல்புகளையும் விளக்குகின்றன’ என விளக்கம் தருகிறார். கேம்ப்பெல் (Camphell) அவர்கள் ‘தொன்மங்கள் உண்மைகளின் புகலிடம், கருத்துக்களின் வாழ்விடம், எண்ணங்களின் வரலாற்றுப் பெட்டகம், நினைவுகளின் சுழிமுனை’ என்கிறார். ஜி. எஸ். கிர்க் (G. S. Kirk) எனும் அறிஞர் பல்வேறு துறை சார்ந்த அறிஞர்களின் மித் (Myth) பற்றிய விளக்கங்களைத் தொகுத்தளிக்கிறார். ஆன்ட்ரூ

லாங்க் (Andrew Lang) அவர்கள் தோற்றம் பற்றிய காரணகாரிய விளக்கக் கதை என்கிறார். ஜேன் ஹாரிசன் (Jane Harrison) விளைவாக உருவாக்கப்பட்டது 'மித்' என்கிறார். குளுக்ஹோகன் (Clude Kluckhohn) அவர்கள் 'மனதின் பட்டத்தைத் தணிப்பதற்காகச் செய்யப்படுகின்ற சடங்கிற்கு இணையாகத் தோன்றியது 'மித்' என்கிறார். உளவியல் பேரறிஞர் சிக்மண்ட் பிராய்டு (Signmund Frend) அவர்கள் 'நனவிலி மனத்தின் அச்சங்கள், ஆசைகள் ஆகியவற்றின் வெளிப்பாடு 'தொன்மங்கள்' என்கிறார். மற்றொரு உளவியல் பேரறிஞர் யுங் (Jung) அவர்கள் 'கூட்டு நளவிலி மனத்தின் வெளிப்பாடு புராணங்கள்' என்கிறார். 'சமூக ஒழுங்கமைப்புச் சாதனமாக விளங்குவது தொன்மங்கள்' என ரெட்கிளிப் பிரௌன் (Redcliffe Brown) குறிப்பிடுகிறார். வில்லியம் பாஸ்கம் (William Bascor) அவர்கள் Myth, Legend, Folktale ஆகியவற்றைப் பல பண்புகளின் அடிப்படையில் வேறுபடுத்தி, அட்டவணையிட்டுக் காட்டியுள்ளார்.

| வகைகள் | Myth | Legen | Folktale |
|---|---|---|---|
| தொடக்க மரபு | இல்லை | இல்லை | உண்டு |
| இரவு நேரத்தில் சொல்லல் | கட்டுப்பாடு இல்லை | கட்டுப்பாடு இல்லை | கட்டுப்பாடு உண்டு |
| நம்பிக்கை | உண்மையென நம்புதல் | உண்மையென நம்புதல் | கற்பனையென நம்புதல் |
| பின்புலம் | இடமும் காலமும் பின்புலமாக இருத்தல் | இடமும் காலமும் பின்புலமாக இருத்தல் | இடமும் காலமும் பின்புலமாக அமையாது (ஒரு ஊரில் ஒரு காலத்தில் என்றிருக்கும்) |
| 1. காலம் | பண்டைய காலம் | சமீப இறந்த காலம் | குறிப்பிட்ட காலம் இல்லை |
| 2. இடம் | பண்டைய உலகம் அல்லது வேறு உலகம் | இன்றுள்ள உலகம் | குறிப்பிட்ட இடம் இல்லை |
| மனப்பான்மை | புனிதமானது | புனிதமானது அல்லது சமயச்சார்பற்றது | சமயச் சார்பற்றது |
| கதா பாத்திரம் | மனிதரல்லாதது | மனிதக் கதாபாத்திரம் | மனிதன், மனிதன் |

| | | | |
|---|---|---|---|
| | | | அல்லாத கதாபாத்திரம் |

Myth என்பது தொன்மம் அல்லது புராணக் கதைகள் என்றும் Legend என்பது பழ மரபுக் கதைகள் என்றும் Folktale என்பது நாட்டுப்புறக் கதைகள் என்றும் மொழிபெயர்க்கப்படுகின்றன. இம் மூன்றிற்குமுள்ள நுண்ணிய வேறுபாடு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. ஒரு மாதிரியான கதை ஒரு சமூகத்தின் நாட்டுப்புறக் கதையாகவும் மற்றொரு சமூகத்தில் பழமரபுக் கதையாகவும் வேறொரு சமூகத்தில் புராணக் கதையாகவும் அமைவது உண்டு. புராணங்களுக்கும் நாட்டுப்புறக் கதைக்குமுள்ள வேறுபாட்டை மெலிட்டின்ஸ்கி குறிப்பிடுகிறார்.

புராணம் என்பதற்குப் பழமை என்று பொருளாகும். ஒரு சமுதாயத்தின் கூட்டு முயற்சியால் உருவாகி அச்சமுதாய மக்களின் அண்டத் தோற்றம் பற்றிய கருத்துக்களையும் மீமியல்பு இயல்புகளையும் விளக்குவது புராணம் என்பர். கடவுள், படைப்பு பற்றிய நிகழ்ச்சிகளுக்கு காரணம், காரியம் கற்பித்தலே முதல் நோக்கமாக இருந்திருக்கிறது. அரும் பெருஞ் செயல்கள் செய்தவர்களைக் கடவுளாக்கிக் காட்டினார்கள் என்ற கருத்து தொன்மையானதாகும். எல்லாப் புராணக் கதைகளும் வானத்துக் கொள்கைகளை விளக்குகின்றன. உள்ளுணர்வால் காணும் நடப்பு நிலையை மிக நெருக்கமாகச் சொல் வழியில் வடித்து அணுகி அறிவதற்குப் புராணக்கதை ஒரு நல்ல கருவியாகும். கடவுளர்கள், தேவர்கள், விலங்குகள் ஆகிய பல்வகை உயிரினங்களையும் பிணைத்து இயக்குகின்ற பழமையான கதைகளையே புராணம் அடித்தளத்திலுள்ள எண்ணங்களை மையமாகக் கொண்டவை. அத்தகைய புராணக்கதை அன்று முதல் இன்று வரை வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. அறிவியல் வளர்ச்சியில்லாத காலத்தில் மனித வாழ்வில் அனுபவித்த முரண்பாடுகள், விந்தைகள், சிக்கல்கள் ஆகியவற்றுக்குத் தீர்வு காணப் பயன்படுத்திய கருவி புராணக் கதைகளாகும். புராணக் கதைகள் தோன்றிய காலத்திலிருந்து பல்வகை உருமாற்றம் பெற்றிருப்பதையும் காண்கிறோம். பெரும்பாலான புராணங்களில் அண்டத் தோற்றம் பற்றிய செய்திகளே மையமாக உள்ளது. அண்ட வளர்ச்சியில் பல ஊழிக்காலம் பற்றிய குறிப்புக்கள் காணக்கிடக்கின்றன. இயற்கை நிகழ்வுகளுக்குத் தெய்வீகப் பண்பு சுட்டுதலையும் புராணங்களில் காணலாம். புராணக் கதைகளின் தோற்றத்திற்குக் காரணம் மொழிகளின் நோய் என மாக்ஸ்முல்லர் குறிப்பிடுகிறார். சொற்களின் மூலப் பொருண்மை மறைந்து இயற்கையின் நிகழ்வுகளுக்கு விந்தையான

கருத்தாக்கங்கள் உருவாகிப் புராணங்களாகிவிட்டன என்கிறார் மாக்ஸ்முல்லர். மொழியியல் நிகழ்வுகளிலிருந்து புராணத்தை விளக்குகிறார். புராணங்கள் புதிதாய் கண்டு பிடிக்கப்பட்டவை அல்ல. மக்களின் அகத் தூண்டுதலால் உருவாகியவை' கூட்டுக் கற்பனையாலும் கூட்டு அனுபவத்தாலும் தோன்றியவை.

காலத்தின் கோலத்தினால் கருவாகி வளருகின்றன. சடங்குகள் புராணங்கள் தோன்றுவதற்குக் தோற்றுவாயாக அமைந்தன. தனிப்பட்டவரின் அனுபவம் கனவு என்றால் சமுதாயக் கனவு புராணங்களாகும். கனவுகளின் மறுமலர்ச்சியாகத் தொன்மங்கள் உருவாகின்றன. ஆன்மீக உலகில் குறிப்பிடத்தக்க உண்மைகளையும் நுண்மைகளையும் புராணங்கள் தன்னுள் தேக்கி வைத்துள்ளன எனலாம். சமயத்தின் ஆழ்ந்த நோக்கு, அடிப்படைக் கருத்துக்கள், புராணங்களில் தோய்ந்து கிடக்கின்றன. சமயங்களின் படிமங்கள் தொன்மம் எனும் மொழி வாயிலாக புலப்படுத்துகின்றது. எது தொன்றுதொட்டு இன்றுவரை பரவியிருக்கிறதோ அதுவே புராணம் என வாயுபுராணம் கூறுகின்றது.

புராணங்கள் தொன்மை வாய்ந்தவையாக இருப்பினும் அவை பற்றிய ஆய்வு பிற்காலத்தில்தான் தொடங்கப்பட்டது எனக் கூறலாம். பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளில் பெர்சியாவில் புராணக்கதை ஒழுக்க உண்மைகளையும் இயற்கை பற்றிய உண்மைகளையும் வெளிபடுத்தும் உருவகக் கதைகள் என்று கூறினர். பதினேழாம் நூற்றாண்டில் தத்துவலியல் என்று கூறினர். பதினேழாம் நூற்றாண்டில் தத்துவவலியியல் கோட்பாடுகளால் பொருள் விளக்கம் செய்ய முற்பட்டனர். புராணங்கள் பல நூற்றாண்டுகட்கு முன்பே தோன்றி வளர்ந்து வந்திருப்பினும், பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் தான் புராணங்கள் பற்றிய ஆய்வு முகிழ்க்கத் தொடங்கியது. வட மொழியிலிருந்து தமிழில் புராணங்கள் மொழி பெயர்ப்புத் தொடங்கியது. இந்தியப் புராணங்களை மேலை நாட்டு புராணங்களுடன் ஒப்பிட்டு ஆராயும் ஆய்வு தொடக்கம் பெற்றது. ஜேக்கப் கிரீம் (Jacob Grimm) புராணங்களை மொழியியல் அடிப்படையில் ஆராயத் தொடங்கினார். புராணவியல் பள்ளியே (Mythological School) உருவானது குறிப்பிடத் தக்கது. புராணவியல் பள்ளியை ஒப்பியல் பள்ளி (Comparative School) என்றும் இண்டிக் பள்ளி (Indic Scool) உன்றும் கூறுவர். ஜேக்கப் கிரீமின் கருத்துக் கோட்பாடுகளை மாக்ஸ்முல்லர் ஒரு பள்ளியாகவே உருவாக்கிவிட்டார். ஜேக்கப் கிரீம் மொழியியல் பயன்படுத்திய ஒப்பியல் ஆய்வை நாட்டுப்புற இயலுக்கு பயன்படுத்தினார். தொல் வடிவங்களை (Proto Fore) ஆராய்ந்ததோடு புராணவியல்

படைப்புகளையும் ஆராய்ந்தார். மாக்ஸ்முல்லர் (Maxmuller) மொழியையும் மக்களின் எண்ண வளர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டு நான்கு கட்டமாக பகுக்கின்றனர்.

i) அடிக்கருத்தியல் காலம் (Thematic Period)

ii) கிளை மொழிக்காலம் (Dialectic Period)

iii) புராணக்காலம் (Mytholocical Period)

iv) பொதுஜன ரஞ்சகக் காலம் (Popular Period)

பழங்கால மனிதன் பயன்படுத்திய சொற்களுக்குக் காலப்போக்கில் பொருள் மாற்றம் ஏற்பட்டுப் புராணங்கள் தோன்ற வாய்ப்பு ஏற்பட்டது. இப்பள்ளி உருவானதன் விளைவாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் புராணவியல் கோட்பாடு ஒன்று உருவாகியது குறிப்பிடத்தக்கது.

புராணங்களைப் பண்பாட்டின் உயர்நிலையைக் குறிக்கும் ஒன்றாகப் பதினெட்டாம் நூற்றாண்டில் புராணவியல் ஆய்வாளர்கள் கருதினர். மதத் தத்துவத்தில் புராணம் மிக இன்றியமையாத கூறு என்ற நிலையை அடைந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் கோலாரோஹிம், ரெய்க், ∴பிராவ் ராபர்ட்சன் ஆகியோர் புராணங்களுக்கும் சடங்களுக்குமுள்ள உறவை ஆராய்ந்து நிறுவினர். இதன் விளைவாகப் புராணச் சடங்குக் கோட்பாடு (Myth-Ritual Theory) உருவானது. புராணக் கதைகளின் தோற்றத்திற்குக் காரணமாகச் சடங்குகளை மீட்டுருவாக்கம் செய்யும் ஆய்வில் புராணவியல் ஆய்வாளர்கள் ஈடுபட்டனர். இக்கோட்பாடு உருவாக பிரேசரின் ‘கோல்டன் போ’ என்ற நூல் காரணமாக அமைந்தது எனின் மிகையல்ல.

பென்பே (Benfey) இடமாற்றக் கொள்கையொன்றை (Migration Theory) உருவாக்கினார். இக்கொள்கையின் அடிப்படையில் கதைகளின் தோற்றம், வரலாறு பரவிய நாடுகள் முதலியவற்றை ஆராய்ந்தனர். இடப்பெயர்ச்சி குறித்த புராணக் கதைகளை ஆராயும் ஆய்வு வளர்ச்சி பெற்று வருகிறது. புராணக் கதைகள் மூலம் இடப்பெயர்ச்சி பற்றி அறிகிறோம். தமிழகத்தில் வழங்கும் இத்தகைய புராணக் கதைகள் மூலம் இடப்பெயர்ச்சிக்கான காரணங்கள் பற்றியும் இடம் பெயர்ந்து செல்லும் போது தெய்வங்களையும் தங்களுடன் எடுத்துச் செல்வதையும் காண்கிறோம். தெய்வத்தின் உதவியால் வாழுமிடங்களைப் பெருக்கிக் கொண்டதையும் இப்புராணக் கதைகள் மூலம் அறிகிறோம்.

இடம் பெயர்வுக் கோட்பாட்டினால் பின்னிஸ் பள்ளியும் (Finnish School) வரலாற்றுப் புவியியல் (Historical Geographical Theory) கோட்பாடும் தோன்ற வாய்ப்பு ஏற்பட்டது.

இருபதாம் நூற்றாண்டில் புராணங்களைப் பல்துறை நோக்கில் ஆராயத்தலைப்பட்டனர். புராணங்களை மானிடவியல் நோக்கில் ஆராயத் தொடங்கினார். அவ்வாறு ஆராய்ந்த ஆண்ட்ரூஸ்லாங்க் (Andrews Lang) மாக்ஸ்முல்லரின் கோட்பாட்டை மறுக்கின்றார். தொன்மைப் புராணங்கள் இயற்கைக் கூறுகளையும் பிற்காலப் புராணங்கள் வரலாற்று நிகழ்ச்சிகளையும் பண்பாட்டு மரபுகளையும் பிரதிபலிக்கின்றன என்கிறார். சிக்மண்ட் பிராய்டு (Sigmund Frand) அடிமனத்தைப் பற்றிய ஆய்வுக்குப் புராணக்கதைகள், தேவதைக் கதைகள் விலக்குகள் முதலியவற்றை ஆதாரமாகக் கொண்டார். ஒடிபஸ் மனப்பாங்கினை (Oedipus Complex) ஆராய, புராணக் கதைகளை எடுத்தாண்டார். நாட்டுப்புற வழக்காறுகளையும் புராணக் கதைகளையும் கனவுகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்ந்தார். இருபதாம் நூற்றாண்டில் புராணவியல் பற்றிப் பல கோட்பாடுகள் உருவாகி, அதனடிப்படையில் ஆராயப் பெற்று வருகின்றன. இருபதாம் நூற்றாண்டில் நாட்டுப்புறவியலில் திருப்பு முனையாகக் கருதப்படும் கோட்பாடு அமைப்பியல் கோட்பாடு (Structural Theory) ஆகும். புராணக் கதைகளைப் பொறுத்த மட்டில் லெவிஸ்ட்ராஸின் (Levi Strauss) அமைப்பியல் ஆய்வு ஒரு திருப்பு முனையாக அமைந்துவிட்டது எனலாம். புராண ஆய்வில் தீர்த்தவுடன் புராணங்களைப் பற்றிய கோட்பாடு உருவாக்கவும் துணையாக உள்ளது. இருபதாம் நூற்றாண்டில் புராணங்களைப் பற்றிய பல்துறை ஆய்வும் (interdisciplinary Study) கோட்பாட்டு ஆய்வும் (Theory Oriented) வளரத் தலைப்பட்டு விட்டன எனக் கூறலாம்.

தமிழிலுள்ள புராணங்களை மக்களிடையேயுள்ள வாய்மொழிப் புராணங்கள் (Oral Purans), எழுத்திலக்கிய புராணங்கள் (ஸ்தல புராணங்கள்) எனப் பகுத்து ஆராயலாம்.

நாட்டுப்புற மக்கள் சூரிய கிரகணம், சந்திர கிரகணம், அமாவாசை, பௌர்ணமி ஆகிய நிகழ்வுகளுக்கான காரணம் குறித்துத் தங்கள் வாழ்க்கை அனுபவங்களின் அடிப்படையில் சிந்தித்துள்ளனர். வானத்தை ஆணாகவும், பூமியைப் பெண்ணாகவும் கருதுகின்றனர். பௌர்ணமியை வாழ்வின் குறியீடாகவும் அமாவாசையைச் சாவின் குறியீடாகவும் கருதுகின்றனர். சந்திரனின் இறப்பு அமாவாசையாகவும் சந்திரனின் மறுபிறப்பு பௌர்ணமியாகவும் வாய்மொழிப் புராணங்கள்

விளக்குகின்றன. பிறப்பு, இறப்பு என்ற மனித நிகழ்வுடன் பொருத்திக் காண்கின்றனர்.

சூரியனையும், சந்திரனையும் பாம்பு ஒன்று தீண்டிச் சாகடிப்பதால் கிரகணம் நிகழ்வதாகத் தொன்மக் கதை கூறுகின்றது. நல்ல பாம்பு தீண்டுவதாலும், விழுங்குவதாலும் கிரகணம் உண்டாவதாக நாட்டுப்புற மக்கள் நம்புகின்றனர். கிரகண நேரத்தில் உணவு உண்ணக் கூடாது: கருத்தரித்த பெண்கள் கிரகணத்தைப் பார்க்கக் கூடாது என்ற தடையும் உள்ளது. கிரகணம் பற்றி அறிவியல் அறிஞர்கள் வேறு காரணம் கற்பித்துக் கூறுவர்.

மின்னல் மின்னுவதும் இடி இடிப்பதும் காற்று வீசுவதும் மழை பொழிவதும் இயற்கையின் நிழ்வுகளாகும். இடியைக் கணவனாகவும் மின்னலை மனைவியாகவும் காற்றும் மேகமும் பெண்ணின் பெற்றோர்களாகத் தொன்மத்தில் உருவகிக்கப்படுகின்றன. மழைக்காற்று மேகத்தின் கணவனாகவும், மின்னல் தந்தையாகவும் தொன்மங்களில் உருவகிக்கப்படுகின்றன.

நாட்டுப்புற மக்கள் வானவில்லைக் கடவுளின் மந்திர வில்லாக நம்புகின்றனர். மழை அதிகமாகப் பெய்யும் போது இந்த மந்திரவில் தோன்றினால் மழை நின்றுவிடும் எனக் கடவுள் சொன்னதாகப் புராணக்கதை கூறுகின்றது. வானத்தில் கோட்டை கட்டினாலும் சூரியன், சந்திரனைச் சுற்றிக் கோட்டை கட்டினாலும் மழை வரும் என நம்புகின்றனர். மழைத் துளிகளில் சூரிய ஒளி பட்டுப் பிரதிபலிப்பதால் ஏழு வண்ண வானவில் தோன்றுவதாக அறிவியலார் விளக்குவர்.

மண்புழு நீருக்கடியிலிருந்து மண்ணை எடுத்து வந்ததாகவும் அதிலிருந்து கடவுள் பூமியைப் படைத்ததாகவும் புராணக்கதை ஒன்று கூறுகிறது.

தமிழ்ப் புராணக்கதையொன்று பாம்பு, யானை, பசு போன்ற விலங்குகள் மலைகளாக மாற்றம் பெற்றன எனக் கூறுகிறது. அரக்கர்கள் பாம்பு, யானை, பசு உருவத்தில் மீனாட்சியை அழிக்க வந்ததாகவும் மீனாட்சியும் சொக்கரும் அவற்றை மலைகளாக மாற்றி விட்டார் என்றும் புராணக் கதையொன்று கூறுகிறது.

உலகில் காணப்படும் பெரும்பாலான தொன்மைக் கதைகள் பறவையின் முட்டையிலிருந்து உலகம் தோன்றியதாகக் கூறுகின்றன. ஆண் (பிரமன்) உலகத்தைப் படைத்தான் என்று புராணக்கதைகள் நிலவுகின்றன. பிரம்மா என்ற தெய்வம் மனிதனையும் மற்ற உயிரினங்களையும் படைத்ததாகப் புராணக் கதைகள் உள்ளன. ஒரு

பறவையின் முட்டையிலிருந்து வானமும் பூமியும் தோன்றியதாகவும் புராணக் கதைகள் உள்ளன.

அனைத்து உயிர்களும் வெள்ளத்தால் அழிக்கப்பட்டுக் கடவுளால் மறுபடியும் படைக்கப்பட்டன எனக் கருத்துருவாக்கம் உள்ள புராணக்கதைகள் (Flood Myths) உலகமெங்கும் காணப்படுகின்றன.

செய்வினை, ஏவல், பில்லிசூன்யம், தீய மந்திரச் சடங்குகள் பேய் பற்றிய கருத்துருவாக்கம் உள்ள புராணக் கதைகள் வழங்குகின்றன.

நாட்டுப்புறத் தெய்வங்கள் மனிதர்களை விட ஆற்றல் வாய்ந்தவை: மனிதப் பண்புகள் உடையவை, இப்பூவுலகில் வாழ்பவை, மனிதரோடு உறவுடையவை, மனித வாழ்வில் சிக்கல் தோன்றும் போது உதவிக்கரம் நீட்டுபவை என்ற கருத்துருவாக்கம் உள்ள புராணக் கதைகள் தமிழில் நிறைய உள்ளன.

## லெவிஸ்ட்டிராஸின் அமைப்பியல் ஆய்வு

அமைப்பியல் ஆய்வு நாட்டுப்புறவியலில் மிகுந்த செல்வாக்குப் பெற்றுக் திகழ்கின்றது. இரஷ்ய நாட்டுப்புறவியலில் அறிஞர் விளாடிமிர் பிராப்பின் அமைபபியல் முறையைத் தொடர்பாட்டு ஆய்வுமுறை' (Syntagmatic) என்பர். லெவிஸ்டிராஸின் முறையை 'வாய்பாட்டு ஆய்வு முறை (Paradigmatic) என்பர். கிரேக்கப் புராணக் கதைகளை இவ்வாய்பாட்டு ஆய்வு முறையைப் பயன்படுத்தி ஆராய்ந்தார். புராணக் கதைகளைப் பகுதி பகுதியாகப் பிரித்து அவற்றை ஒரு தொடர்ப்பாட்டு முறையில் இணைக்கிறார். டாக்டர் சரசுவதி வேணுகோபால் அவர்கள் கம்ப இராமாயண பால காண்டம் கார்முகப் படலத்தில் காணப்படும் புராணக் கதையொன்றை அமைப்பியல் ஆய்வு செய்தார். அது இங்கு தொகுத்து தரப்பட்டுள்ளது.

இப்புராணக் கதையிலுள்ள செய்திகளை வரிசையாகக் காண்போம்.

1. சதி சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்தல் I
2. சிவன் அவளை அடைதல் II
3. தக்கன் தாரை வளர்த்துத் தருதல் I
4. சிவன் சதியை மணம் புரிதல் III
5. சிவன் மறைதல் V
6. தக்கன் அறியாமல சதியை மயக்கி அழைத்துச் செல்லல் II
7. தக்கன் கயிலைக்கு வருதல் I
8. சிவன் அவனை அவமானப்படுத்தல் II

9. அவன் மகளும் அவனை மதியாதிருத்தல் II

10. தக்கன் சிவனை அவமதிக்கும் வகையில் தானே ஒரு யாகம் செய்யத் தொடங்குதல் II

11. செய்தியறிந்து சதி சிவனிடம் அனுமதி பெறல் I

12. தக்கனிடம் செருக்கோடு வருதல் II

13. தக்கன் அவளை அவமதித்தல் II

14. சதியின் சினமும் சாபமும் II

15. சிவனிடம் வந்து தன் கருத்தைத் தெரிவித்தல் I

16. சிவன் வீரபத்திரனைத் தானே உண்டாக்குதல் IV

17. யாகத்தை அழித்தல் II

18. தேவர்களை ஓடச் செய்தல் II

19. யாகாக்கினிகளை அழித்தல் II

20. சிவன் சினந்தணிதல் I

21. வீரபத்திரன் அனைவரையும் அழித்தல் V

22. சதியின் வேண்டுகோள் I

23. சிவன் இடபாரூடராய்த் தோன்றுதல் VI

24. தேவர்களைப் பிழைப்பித்தல் VI

25. அவர்களுக்கு அருள் செய்தல் I

| **மென்மை** | **வன்மை** | **ஆண்-பெண் உறவு** | **ஆண் தானே உயிரை உண்டாக்குதல்** | **மறைவு** | **தோற்றம்** |
|---|---|---|---|---|---|
| **I** | **II** | **III** | **IV** | **V** | **VI** |
| 1. சதி சிவனை நோக்கி தவஞ்செய்தல் | | 2. சிவன் அவளை அடைதல் | | | |
| 3. தக்கன் தாரை வார்த்துக் தருதல் | | 4. சிவன் சதியை மணம் புரிதல் | | 5. சிவன் மறைதல் | |
| | 6. தக்கன் அறியாமல் சதியை மயக்கி அழைத்துச் செல்லல் | | | | |
| 7. தக்கன் கயிலைக்கு வருதல் | 8. சிவன் அவனை அவமானப்படுத்தல் | | | | |
| | 9. அவன் மகளும் அவமானப்படுதல் | | | | |
| | 10. தக்கன் சிவனை அவமதித்துத் தானே யாகஞ் செய்தல் | | | | |

| மென்மை | வன்மை | ஆண்-பெண் உறவு | ஆண் தானே உயிரை உண்டாக்குதல் | மறைவு | தோற்றம் |
|---|---|---|---|---|---|
| I | II | III | IV | V | VI |
| 11. சதி சிவனிடம் அனுமதி பெற்றுப் போதல் | 12. தக்கனிடம் செருக்கோடு வருதல் | | | | |
| | 13. தக்கன் அவளை அவமதித்தல் | | | | |
| | 14. சதியின் சினமும் சாபமும் | | | | |
| 15. சிவனிடம் தன் கருத்தைத் தெரிவித்தல் | | | 16. சிவன் தானே வீரபத்திரனை உண்டாக்குதல் | | |
| | 17. சிவன் யாகத்தை அழித்தல் | | | | |
| | 18. தேவர்களை ஓடச் செய்தல் | | | | |
| | 19. யாகாக்கினிகளை அழித்தல் | | | | |
| 20. சிவன் சினந்தணிதல் | | | | 21. வீரபத்திரன் அனைவரையும் அழித்தல் | |
| | | | | | 23. சிவன் இடபாரூடராய்த் தோன்றுதல் |
| | | | | | 24. தேவர்களைப் பிழைப்பித்தல் |
| 25. சிவன் அருள் செய்தல் | | | | | |

**இப்புராணக் கதையில் உள்ள செய்திகள்**

மென்மை : வன்மை : ஆண்பெண் உறவு : ஆண் மட்டும் உயிரை உண்டாக்கல் : அழிவு : தோற்றம்

இதனைப் பின்வருமாறு உணர்த்தலாம்

I : II : III : IV : V : VI

I, III, V – ஒத்த தன்மையன

II, IV, V – தம்முள் ஒத்தவை

**இப்புராணக்கதை மூலம் உணர்ந்து கொள்ளக்கூடிய செய்திகள்**

1. வலிமைக்கும், வீரத்துக்கும் மக்கள் மிகுந்த மதிப்பு அளித்தனர்.

2. ஆண், பெண் உறவினால் உயிர் தோன்றினாலும் ஆணே உயிரை உருவாக்க முடியும் என்றும் மக்கள் எண்ணியுள்ளனர்.
3. மறையும் உயிர் தோன்றுதலும் தோன்றும் உயிர் மறைதலுமான தத்துவத்தை மக்கள் புரிந்து கொண்டிருந்தனர்.
4. பெண்ணிடம் ஆண்மையும் ஆணிடம் பெண்மையும் உண்டென்று உணர்ந்திருந்தினர்.
5. இறைவனை அருள்வடிவம் என எண்ணாமல் சினமும் அருளும் ஒருங்கே உள்ளவன் என்று எண்ணுதலால் வல்லமை படைத்த அரசனிடம் ஆட்சியில் மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

ஆண் ஆதிக்கமிக்க முடியரசின் கீழ் வாழ்ந்த ஒரு சமுதாய சூழலில் இக்கதை தோன்றியது எனலாம்.

ஆண் ஆதிக்கமிக்க முடியரசின் கீழ் வாழ்ந்த ஒரு சமுதாயச் சூழலில் இக்கதை தோன்றியது எனலாம்.

தமிழ் எழுத்துவடிவப் புராணங்களைப் பற்றி இவண் காண்போம். ‘புராணம்’ என்பது புராதனம் எனும் வட சொல்லின் அடியாகப் பிறந்ததாகும். புராணம் என்பதைப் பழங்கதைகள் என்பதைக் காட்டிலும் வழிவழி வந்த மரபு வரலாறு என்றே கூறுவது பொருத்தமாகும். வடமொழியில் வேதங்களுக்கு அடுத்தப்படியாக புராணங்கள் கருதப்படுகின்றன. புராணங்களுக்கு ஐந்து இலக்கணத்தை குறிப்பிடுவர். அவை சர்க்கம் (சிருடம்) பிரதிசர்க்கம் (அழிந்து மறுபடி உண்டாக்குவது) வம்சம் (தெய்வ பரம்பரை) மன்வந்தரம் (மனுவின் காலம்) வம்சியானு சரிதம் (அரசவம்சங்களின் வரலாறு) முதலியன வடமொழிப் புராணங்களை மகாபுராணங்கள் (18), உப புராணங்கள் (18), அதி புராணங்கள் (18) என மூன்று வகையாகப் பிரிப்பர். தமிழ் இலக்கிய வரலாற்றில் புராணம் எனும் இலக்கிய வகை பெருகியுள்ளது. துமிழ் இலக்கிய நூல்களில் ஆங்காங்குப் புராணம் பற்றிய குறிப்புகள் காணப்படினும் பதினாறாம் நூற்றாண்டிற்குப் பின்னரே முறையாக வளர்ச்சி பெறத் தொடங்கியது. டாக்டர் மாதவன் அவர்கள் எழுத்து வடிவத் தமிழ்ப் புராணங்களை ஆறு வகையாகப் பகுக்கின்றனர்.

i) மகா புராணங்கள்
ii) இதிகாச புராணங்கள்
iii) சிவபுண்ணியம், சிவ தருமம் கூறுவன
iv) ஆண்டவன், அடியார் வரலாறுகள்
v) சாதிப் பெருமை விளக்குவன
vi) ஊர்ச் சிறப்பை எடுத்துரைப்பவை (தல புராணம்)

i) மகா புராணங்கள்

வடமொழியிலுள்ள மகாபுராணங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

ii) இதிகாச அமைப்பிலானவை

கந்தபுராணம், விநாயக புராணம், பாகவதம் போன்றவை இதிகாச அமைப்பிலான புராணங்களாகும்.

iii) சிவ புண்ணியம் சிவதருமம்

மகாபுராணங்களின் ஒரு பகுதியாகவே இவை விளங்குகின்றன. மொழிபெயர்ப்பு நூல்களாகும்.

iv) ஆண்டவன், அடியார் வரலாறு

சைவ, வைணவ அடியார்களைப் பற்றிய புராணங்கள் இவ்வகையைச் சார்ந்தவை.பெரியபுராணம், திருவாதவூர் அடிகள் புராணம், அரிசமய தீபம், திவ்விய சூரி சரிதம் போன்றவைகள் முறையே சைவ, வைணவ அடியார்களைப் பற்றிய வரலாறுகள் ஆகும். இத்தகைய வரலாற்றுப் புராண நூல்கள் பெரிய புராணத்தைத் தொடர்ந்து பல்கிப் பெருகியுள்ளன.

v) சாதிப் பெருமை

சாதிப் பெருமையைப் புகழ்ந்து பாடும் புராணங்கள் பதினேழாம் நூற்றாண்டிலே தோன்றி விட்டன. செங்குந்தர் புராணம், விசுவகர்மா புராணம், குலாலர் புராணம் இவ்வகையைச் சார்ந்தவையாகும்.

vi) ஊர்ச் சிறப்பை எடுத்துரைக்கும் தல புராணங்கள்

ஒரு தலத்திலுள்ள இறைவன் புகழையும், தலத்தின் பெருமையையும் தீர்த்தத்தின் பெருமையையும் கூறி ஸ்தல இறைவனைப் பூசித்து நற்பேறு பெற்றவர்களின் வரலாற்றை விளக்குவது புராணங்கள் வடமொழியைப் பின்பற்றி எழுந்தவை எனினும், தல புராணங்கள் தமிழுக்கே உரியவையாகும். தமிழில் புராணங்கள் என்றாலே ஸ்தல புராணங்களைத்தான் குறிப்பதாகக் கூறுவர். தல புராணங்களில் காவியத் தன்மை பரிந்துரைப்பன. தல புராணங்களில் காவியத்தன்மை மிக்கிருத்தலையும் காணலாம். திருவாலவாயுடையார் திருவிளையாடல் புராணம் தலபுராண இலக்கணங்களமைந்த முதல் நூலாகும். ஞானப்பிரகாசர், எல்லப்ப நாவலர், பரஞ்சோதியார் படைத்த தல புராணங்கள் இலக்கிய வளம் நிறைந்தவை. மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடிய தலபுராணங்கள் குறிப்பிடத் தகுந்தவைகளாகும்.

தெய்வங்களுக்குப் புராணங்கள் தோன்றிய பின்னரே மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலியவற்றின் சிறப்பை உணர்த்தத் தல புராணங்கள் தோன்றின. இறை வழிபாடு, புண்ணிய தலங்களுக்கு செல்லல், தல வரலாறு கேட்டறிதல் மக்களின் கடமைகளாகக் கொண்டு ஒழுகினர். கோயில்களை மையமாகக் கொண்டு தல புராணங்கள் உருவாயின. திருத்தலங்களின் பழமையான வரலாற்றுச் சிறப்புகளைத் தல புராணங்கள் உருவாயின. திருத்தலங்களின் பழமையான வரலாற்றுச் சிறப்புகளைத் தல புராணங்கள் விளக்குகின்றன. ஆழ்வார்களும், நாயன்மார்களும் பாடிய தலச்சிறப்புப் பதிகத்தின் வளர்ச்சியே தல புராணங்களாகும். தல புராணங்களின் மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் இந் நான்கும் சிறப்பாக வலியுறுத்தப் பெறுவனவாகும். பன்னிரு திருமுறைகள் தல புராணங்களின் வித்தாகவும் வேராகவும் அமைந்துள்ளன. தல புராணங்களை பற்றிய ஆய்வு தமிழகத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

கச்சியப்பர் இயற்றிய கந்தபுராணம் சிறந்த நூலாகும். சமய தத்துவம் கூறும் சைவப் புராணங்களில் இதுவே முதலாவதாகும். கந்தபுராணம் ஆறு காண்டங்களாப் பிரிக்கப்பட்டுள்ளது. 1. உற்பத்திக் காண்டம் 2. அசுரக் காண்டம் 3. மகேந்திர காண்டம் 4. யுத்த காண்டம் 5. தேவ காண்டம் 6. தட்ச காண்டம். காண்டங்கள் படலங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. கந்தனின் பிறப்பு, வளர்ப்பு பற்றிவை புராணமாகக் கூறப்பட்டுள்ளன. அண்டத்தின் தோற்றம் விளக்கப்பட்டுள்ளது. அசுர காண்டத்தில் அசுரரின் தோற்றம் கூறப்பட்டுள்ளது. தட்சகாண்டத்தில் முனிவர்களின் தோற்ற வரலாறு விளக்கப்பட்டுள்ளது. முருகப் பெருமானின் தோற்றம் உற்பத்தி காண்டத்தில் கூறப்பட்டுள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற வழிபாட்டு முறைகளும் நோன்புகளும் கந்தபுராணத்தில் இடம் பெற்றுள்ளன. புராண இலக்கியக் கொள்கைகளைக் கந்தபுராணத்தில் காணலாம். சைவ சமயத் தொன்மங்கள் ஊழை அடிப்படையாகவும் கொண்டு விளங்குகின்றன.

புராணங்கள் நாட்டுப்புற இலக்கியமாகவும் வாழ்கின்றன, செவ்வியல் இலக்கியமாகவும் இடம் பெற்றுள்ளன. இவ்விரண்டு வகை புராணங்களையும் தொகுத்து, வகைப்படுத்தி ஆராய வேண்டும். தமிழ்ப் புராணங்களைப் பல்துறை நோக்கில் ஆராய்ந்தால் மக்களது பண்பாடு, பழக்க வழக்கங்கள் முதலானவை புலனாகும். தல புராணங்கள் அனைத்தையும் தொகுத்து ஆராய்ந்தால் சமய சடங்குகளைப் பற்றி அறிவதோடு வரலாற்றுக் குறிப்புகளையும் அறிந்து கொள்ளலாம்.

நாட்டுப்புற மக்களின் உலக நோக்கு பற்றி அறிய புராணங்கள் பெரிதும் துணைபுரிகின்றன. அறிவியல் காலத்துக்கு முற்பட்ட அறிவியலை அறியவும் புராணங்கள் துணையாக உள்ளன. புராணக் கதைகள் சமூகப் பண்பாட்டு வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்யவும் பயன்படும் புராணங்கள் எனும் சுரங்கத்தைத் தோண்டி எடுத்து ஆய்வு செய்வது நம் கடமையாகும்.

**வினாக்கள்**

1. ‘புராணக்கதை’ எனும் சொல்லாக்கம் குறித்து விளக்கம் தருக.
2. லெவிஸ்ட்டிராஸின் அமைப்பியல் ஆய்வு குறித்து விவரி.